# சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசம அபிவிருத்தி திட்டம்

# (2019 - 2030)

## முதலாம் பிரிவு



நகர அபிவிருத்தி அதிகாரசபை
ஆகஸ்ட் 2019

# சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் அபிவிருத்தி திட்டம்

# (2019 - 2030)

முதலாம் பிரிவு

பாரிய நகரம் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு

நகர அபிவிருத்தி அதிகாரசபை

**சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் அபிவிருத்தி திட்டம் (2019 - 2030)– முதலாம் பிரிவு**

© நகர அபிவிருத்தி அதிகாரசபை - இலங்கை (2019)

சகல பதிப்புரிமை கொண்டது. இந்த வெளியீடு நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வெளயிடப்படுகிறது. இந்த வெளியீட்டினைப் பூரணமாக அல்லது ஒரு பகுதியினை வெளயீடு செய்தல் இந்த அதிகார சபையின் முன் அனுமதி இன்றி மீள் வெளயீடு செய்தல், விற்பனை செய்தல், விநியோகம் செய்தல், எழுத்துமூல அனுமதி இன்றி பிரிதி செய்தல் அல்லது நவீன தொழிநுட்ப முறைகளினூடாக இறுவட்டுக்கு உட்படுத்தல் அல்லது விநியோகித்தல் அல்லது வியாபார நோக்கில் பயன்படுத்துதல் மேற்கொள்ளப்படல் கூடாது.

வெளியீடு

நகர அபிவிருத்தி அதிகார சபை - இலங்கை
06 ஆம், 07 ஆம் மற்றும் 09 ஆம் மாடி, "செத்சிரிபாய", பத்தரமுல்ல, இலங்கை.
இனையத்தளம் - www.uda.gov.lk

மின்னஞ்சல் - info@uda.gov.lk
தொலைபேசி இலக்கம் - +94112873637
வெளியீடு – 2019 பெப்ரவரி

சீதாவக்க அபிவிருத்தி திட்டம் (2019 – 2030) பிரதானமாக இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளதுடன் அது முதலாம் பிரிவு இரண்டாம் பிரிவு என வெளியிடப்படும். இதன் முதலாம் பிரிவு இரண்டு உப பிரிவுகளைக் கொண்டுள்ளதுடன் அது முதலாம் பகுதி மற்றும் இரண்டாம் பகுதி என குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு முதலாம் பிரிவின் முதலாம் பகுதி மூலம் அபிவிருத்தி திட்டத்தின் அறிமுகம், பின்னணி ஆய்வு, அபிவிருத்தி திட்டம் ஒன்றின் தேவைப்பாடு தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அதன் இரண்டாம் பகுதியில் மூலம் அபிவிருத்தி திட்டத்தின் தொலைநோக்கு, நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள், கருதுகோள் திட்டம், அபிவிருத்தி உபாயவழிமுறைத் திட்டம் ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன. அபிவிருத்தி திட்டத்தின் இரண்டாம் பிரிவு வேறு ஒரு வெளியீடாக தயார் செய்யப்பட்டுள்ளதுடன் அதில் 2019 – 2030 காலப் பகுதிக்கு செல்லுபடியாகும் காணி மற்றும் கட்டடங்களை அபிவிருதுதி செய்யும் ஒழுங்கு விதிகள் மற்றும் வலயப்படுத்தல் ஒழுங்குவிதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

சீதாவக்க அபிவிருத்தி திட்டம் (2019 – 2030) நகர அபிவிருத்தி அதிகார சபையின் மேல்மாகாண பிரிவு மூலம் தயார் செய்யப்பட்டுள்ளதுடன் அது நகர அபிவிருத்தி அதிகார சபையின் பல்வேறு துறைகளின் வளவாளர்களது ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் பெறப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

***மேற்பார்வைப் பணிகள்***

கலாநிதி ஜகத் முனசிங்க – ***தலைவர் - ந.அ.அ.,*** பொறியியலாளர் எஸ்.எஸ்.பி.ரத்நாயக்க ***பணிப்பாளர் நாயகம் - ந.அ.அ,*** நகர வடிவமைப்புக் கலைஞர் கே.டீ.சந்திரதாச ***முன்னாள் மேலதிக பணிப்பாளர் நாயகம் - ந.அ.அ,*** நகர வடிவமைப்புக் கலைஞர் டீ.எம்.பீ.ரணதுங்க ***பிரதிப் பணிப்பாளர் நாயகம் - ந.அ.அ,*** நகர வடிவமைப்புக் கலைஞர் ஜனக் ரணவீர ***பணிப்பாளர் (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு)*** – ந.அ.அ, நகர வடிவமைப்புக் கலைஞர் வை.ஏ.ஜீ.கே.***குணதிலக்க பணிப்பாளர் (மேல் மாகாண பிரிவு)*** – ந.அ.அ, நகர வடிவமைப்புக் கலைஞர் லலித் ஜயரத்ன ***பணிப்பாளர் (கிழக்கு மாகாணம்) – ந.அ.அ***

***திட்டமிடல் குழு***

தமரா ஜயகொடி ***பிரதிப் பணிப்பாளர் - திட்டமிடல் (மேல் மாகாணப் பிரிவு) – ந.அ.அ,*** பி.மாதவி கொத்தலாவல ***திட்டமிடல் உதவியாளர் (மேல் மாகாணப் பிரிவு) – ந.அ.அ,*** எச்.டப்ளிவ்.இந்துனில் சந்தருவன் சில்வா ***உதவித் திட்டமிடல் உத்தியோகத்தர் (மேல் மாகாணப் பிரிவு) – ந.அ.அ,*** ஏ.ஜீ.திஷ்னி தாரிகா ***உதவித் திட்டமிடல் உத்தியோகத்தர் (மேல் மாகாணப் பிரிவு) – ந.அ.அ.***

***உதவிக் குழுக்கள்***

அத்துல சமரசிங்க ***திட்டமிடல் உத்தியோகத்தர் (மேல் மாகாணப் பிரிவு) – ந.அ.அ,*** நதீபா ஜயமாலி பல்லியகுருகே ***திட்டமிடல் உத்தியோகத்தர் (மேல் மாகாணப் பிரிவு) – ந.அ.அ.*** மற்றும் சுற்றாடல் மற்றும் நிலத்தோற்றப் பிரிவு – ந.அ.அ., புவியியல் மற்றும் தகவல் முறைமைப் பிரிவு – ந.அ.அ., ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு – ந.அ.அ

## நன்றியுரை

சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்கான அபிவிருத்தி திட்டத்தினைத் தயாரித்தல் நகர அபிவிருத்தி அதிகார சபையின் மேல் மாகாணப் பிரிவு மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்திப் பிரிவு ஆகியன மேற்கொள்ளப்பட்ட ஒரு கருத்திட்டம் ஆகும். இத் திட்டத்தினை தயாரிப்பதில் தேவையான அரச பங்களிப்பு, வழிகாட்டல், தேவையான வசதிகள் மற்றும் ஒத்துழைப்பினை வழங்கிய கௌரவ பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர், பாட்டலி சம்பிக ரணவக்க அவர்களுக்கு நகர அபிவிருத்தி அதிகார சபை சார்பில் விசேட நன்றிகளைத் தெரிவிப்பதுடன் பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் அவர்கள் இத் திட்டத்தை வெற்றிகரமாகத் தயார் செய்வதற்கு பல்வேறு வழிகளில் காட்டிய ஒத்துழைப்பிற்காக எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

சீதாவக்க பிரதேச சபையின் கௌரவ தலைவர், ஜயந்த ரோஹன அவர்கள் உள்ளிட்ட பிரதேுச சபை உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், ஹங்வெல்ல மற்றும் பாதுக்க பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பிரதேச செயலகங்களின் பணிக்குழாத்தினர்கள் இத் திட்டத்தை தயாரிக்கையில் காட்டிய ஒத்துழைப்பினை நன்றியுடன் நினைவு கூருவதுடன் இத் திட்டத்தை வெற்றிகரமாகத் தயாரிப்பதற்கு அனைத்து அரச மற்றும் அரச சார்பற்ற உத்தியோகத்தர்கள் எமக்கு வழங்கிய ஒத்துழைப்பு பேருதவியாக அமைந்தது என்பதை ஞாபகப்படுத்துகின்றோம்.

இத் திட்டத்தை தயாரிப்பதில் தனது கால நேரம் மற்றும் விசேட நிபுணத்துவ அறிவினை வழங்கிய நகர அபிவிருத்தி அதிகார சபையின் கௌரவ தலைவர் ஜகத் முனசிங்க அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் திரு எஸ்.எஸ்.பி.ரத்நாயக்க, முன்னாள் மேலதிக பணிப்பாளர் நாயகம் திரு கே.ஏ.டீ.சந்திரதாச, பிரதிப் பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்) திரு.டீ.எம்.ரணதுங்க, ஆராய்ச்சி அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் திரு ஜனக் ரணவீர, கிழக்கு மாகாண பணிப்பாளர் திரு லலித் விஜயரத்ன மற்றும் மேல் மாகாணப் பிரிவின் பணிப்பாளர் திரு வை.ஏ.ஜீ.கே.குணதிலக்க ஆகியோருக்கு எமது விசேட நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். மேலும், இத் திட்டத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வதற்காக எப்பொழுதும் ஒத்துழைப்பு வழங்கிய பிரதிப் பணிப்பாளர் திருமதி தமரா ஜயகொடி அவர்களுக்கும் அபிவிருத்தி திட்டமிடல் பிரிவின் உதவித் திட்டமிடல் உத்தியோகத்தர் செல்வி சமிந்தி நிசன்சலா அவர்களுக்கும் திட்டமிடல் குழுவின் விசேட நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

அவ்வாறே வெளிக்கள ஆய்வுப் பணிகளை வெற்றியடையச் செய்வதற்காக ஒத்துழைப்பு வழங்கிய மேல் மாகாணப் பிரிவின் திட்டமிடல் உத்தியோகத்தர் திரு சமரசிங்க, இத் திட்டத்தை தயாரிப்பதற்காக பல்வேறு வழிகளில் ஒத்துபைப்பு வழங்கிய றகர அபிவிருத்தி அதிகார சபையின் அபிவிருத்தி திட்டமிடல் பிரிவு, புவியியல் தகவல் முறைமைப் பிரிவு மற்றும் சூழல் நிலத்தோற்ற மற்றும் வசதிகள் முகாமைத்துவப் பிரிவு உள்ளிட்ட எமக்கு ஒத்துழைப்பு வழங்கிய ஏனைய அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் எமது விசேட நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இறுதியாக இத் திட்டத்தை அச்சிடப்பட்ட ஒரு பிரதியாக வெளியிடுவதற்கு கணணி ஒத்துழைப்பினை வழங்கிய மேல் மாகாண பிரிவின் செல்வி அனுஷ்கா ஹர்ஷனி அபேகோன் உள்ளிட்ட ஏனைய அனைத்து ஊழியர்களுக்கும் எமது விசேட நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

## கௌரவ அமைச்சரின் முன்னுரை



1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் கீழ் நகர அபிவிருத்தி அதிகார சபை தாபிக்கப்பட்டதுடன் கடந்த 40 ஆண்டு காலமாக நகர அபிவிருத்தி அதிகார சபையானது நகர பிரதேசங்களில் திட்டமிடப்பட்ட நகர அபிவிருத்திக்காக பங்களிப்புச் செய்கிறது. தற்போது நகர அபிவிருத்தி அதிகார சபை தனது பயணப் பாதையின் மற்றுமொரு திருப்புமுனையினைத் தாண்டி விரிவான அபிவிருத்தி திட்டங்களைவ வட பிராந்தியத்தின் அனைத்து நகர அபிவிருத்திப் பிரதேசங்களுக்காகவும் தாயரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த அபிவிருத்தி திட்டத்தின் மூலம் சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்கான ஓர் ஒன்றிணைந்த அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. சீதாவக்க நகரம் வர்த்தக மற்றும் நிர்வாக ரீதியாக கொழும்பு மாவட்டத்தின் ஒரு முக்கிய நகரம் என்பதுடன் அது பாரிளவு எண்ணிக்கையினருக்கு சேவை வழங்குகிறது. மேலும் சீதாவக்க மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களுக்குச் சொந்தமான இயற்கைச் சூழல் முறைமை மற்றும் தொலல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் போன்ற வளங்களை அபிவிருத்தி செய்வதற்காகப் பயன்படுத் முடியும்.

சீதாவக்க பிரதேசத்திற்கு நாட்டின் ஏனைய பிரதேசங்களுடன் இணைந்ததாக பொருத்தமானவாறு பௌதிக் அபிவிருத்திக்குத் தேவையான வசதிகளை வழங்குவதே எமது முயற்சி ஆகும்.

நான் அறிந்த வகையில் அபிவிருத்தி திட்டத்தை தயாரிப்பதற்காக தொழில்சார் நிபுணர்கள், விசேட நிபுணர்கள், தரப்பினர்கள் மற்றும் பிரசைகளின் விரிவான ஆலோசனையுடன் நவீன உபாய வழிமுறைகளைப் பயன்படுத்தி சிறந்த தொழிநுட்ப முறைகள் மற்றும் புத்தாக்க பிரவேசம் ஆகியன கிடைக்கப் பெற்றுள்ளன. அதன் பிரகாரம் தலைவர் அவர்கள், பணிப்பாளர் நாயகம், திட்டமிடல் குழு மற்றும் பல்வேறு வழிகளில் இப் பணியினை வெற்றியடையச் செய்வதற்கு துணை புரிந்த நகர அபிவிருத்தி அதிகார சபையின் அனைத்து உத்தியோகத்தர்களதும் சேவையை நான் பாராட்டுகின்றேன். தொடர்ந்தும் ஏற்புடைய உள்ளுராட்சி நிறுவனங்கள், அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்கள், பொது மக்களின் ஒத்துழைப்பு மற்றும் பங்களிப்பினை சம அளவில் இப் பணிக்கு ஈடுபடுத்துவதன் மூலம் சீதாவக்க அபிவிருத்தி திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த முடியும்.

பாட்டலி சம்பிக ரணவக்க
பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்

## கௌரவ தலைவர் அவர்களின் முன்னுரை



தற்போது நகர அபிவிருத்தி அதிகார சபை இலங்கையில் நகரத் திட்டமிடல்களைத் தயாரிப்பதற்கு மற்றும் அத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக உள்ள பிரதானமான நிறுவனம் என்பதுடன் நகர சூழலைத் தரமானதாக முகாமை செய்யும் பொறுப்பும் அதற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஒன்றிணைந்த திட்டமிடலைத் தயாரித்தல் மற்றும் அதனை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நகரப் பிரதேசங்களினதும் மக்களதும் பொது நல்லிருப்பினை மேம்படுத்தற்காகவும் ஒழுங்குபடுத்துவதற்காகவுமே 1978 ஆம் ஆண்டு இந்த நிறுவனத்தை தாபிப்பதற்கான குறிக்கோளாக காணப்பட்டது.

1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் (II ஆம் பகுதி 8 ஆம் பிரிவு 8 அ [I]) பிரகாரம் அமைச்சரால் நகர அபிவிருத்திப் பிரதேசங்களாக பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் அபிவிருத்தி திட்டங்களைத் தயாரித்தல் ஓர் அத்தியவசிய விடயமாக உள்ளது. சீதாவக்க திட்டமிடல் அதிகாரப் பிரதேசத்திற்காக தயாரிக்கப்பட்ட அபிவிருத்தி திட்டத்தை தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் ஆகியன அவ் ஏற்பாடுகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத் திட்டமிடல் அதிபாரப் பிரதேசம் நகர அபிவிருத்திப் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டதன் விளைவாக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் சீதாவக்க மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களின் பௌதிக, பொருளாதார, சமூக மற்றும் சூழல் காரணிகள் கவனத்திற் கொள்ளப்பட்டு சீதாவக்க பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்கான அபிவிருத்தி திட்டம் (2019 – 2030) தயார் செய்யப்பட்டுள்ளது.

இத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது எமது பயணம் இலகுவானது அல்ல என்பதுடன் சவால்கள் நிறைந்த, நிச்சயமற்ற தன்மைகளைக் கொண்ட, முரண்பாடான எதிர்பார்ப்புக்களினால் மாசடைந்த இடர்கள் நிறைந்த ஒரு பயணம் என்பதை நாம் மறக்கவில்லை. நகர அபிவிருத்தி அதிகார சபை நடைமுறையில் தேவையான முறைமைகள், கருவிகள் மற்றும் திறமுறைகளில் பூரணத்துவம் பெற்ற சவால்களை எதிர்கொள்வதற்கும் நிச்சயமற்ற தன்மைகளுக்கு ஈடுகொடுப்பதன் மூலம் இயற்கை அழகு நிறைந்த சீதாவக்க அதிகாரப் பிரதேசத்தை சூழல் நட்புறவான சுபீட்சம் நிறைந்த நகரமாக மாற்றுவதற்கு திடசங்கற்பம் கொள்ளப்பட்டுள்ளது.

இப் பாரிய பணியினை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக அர்ப்பணிப்புடன் பாடுபட்டு பணியாற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடல் குழு மற்றும் பல்வேறு வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பதற்கு இதனை ஒரு சந்தர்ப்பமாகக் கருதுவதுடன் இத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இதே போன்றதொரு ஒத்துழைப்பினை எதிர்காலத்திலும் எதிர்பார்க்கின்றேன்.

**கலாநிதி ஜகத் முணசிங்க**

தலைவர்

நகர அபிவிருத்தி அதிகாரசபை

## சீதாவக்க பிரதேச சபையின் கௌரவ தலைவர் அவர்களின் வாழ்த்துச் செய்தி



நகர அபிவிருத்தி அதிகார சபையினால் சீதாவக்க பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்காக அபிவிருத்தி திட்டம் ஒன்று தயாரிக்கப்படல் தொடர்பாக எனது நன்றிகளை ஆரம்பத்தில் தெரிவிப்பதுடன் அத் திட்டத்தின் மூலம் சீதாவக்க அதிகாரப் பிரதேசத்திற்கே உரிய பண்புகள் பாதுகாக்கப்படும் விதத்தில் விசேடமாக சூழல் வளங்களைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சி மற்றும் அதன் மூலம் பிரதேச மக்களுக்கு உயர்ந்தபட்ச நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியுமானவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை பாராட்டத் தக்கது ஆகும்.

இந்த அபிவிருத்தி திட்டத்தை தயாரிக்கும் போது பொதுமக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி எம்மால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகள் மற்றும் கருத்துக்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டமையினை நான் பாராட்டுவதுடன் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக 2030 ஆம் ஆண்டளவில் சீதாவக்க நகரம் மேல் மாகாணத்தில் உயர்வான ஓர் அபிவிருத்தியை எய்திய தன்னிறைவடைந்த ஒரு நகரமாக மாற்றமடைவதற்கு பிரார்த்திக்கின்றேன்.

ஜகத் ரோஹண
தலைவர்
சீதாவக்க பிரதேச சபை

## முன்னுரை

1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 3(i) மற்றும் 3 (ii) ஆகிய பிரிவுகளின் கீழ் சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் நகர அபிவிருத்திப் பிரதேசமாக 1998.01.19 ஆம் திகதிய 1011/4 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் பிரதேச மக்களுக்கு சுற்றாடல், சமூக, பொருளாதார மற்றும் பௌதிக ரீதியாக நிலைபேறான ஓர் அபிவிருத்தியை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இந்த அபிவிருத்தி திட்டம் 2019 – 2030 வரையான காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்டுள்ளதுடன் 2018 ஆம் ஆண்டு வரை பிரதேசத்தை அண்டிய தகவல்கள் இதற்காக பயன்படுத்தப்பட்டது.

இந்த அபிவிருத்தி திட்டம் முதலாம் மற்றும் இரண்டாம் பிரிவுகள் என இரண்டு பிரிவுகளை உள்ளடக்கி உள்ளதுடன் முதலாம் பிரிவு முதலாம் பகுதி மற்றும் இரண்டாம் பகுதி என இரண்டு பகுதிகளை உள்ளடக்கி உள்ளது. அதன் முதலாம் பகுதி மூன்று அத்தியாயங்கள் மூலம் தெளிவு படுத்தப்பட்டுள்ளதுடன் அதன் போது முதலாம் அத்தியாயம் மூலம் அபிவிருத்தி திட்டம் மற்றும் அதனைத் தயாரித்தல் தொடர்பாக இந்த அதிகார சபைக்குரிய அதிகாரங்கள், திட்டமிடல் செயன்முறையின் படிமுறைகள், திட்டத்தை தயாரிப்பதற்காக பங்களிப்புச் செய்த தரப்பினர்கள் மற்றும் ஆலோசனை நிறுவனங்கள் தொடர்பான விபரங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அபிவிருத்தி திட்டத்தின் இரண்டாம் அத்தியாயமான அடிப்படை ஆய்வின் மூலம் இனம் காணப்பட்ட திட்டிடல் பிரதேுசத்தின் பௌதிக அமைவிடம், பிரதேசத்திற்குரிய தேசிய மற்றும் வலயப்படுத்தல் தொடர்புகள், முக்கியத்துவம் தொர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது. ஆய்வுப் பிரதேசத்தின் பௌதிக, சமூக, சுற்றாடல் மற்றும் பொருளாதார நிலைமைகள் தொடர்பாக விளக்கப்பட்டுள்ளதுடன் இனம் காணப்பட்ட பிரச்சினைகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம் சீதாவக்க திட்டமிடல் பிரதேசத்திற்கான அபிவிருத்தி திட்டத்தை தயாரிப்பதற்கான தேவைப்பாடு தொடர்பாக இத் திட்டத்தின் மூன்றாம் அத்தியாயம் மூலம் விளக்கப்பட்டுள்ளது.

முதலாம் பிரிவின் இரண்டாம் பகுதி நான்காம் அத்தியாயத்தின் ஊடாக அபிவிருத்தி திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் எதிர்கால தொலைநோக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அத் தொலைநோக்கினை அடைந்து கொள்வதற்காக முன்வைக்கப்படும் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள் தொடர்பாக இங்கு விரவாக கலந்துரையாடப்பட்டு சீதாவக்க திட்டமிடல் அதிகாரப் பிரதேசத்தில் இனம் காணப்பட்ட பலம், பலவீனம், அபிவிருத்தி சந்தர்ப்பங்கள் மற்றும் சவால்கள் தொடர்பான பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எதிர்கால அபிவிருத்தி திசையின் சந்தர்ப்ப சூழ்நிலை மாற்றம் மற்றும் அதன் மூலம் நீண்டகால நோக்கங்களின் ஊடாக தொலைநோக்கினை அடைந்து கொள்வதற்கான வாய்ப்புக்கள் திறந்துவிடப்படும் விதம் தொடர்பாக ஆறாம் அத்தியாயத்தின் கீழ் விளக்கப்பட்டுள்ளது. அதன் போது 2018 – 2030 காலப்பகுதிக்குள் இனம் காணப்பட்ட அபிவிருத்தி உபாய வழிமுறைகள் மூலம் உத்தேச காணிப்பாவனை வடிவம் தொர்பாக கலந்துரையாடப்படுவதுடன் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக சமூக மற்றும் பௌதிக உட்டகட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உபாயம் மற்றும் நிலைபேறான சுற்றாடல் அபிவிருத்தி உபாயம் ஆகிய துறைகளின் ஊடாக விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

மேலே கலந்துரையாடப்பட்ட உபாயவழிமுறைத் திட்டத்தை யதர்த்தமாக்குவதற்கு இத் திட்டத்தின் ஊடாக ஒழுங்குவிதிகள் அறிமுகப்படுத்தப்படுவதுடன் இரண்டாம் பிரிவு மூலம் காணி மற்றும் கட்டட அபிவிருத்தி தொடர்பான பொது விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் பிரிவின் முதலாம் அத்தியாயத்தின் ஊடாக அபிவிருத்தி திட்டத்தின் மூலம் பிரதேசத்தில் இனம் காணப்பட்ட வலயங்கள் மற்றும் அவற்றின் எல்லைகள், ஒவ்வொரு வலயத்திற்கும் தனித்துவமான உத்தேச பாவனைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது. ‘‘திட்டமிடல் மற்றும் கட்டட ஒழுங்குவிதிகள்’’ என அழைக்கப்படும் அதன் இரண்டாம் அத்தியாயம் மூலம் மேற்குறித்த வலயங்களின் காணி மற்றும் கட்டட அபிவிருத்திகள் மீது தாக்கம் செலுத்தும் ஒழுங்குவிதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

# உள்ளடக்கம்

நன்றியுரை ……………………………………………………………………………………iii

கௌரவ அமைச்சரின் முன்னுரை ……………………………………………………………iv

கௌரவ தலைவரின் முன்னுரை …………………………………………………………………v

சீதாவக்க பிரதேச சபையின் கௌரவ தலைவரின் வாழ்த்துச் செய்தி ………………………………vi

அறிமுகம் ………………………………………………………………………………………vii

உள்ளடக்கம் …………………………………………………………………………………x

**தலாம் பகுதி**

**அத்தியாயம் 01 :-** அபிவிருத்தி திட்டத்திற்கான பின்னணி ……………………………………1

1.1 அறிமுகம் …………………………………………………………………………………2

1.2 அபிவிருத்தி திட்டத்தின் தரப்பினர்கள் ………………………………………………………2

1.3 அபிவிருத்தி திட்டத்தின் விடய எல்லை ……………………………………………………… 4

1.4 திட்டமிடல் செயன்முறை ……………………………………………………………………… 4

**அத்தியாயம் 02 :-** அடிப்படை ஆய்வு ………………………………………………………………8

2.1 ஆய்வுப் பிரதேசம் ……………………………………………………………………………… 8

2.2 திட்டமிடல் மற்றும் தரச் சந்தரப்பம் ……………………………………………………………… 7

2.3 திட்டமிடல் பிரதேசத்தை நிர்ணயித்தல் ……………………………………………………… 28

**அத்தியாயம் 03 :-** அபிவிருத்தி திட்டத்தின் தேவைப்பாடு ……………………………………………34

3.1 அறிமுகம் ………………………………………………………………………………………34

3.1.1 இனம் காணப்பட்ட பிரச்சினைகள் ………………………………………………………… 34

3.2 தரப்பினர்களின் கருத்துக்கள் ………………………………………………………………......58

அமைச்சரின் அனுமதி……………………………………………………………….........................60

வர்த்தமானி அறிவித்தல்………………………………………………………………........................61

**இரண்டாம் பகுதி**

**அத்தியாயம் 04** அபிவிருத்தி திட்ட சட்டகம் …………………………………………………………….65

4.1 அபிவிருத்தி திட்டத்தின் தொலைநோக்கு …..………………………………………………… 65

4.2 தொலைநோக்கப் பிரகடனம் …………..……………………………………………………………65

4.3 அபிவிருத்தி திட்டத்தின் நோக்கங்கள் ……………………………………………………………66

4.4 அபிவிருத்தி திட்டத்தின் குறிக்கோள் …………………………………………………………….66

**அத்தியாயம் 05** SWOT பகுப்பாய்வு ………………………………………………………………... 70

5.1 விபரமான SWOT பகுப்பாய்வு ……………………………………………………………… 70

5.1.1 நோக்கம் 01 ……………………………………………………………………………… 70

5.1.2 நோக்கம் 02 ……………………………………………………………………………… 84

5.1.3 நோக்கம் 03 ……………………………………………………………………………… 92

**அத்தியாயம் 06** அபிவிருத்தி திட்டம .......................................................112
6.1 கருதுகோள் திட்டம் ....................................................... 112
6.2 உத்தேச நிலப் பாவனைத் திட்டம் ....................................................... 114
6.3 உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் உபாயவழிமுறைகள் .......................... 116
6.3.1 சேவை முகாமைத்துவ உபாயவழிமுறை ....................................................... 117
6.3.1.1 சுகாதார சேவை உபாயவழிமுறை ....................................................... 117
6.3.1.2 கல்விச் சேவை உபாயவழிமுறை .......................................................119
6.3.1.3 வதிவிட சேவை உபாயவழிமுறை ....................................................... 120
6.3.1.4 சேவை மத்திய நிலைய முன்னுரிமை உபாயவழிமுறை .......................................123
6.3.2 வீதி மற்றும் போக்குவரத்து உபாயவழிமுறை .......................................................126
6.3.3 நீர் வழங்கல் உபாயவழிமுறை ....................................................... 136
6.3.4 மலம் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ உபாயவழிமுறை ....................................... 141
6.3.5 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ உபாயவழிமுறை ....................................... 142
6.4 பொருளாதார அபிவிருத்தி உபாயவழிமுறைத் திட்டம் .......................................145
6.5 நிலைபேறான சூழல் அபிவிருத்தி உபாயவழிமுறை ....................................... 137
6.5.1 சூழல் பாதுகாப்பு உபாயவழிமுறை ....................................................... 137
6.5.2 நிலத்தோற்ற முகாமைத்துவ உபாயவழிமுறை ....................................................... 140
6.5.3 அனர்த்த முகாமைத்துவ உபாயவழிமுறை ....................................................... 143
6.5.4 பொதுத் திறந்தவெளி பொழுதுபோக்கு நடவடிக்கைகள் பற்றிய அவகாச உபாயவழிமுறை.. 144
6.6 கலாசார மற்றும் மதரீதியில் பெறுமதி வாய்ந்த இடங்களின் முகாமைத்துவ உபாயவழிமுறை. 148
6.7 கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் உபாயவழிமுறைத் திட்டம் .............................. 148
சுருக்கப் பெயர்கள் .......................................................277
வரைபடப் பட்டியல் ....................................................... 278
உருவப்படப் பட்டியல் ....................................................... 279
அட்டவணைப் பட்டியல் .......................................................280
வரைபுப் பட்டியல் .......................................................281
பின் இணைப்பு பட்டியல் .......................................................282
உசாத்துணை நூல்கள் .......................................................305



# தலாம் பகுதி

அத்தியாயம்

# 01



# அபிவிருத்தி திட்டத்தின் பின்னணி

# அத்தியாயம் 01
# அபிவிருத்தி திட்டத்தின் பின்னணி

## 1.1 அறிமுகம்

1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 3 (I) மற்றும் 3 (II) ஆம் பிரிவுகளின் கீழ் ஏதேனும் ஒரு பிரதேசத்தை "நகர அபிவிருத்தி அதிகாரப் பிரதேசம்" ஆக பிரகடனப்படுத்தும் அதிகாரம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்குப் பொறுப்பான அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு ஏதேனும் ஒரு பிரதேசம் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் பிரகடனப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அப் பிரதேசத்திற்காக ஒன்றிணைந்த திட்டமிடலைத் தயாரிக்கும் பணி நகர அபிவிருத்தி அதிகார சபையின் பொறுப்பாகக் காணப்படுகிறது.

விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் தனது அதிகாரத்தின் பிரகாரம் பிரகடனப்படுத்தப்படும் பிரதேசங்களுக்காக நகரத் திட்டமிடலைத் தயாரக்கும் அதிகாரம் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 8(அ) ஆமட் பிரிவில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு வெளியிடப்பட்ட 1982 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. திட்டமிடல் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் சமூகப் பொருளாதார, பௌதிக மற்றும் சூழல் காரணிகளைக் கருத்திற் கொண்டு ஒன்றிணைந்த நகர அபிவிருத்தி திட்டம் ஒன்றைத் தயாரத்தல் நகர அபிவிருத்தி அதிகார சபையின் முக்கிய பொறுப்பு ஆகும்.

சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசம், நகர அபிவிருத்திப் பிரதேசமாக 1998/01/19 ஆம் திகதிய 1011/04 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் இப் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்கான அபிவிருத்தி திட்டம் 2019 – 2030 காலப்பகுதிக்கு நடைமுறைக்கு வரும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

## 1.2 அபிவிருத்தி திட்டத்தின் தரப்பினர்கள்

சீதாவக்க அபிவிருத்தி திட்டத்தை (2019 – 2030) தயாரிப்பதற்காக பல்வேறு தரப்பினர்களின் கருத்துககள் மற்றும் யோசனைகள் பெற்றுக்கொள்ளப்பட்டன. அதன் போது திட்டமிடல் பிரதேசத்தின் சூழல், பௌதிக, பொருளாதார மற்றும் சமூகப் பிரிவுகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் வண்ணம் பெற்றுக் கொள்ளப்பட்ட கருத்துக்கள் அந்த அபிவிருத்தி திட்டத்தை தயாரிக்கும் போது கவனத்திற் கொள்ளப்பட்டது. அதன் ஆலோசனைக் கூட்டங்களில் பற்குபற்றிய தரப்பினர்கள் பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.

### அ) பிரதான தரப்பினர்

- சீதாவக்க பிரதேச சபை

### ஆ) ஆலோசனை நிறுவனங்கள்

- சீதாவக்க பிரதேச செயலகம்
- பாதுக்க பிரதேச செயலகம்
- தேசிய பௌதிகத் திட்டமிடல் திணைக்களம்
- மத்திய சுற்றாடல் அதிகார சபை
- நீர்ப்பாசனத் திணைக்களம்
- வீதி அபிவிருத்தி அதிகார சபை
- இலங்கைப் புகையிரதத் திணைக்களம்
- வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை
- தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம்
- காணிப் பாவனை கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்
- இலங்கை முதலீட்டு சபை
- இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்.
- மிருக வைத்திய அலுவலகம் - ஹங்வெல்ல
- மிருக வைத்திய அலுவலகம் - பாதுக்க
- தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை
- இலங்கை மின்சார சபை
- சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை
- விவசாயத் திணைக்களம்
- இறப்பர் அபிவிருத்தி அதிகார சபை
- தொல்பொருளியல் திணைக்களம்
- மக்கள் சுகாதார உத்தியோகத்தர் அலுவலகம்
- கால்நடை வள அலுவலகம் - ஹங்வெல்ல
- கால்நடை வள அலுவலகம் - பாதுக்க
- பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு
- வனப் பாதுகாப்புத் திணைக்களம்
- கமநல அபிவிருத்தி திணைக்களம்

### இ) ஏனைய தரப்பினர்கள்

- வர்த்தக சங்கம் - பாதுக்க
- வர்த்தக சங்கம் - ஹங்வெல்ல

### ஈ) நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரதான திட்டமிடல் குழு

- திரு வை.ஏ.ஜீ.கே.குணதிலக்க – பணிப்பாளர் (மேல் மாகாணம்)
- திருமதி தமரா ஜயகொட – பிரதிப் பணிப்பாளர் (திட்டமிடல்)
- திரு அத்துல சமரசிங்க – திட்டமிடல் உத்தியோகத்தர்

- மாதவி கொத்தலாவல – திட்டமிடல் உதவியாளர்
- இந்துனில் சந்தருவன் - உதவித் திட்டமிடல் உத்தியோகத்தர்
- திஷ்னி தாரிகா - உதவித் திட்டமிடல் உத்தியோகத்தர்

**உ) ஏனைய ஒத்துழைப்பு திட்டமிடல் குழுக்கள்**

- அபிவிருத்தி திட்டமிடல் பிரிவு
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு
- சூழல் நிலத்தோற்ற மற்றும் வசதிகள் முகாமைத்துவப் பிரிவு
- புவியியல் தகவல் முறைமைப் பிரிவு

## 1.3 அபிவிருத்தி திட்டத்தின் விடய எல்லை

சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் கொழும்பு நகரில் இருந்து சுமார் 44 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளதுடன் அது கொழும்பு மாவட்டத்தில் அமைந்துள்ள மிகப் பெரிய உள்ளூராட்சி அதிகாரப் பிரதேசம் ஆகும். அதன் பொருளாதார, சமூக, சுற்றாடல் மற்றும் பௌதிக துறைகளை அடிப்படையாகக் கொண்டு நிலைபேறான ஓர் அபிவிருத்தியை அடைந்து கொள்ளும் நோக்கில் இந்த அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்படுகிறது. விரிவாக நோக்குமிடத்து பிரதேசத்தில் காணப்படும் பயன்படுத்தப்படாத வளங்களைப் பயன்படுத்துதல், பயன்படுத்தப்படும் வளங்களில் இருந்து உயர்ந்தபட்ச பயனைப் பெறல், பிரதேசத்தில் உள்ள பிரதான கைத்தொழில்களை சூழல் நட்புறவுடன் பயன்படுத்துதல், சூழல் முறைமைகளை பாதுகாத்தல் மற்றும் நிலவும் சிக்கலான நிலைமைகளைக் குறைப்பதற்கான தீர்வுகளை முன்வைத்தல் ஆகிய அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதினூடாக நிலைபேறான அபிவிருத்தியை எய்துவதற்கு எதிர்பார்ப்பதுடன் அதன் போது சூழல் பாதுகாப்பு தொடர்பில் நிலைபேறான சூழல் திட்டம், கலாசார மற்றும் மதம் சார்ந்த திட்டம், உட்டகட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கான உட்கட்டமைப்புத் திட்டம், பொருளாதார அபிவிருத்திக்கான சூழல் சுற்றுலா மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கான உபாய வழிமுறைகள் மற்றும் பிரதேசத்தில் காணப்படும் கனிய வளங்கள் மற்றும் கால்நடை வளக் கைத்தொழில்களை மேம்படுத்துவதற்கான உபாய வழிமுறைகள், வதிவிடப் பாவனை மேம்பாட்டுக்கான சேவை முகாமைத்துவத் திட்டம் ஆகியன தொடர்பாக யோசனைகள் இதன் மூலம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த அபிவிருத்தி திட்டத்தை தயாரிக்கும் போது ஒவ்வொரு அரச நிறுவனத்தினாலும் பேணிச் செல்லப்படும் ஆறுகளுக்கான ஒதுக்கு, புகையிரத வீதிக்கான ஒதுக்கு, அரச ஒதுக்குக் காடு மற்றும் நிர்த்துேக்கப் பிரதேசங்கள், இனம் காணப்பட்ட அபிவிருத்திப் பிரதேசங்கள், தொல்பொருளியல் இடங்களின் பாதுகாப்பு போன்ற நடைமுறையில் உள்ள சட்ட வரையறைகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

## 1.4 திட்டமிடல் செயன்முறை

சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்கான அபிவிருத்தி திட்டத்தை தயாரிக்கும் போது ஆரம்பத்தில் இருந்தே முறையானதொரு திட்டமிடல் செயன்முறைக்கு அமைய திட்டமிடல் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் பிரதானமாக அது 10 படிமுறைகளை உள்ளடக்கி உள்ளது.

**பின்னணி ஆய்வு**

இதற்காக காணக் கடைக்கின்ற சூழல், பொருளாதார, சமூக மற்றும் பௌதிக துறைகளினூடாக பல்வேறுபட்ட அவதானிப்புக்கள் மற்றும் பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பிரகாரம் கூகல் வரைபடத்தின் உதவியுடன் பூகோளத் தொடர்பு வரைபடம், திட்டப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனைகள் மற்றும் ஒவ்வொரு ஏற்புடைய நிறுவனங்கள் மற்றும் தரப்பினர்கள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பிரதேசத்தில் அபிவிருத்தி ஏற்பட்டுள்ள விதம், வீதி முறைமைகள் வியாபித்துள்ள விதம், இயற்கைச் சூழல் முறைமை தொடர்பான தகவல்கள் ஆகியன, பூகோளத் தகவல் முறைமை மென்பொருளைப் பயன்படுத்தி குடித்தொகை மற்றும் வீடமைப்பு அடர்த்தி மற்றும் அவற்றின் பரம்பல், கல்வித் தரத்தின் பரம்பல், ஊழியப்படைப் பரம்பல், நிலப் பாவனை வடிவத்தின் பரம்பல், உட்கட்டமைப்பு வசதிகளின் பரம்பல், கைத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழிலின் பரம்பல் தொடர்பான தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன. அவ்வாறே நிலத்தோற்ற வேறுபாட்டு வரைபடம், மண்சரிவு ஏற்படும் இடங்களின் பரம்பல், போக்குவரத்து வரைபடம் மற்றும் தொல்பொருளியல் பெறுமதி வாய்ந்த இடங்களின் வரைபடம், நிலத்தின் பெறுமதிப் பரம்பல், அனர்த்த அபாயம் தொடர்பான வரைபடம் மற்றும் பூங்கா மற்றும் திறந்தவெளி நிலங்கள் பற்றிய வரைபடம் தயாரிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பிரதேசம் தொடர்பான ஒரு பூரண விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

**விடய எல்லை**

பிரதேசத்தில் காணப்படும் தற்போதைய சமூக, பொருளாதார மற்றும் நிலத்தோற்ற வேறுபாடுகள் போன்ற துறைகளின் நிலைமையினை பகுப்பாய்வு செய்து இனம் காணல்

**பிரச்சினைகளும் வளங்களும்**

வளங்கள் மற்றும் பலவீனங்களை இனம் காண்பதற்கு 03 உபாய வழிமுறைகளின் ஊடாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்காக பிரதேுசத்தின் அரச, தனியார் மற்றும் பல்வேறு சங்கங்களைப் பிரதநிதித்துவம் செய்து 2017.10.16 ஆம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலின் போது தரப்பினர்கள் முன்வைத்த கருத்துக்களும் நகர வடிவமைப்புக் கலைஞர்களின் பகுப்பாய்வுகளும் பின்னணி ஆய்வில் குறிப்பிடப்பட்ட இப் பிரதேசத்திற்கு ஏற்புடைய கடந்தகாலத் திட்டங்களின் தலையீடுகளின் பகுப்பாய்வுகளும் பயன்படுத்தப்பட்டன.

அவ்வாறு இனம் காணப்பட்ட வளங்கள் மற்றும் பலவீனங்கள் பிரதேசத்தின் சந்தர்ப்பம், பிரதேசத்தின் முக்கியத்துவம் மற்றும் பிரதேசத்தின் தனிச்சிறப்பின் பிரகாரம் முன்னுரிமைப்படுத்தப்பட்டது.

**தொலைநோக்கு, இலக்குகள் மற்றும் நோக்கங்கள்**

திட்டப் பிரதேசத்தில் காணப்படும் அபிவிருத்தி வளங்களில் இருந்து உரியவாறு பயன் பெறுவதற்கும், அதன் அபிவிருத்தியின் சிக்கலான நிலைமைகளை நிவர்த்தி செய்து சூழல், பொருளாதார, சமூக மற்றும் பௌதிக துறைகளில் சமநிலையான அபிவிருத்தி மூலம் திட்டப் பிரதேசத்தை அபிவிருத்தியின் பால் இட்டுச் செல்வதற்கு தேவையான தொலைநோக்கு மற்றும் நோக்கங்கள் தயாரிக்கப்பட்டது.

மேலே மேற்கொள்ளப்பட்ட விஞ்ஞான ரீதியான பகுப்பாயவினைத் தொடர்ந்து அதன் இறுதி முடிவுகள் முன்னுரிமை வரிசைப்படுத்தப்பட்டதுடன் அதன் பிரகாரம் குறிக்கோள்கள் தயாரிக்கப்பட்டன.

**விபரமான பகுப்பாய்வு**

அபிவிருத்தி திட்டத்தை தயாரிக்கும் போது தொலநோக்கினை அடைந்து கொள்வதற்காக பிரதேசத்தில் காணப்படும் பலம், பலவீனம், பிரதேசத்திற்கு வெளிவாரியான சந்தர்ப்பங்கள் மற்றும் சவால்கள் தொடர்பான உரியவாறு பகுப்பாய்வினை மேற்கொண்டு (SWOT) அதன் மூலம் அபிவிருத்திப் போக்கு நோக்கிய விடயங்கள் இனம் காணப்பட்டது.

**உபாய வழிமுறைத் திட்டங்களைத் தயாரித்தல்**

இந்த அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இனம் காணப்பட்ட தொலைநோக்கு நோக்கங்கள் மற்றும் அபிலாசைகளை திட்டமிடல் பிரதேுசத்தில் நடைமுறைப்படுத்துவதற்காக பொருளாதார சமூக மற்றும் சூழல் நடத்தைகள் திட்டமிடல் கால எல்லைக்குள் இடம்பெற வேண்டிய விதமாக சந்தர்ப்பம் அல்லது ஆரம்பம் இதன் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

நோக்கங்கள் மற்றும் அபிலாசைகளின் ஊடாக தொலைநோக்கினை நோக்கி பயணிப்பதற்காக 06 உபாய வழிமுறைத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் சீதாவக்க பிரதேச சபை அபிவிருத்தி திட்டத்திற்காக (2019 - 2030) உட்டகட்டமைப்பு வசதிகள், பொருளாதார அபிவிருத்தி, நிலைபேறான சுற்றாடல் அபிவிருத்தி, சலாசார மற்றும் மதரீதியில் பெறுமதி வாய்ந்த இடங்களைப் பாதுகாக்கும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் வலயப்படுத்தல் ஆகிய உபாய வழிமுறைத் திட்டங்கள் இனம் காணப்பட்டுள்ளன.

**திட்டமிடல் மற்றும் ஒழுங்குவிதிகள்**

காணி மற்றும் கட்டடங்களை அபிவிருத்தி செய்தல் தொடர்பாக தேவையான சட்ட வரையறை இதன் மூலம் முன்வைக்கப்படுகிறது.

**கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளல்**

அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்கள், வர்த்தக சமூகம் உள்ளிட்ட ஏனைய மக்கள் பிரதிநிதிகளிடம் பெற்றுக் கொள்ளப்பட்ட கருத்துக்கள் மற்றும் யோசனைகள், திட்டத்தினைத் தயாரிக்கும் போது கவனத்திற் கொள்ளப்பட்டன.

**முதல் நிலைத் திட்ட அறிக்கையினை வழங்குதல்**

சகல தரப்பினராலும் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் மற்றும் யோசனைகள் கவனத்திற் கொள்ளப்பட்டு பிரதேசத்திற்கான முதல் நிலை அபிவிருத்தி திட்டம் ஒன்றைத் தயாரித்தல்.

**அங்கீகாரம் மற்றும் வெளியீடு செய்தல்**

முதல் நிலை அபிவிருத்தி திட்டம் தொடர்பாக மக்களுக்கு அறிவூட்டுவதற்காக ஏற்புடைய உள்ளூராட்சி நிறுவனங்கள், நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரதான திட்டமிடல் குழுவிற்குச் சமர்ப்பித்தல் மற்றும் திட்டத்தை வெளியிடுவதற்குத் தேவையான ஆரம்ப அனுமதியைப் பெறல்.

அத்தியாயம்

# 02



# ஆரம்ப ஆய்வு

# அத்தியாயம் 02
# ஆரம்ப ஆய்வு

## 2.1 ஆய்வுப் பிரதேசம்

சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் இதனது ஆய்வுப் பிரதேசம் என்பதுடன் அது மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில் சுமார் 208 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பில் வியாபித்துக் காணப்படுகிறது. ஆய்வுப் பிரதேசம் வடக்கே களனி கங்கை மற்றும் கம்பஹ மாவட்டத்தையும், கிழக்கே சீதாவக்க நகர எல்லை மற்றும் எஹெலியகொட பிரதேச சபை எல்லைகளையும், தெற்கே ஹொரண பிரதேுச சபை எல்லைகளையும் மேற்கே புஸ்வெல் ஓயா மற்றும் ஹோமாகம பிரதேச சபை அதிகார எல்லையினையும் எல்லைகளாகக் கொண்டு அமையப் பெற்றுள்ளது.

சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் பிரதான நகர மத்திய நிலையமாக ஹங்வெல்ல மற்றும் பாதுக்க ஆகிய நகரங்கள் இனம் காணப்பட்டுள்ளதுடன் உப நகர மத்திய நிலையமாக கொஸ்கம நகரம் முக்கிய இடத்தினை வகிக்கிறது. அதன் பிரகாரம் ஆய்வுப் பிரதேசமான சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் 02 பிரதேச செயலகங்களை உள்ளடக்கி உள்ளதுடன் ஹங்வெல்ல பிரதேச செயலகப் பிரிவின் 36 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மற்றும் பாதுக்க பிரதேச செயலகப் பிரிவின் 54 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுடன் ஒன்றிணைந்து 90 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கி உள்ளது. (உருவப்பட இலக்கம் 2.1)

***உருவப்பட இலக்கம் 2. 1 – அமைவிடம், சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசம***



மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

## 2.2 திட்டமிடல் மற்றும் தரச் சந்தர்ப்பம்

சீதாவக்க திட்டப் பிரதேசம் முன்னர் சீதாவக்க இசாசதானிக்குச் சொந்தமாகக் காணப்பட்ட வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட ஒரு பிரதேசம் என்பதற்கு பல்வேறு மூல ஆதாரங்கள் சான்று பகர்கின்றன. இப் பிரதேசம் சுமார் 16 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் போத்துக்கேயர்கள் மற்றும் ஒல்லாந்தர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டதற்கான தடயங்கள் ஹங்வெல்ல, பாதுக்க, கொஸ்கம ஆகிய பகுதிகளை அண்டிய பிரதேசங்களில் தற்போது கூட காணக் கிடைக்கும் இடிபாடுகள் மூலம் இனம் காணக் கூடியதாக உள்ளது. கொழும்பு மாவட்டத்தின் உள்ளூராட்சி நிறுவனங்களுள் வரலாற்று ரீதியானதும் தொல்பொருளியல் பெறுமதிகள் பலவற்றைக் கொண்டதுமான ஒரு பிரதேசமாக சீதாவக்க பிரதேச சபை அதிகார பிரதேசத்தை இனம் காண முடியும்.

ஹங்வெல்ல நகரத்திற்கு அண்மையில் உள்ள களனி கங்கையை எல்லையாகக் கொண்ட வாடிவீட்டுக்கு அருகில் முன்னர் பாரியதொரு அரண்மனை நிர்மாணிக்கப்பட்டிருந்தமை அதற்கு அண்மையில் தற்போது காணக் கிடைக்கும் நீர் அகழி ஒன்றின் இடிபாடுகள் மூலம் புலனாகிறது. குருகல பிரதேசத்தில் அமைந்துள்ள குருகல கற்குகை, மலகல கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள நிதன்கல, கொழும்பு மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரேயொரு சங்கிலிப் பாலம் தும்மோதர பிரதேசத்தில் வக்ஓயா ஊடாக அமையப் பெறல், அயர்வத்த பிரதேசத்தில் அமைந்துள்ள ஆங்கிலேயர் யுகத்தின் கல் வங்களா, ஹங்வெல்ல நகரத்தில் அமைந்துள்ள அரண்மனை, லெனவர ராஜமகா விஹாரை, முண்டிகல ஆராமை போன்றன பிரதேசத்தில் காணப்படும் தொல்பொருளியல் மற்றும் வரலாற்றுப் பெறுமதி வாய்ந்த இடிபாடுகள் ஆகும். இவ்வாறு வரலாற்றுப் பெறுமதி வாயந்த சீதாவக்க பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் நிர்வாகப் பின்னணியில் சீதாவக்க பிரதேசம் 1980 வரையான காலப்பகுதியில் கிராம சபையாகக் காணப்பட்டதுடன் 1980 – 1987 வரை அபிவிருத்தி சபையாக நிர்வாக அமைப்பு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. பின்னர் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் கீழ் சீதாவக்க பிரதேச சபை 1987 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டுள்ளது. இப் பிரதேசத்திற்காக பல்வேறு கால கட்டங்களில் தேசிய மற்றும் பிரதேச ரீதியாக திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

தேசிய ரீதியில் கவனத்திற் கொள்ளும் போது தேசிய பௌதிகத் திட்டமிடல் திணைக்களம் மூலம் (2017 – 2050) தயாரிக்கப்பட்டுள்ள தேசிய பௌதிகத் திட்டத்தின் பிரகாரம் இப் பிரதேசம் பொருளாதார நடைவழியினை எல்லையாகக் கொண்ட சூழல் கூருணர்வு வலயத்திற்குச் *(Central Fragile Area)* சொந்தமான ஒரு பிரதேசமாக இனம் காணப்பட்டுள்ளது. (*உருவப்பட* இலக்கம் 2.2)

1998 ஆம் ஆண்டு நகர அபிவிருத்தி அதிகார சபையினால் தயார் செய்யப்பட்ட கொழும்பை அண்டிய வலயத்திற்கான கட்டமைக்கப்பட்ட திட்டத்தின் *(Colombo Metropolitan Regional Structure Plan - CMRSP)* கீழ் இத் திட்டமிடல் அதிகாரப் பிரதேசம் தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வளர்ச்சியடைந்து வரும் ஒரு பிரதேசம் *(Growth Center)* மற்றும் சூழல் கூருணர்வுப் பிரதேச *(Environmental Sensitive Area)* மாக இனம் காணப்பட்டுள்ளது. அதன் போது ஹங்வெல்ல ஒரு சேவை மத்திய நிலையமாகவும் பாதுக்க நகர மத்திய நிலையமாகவும் முன்மொழியப்பட்டுள்ளது. (*உருவப்பட* இலக்கம் 2.3)

மேல் மாகாண ஆரம்ப அபிவிருத்தி திட்டத்தின் பிரகாரம் (2010 ஆம் ஆண்டு தயார் செய்யப்பட்ட) பாதுக்க மற்றும் ஹங்வெல்ல நகரத்தை அண்டிய பிரதேசங்களுக்காக சேவை வழங்கும் ஒரு மத்திய நிலையமாகவும் அப்போது பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இப் பிரதேசத்தை குறைவான அபிவிருத்தி அடர்த்தியுடன் கூடிய ஒரு பிரதேசமாக அபிவிருத்தி செய்வதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் 2016 ஆம் ஆண்டு தயார் செய்யப்பட்ட மேல் மாகாண மாநகர சபைத் திட்டத்திற்கு *(Western Region Megapolis Plan)* அமைவாக சீதாவக்க அதிகாரப் பிரதேசத்தை பசுமைச் சுற்றுலா வலயமாகவும் பெருந்தோட்ட அபிவிருத்தி வலயமாகவும் பேணிச் செல்வதற்கான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. (*உருவப்பட* இலக்கம் 2.4)

திட்டமிடல் அதிகாரப் பிரதேசம் கடல் மட்டத்திலிருந்து 350 – 1,500 அடி உயரத்தில் அமைந்துள்ள மலை, சமநிலம் மற்றும் ஈர நிலங்களை உள்ளடக்கிய ஒரு பிரதேசம் ஆகும். தென்மேல் பருவப் பெயர்ச்சி மழை மூலமாக வருடம் பூராக மழை பொழிவதுடன் வருடாந்த மழைவீழ்ச்சி சுமார் 3,000 மிலி மீற்றர்கள் ஆகும். வருடாந்த வெப்பநிலை சுமார் $75^{0}$F ஆகும்.

பிரதேச ரீதியில் இப் பிரதேசத்தின் அமைவிடம் பற்றிக் கவனத்திற் கொள்ளும் போது கடுவெல, ஹோமாகம, மொரகஹஹேன, இங்கிரிய, கிரிந்திவெல மற்றும் அவிசாவெல்ல ஆகிய நகரங்களுக்கு மத்தியில் அமையப் பெற்றுள்ளதுடன் பிரதேசத்தின் பிரதான நகரமான ஹங்வெல்ல நகரத்தை மையமாகக் கொண்டு கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு, கொழும்பு, ஹொரண, அவிசாவெல்ல மற்றும் இரத்தினபுரி ஆகிய நகரங்களுக்கு நெடுஞ்சாலை வலைப்பின்னல் ஊடான நுழைவு வசதிகள் வியாபித்துக் காணப்படுகின்றன.

ஹங்வெல்ல நகரத்தில் இருந்து சுமார் 45 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துடன் இணைவதற்கான ஆற்றல் கிரிந்திவெல ஊடாக நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய வீதியினூடாக கிடைக்கப் பெற்றுள்ளது. கொழும்பு, பாதுக்க, கொஸ்கம ஊடாக அவிசாவெல்ல வரையான களனிவெளி புகையிரதப் பாதை அத் திட்டப் பிரதேசத்தினூடாக அமையப் பெற்றுள்ளமை பிரதேசத்திற்கு பெறுமதி வாய்ந்த ஒரு வளமாக உள்ளது. வலய ரீதியாக ஹங்வெல்ல மற்றும் பாதுக்க ஆகிய நகரங்களை மையமாகக் கொண்டு கொழும்பு நகரம், நிட்டம்புவ, கடுவெல, அவிசாவெல்ல, ஹொரண, ஹோமாகம ஆகிய நகரங்களுடனும் மத்துகம, கண்டி, அனுராதபுரம், பதுளை ஆகிய நகரங்களுடனும் தொடர்பு பேணப்பட்டு வருகிறது. (வரைபட இலக்கம் 2.1)

உயர் தொழிநுட்பத்தைக கொண்ட ஒரு தொலைத்தொடர்பு செய்திதிப் பரிவர்த்தனை நிலையமான ஆதுர் சீ கிளாக் செய்மதி மத்திய நிலையம் பாதுக்க, கலகெதர பிரதேசத்தில் அமைந்துள்ளமை பிரதேசத்திற்கு தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் வழங்கப்படுவதற்கு காரணமாய் அமைந்துள்ளது.

***உருவப்பட இலக்கம் 2. 2 – தேசிய பௌதிக அபிவிருத்தி திட்டம் (2017-2050)***




மூலம் : தேசிய பௌதிக திட்டமிடல் திணைக்களம் (2017)

***உருவப்பட இலக்கம் 2. 3 - கொழும்பை அண்டிய வலயத்திற்கான கட்டமைக்கப்பட்ட திட்டம் (1998)***




மூலம் : தேசிய பௌதிக திட்டமிடல் திணைக்களம் (2018)

***உருவப்பட இலக்கம் 2. 4 – மேல் மாகாண மாநகர திட்டம் (2030)***




Fig.5.1 Proposed Planning Area Division

மூலம் : பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு (2016)

கொழும்பு மாவட்டத்திற்கான குடிநீரை வழங்கும் லபுகம மற்றும் கலட்டுவான நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைந்துள்ளமை விசேட முக்கியத்துவம் பெறுவதுடன் பிரதேசத்தில் அமைந்துள்ள லெஷர் வேர்ல்ட் (Leisure World) பொழுதுபோக்கு நிலையம், சீதாவக்க தாவரவியல் பூங்காக ஆகியன தேசிய ரீதியிலான தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு ஏதுவாய் அமைந்துள்ளது. அதன் பிரகாரம் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பிரதேசத்தில் அமைந்துள்ள இவ்வாறான வளங்கள் தொடர்பாகவும் இத் திட்டம் மூலம் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (உருவப்படம் 2.5)

**உருவப்பட இலக்கம் 2. 5 – சீதாவக்க பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் கவனத்தை ஈர்க்கக் கூடிய இடங்கள்**




மூலம் : வெளிக்கள ஆய்வு, நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

***வரைபட இலக்கம் 2. 1 – சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் வலய ரீதியில் முக்கியத்துவம் மற்றும் பிரதேச அமைவிடம்***




மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை (2018)

திட்டப் பிரதேசத்தின் கூடுதலான நிலப் பிரதேசத்தில் வியாபித்துள்ள சூழல் கூருணர்வுடைய இடங்கள், வயல்கள், தாழ்நிலங்கள், நீர்த் தேக்கங்கள், நீர் வீழ்ச்சிகள், நீரோடைகள், நதிகள், பாரியளவு இறப்பர் பயிர்ச் செய்கைகள், ஒதுக்குக் காடுகள் போன்ற இயற்கை சூழல் முறைமையினைப் பாதுகாப்பதற்கு பாரியதொரு பங்களிப்பினை வழங்குவதுடன் நீரேந்து நிலைமையைப் பாதுகாப்பதற்குத் துணை புரியும். (வரைபட இலக்கம் 2.2) லபுகம நீர்த்தேக்கம் உள்ளிட்ட நீர்த்தேக்கத்தை அண்டிய பிரதேசம் 4.16 சதுர கிலோ மீற்றர் பிரதேசம் உள்ளடங்குவதுடன் அது நிலப் பாவனை வடிவத்திற்கு அமைய ஒரு குறிப்பிடத்தக்க இடத்தினைப் பெற்றுள்ளது.

பிரதேசத்தின் மொத்த நிலப்பரப்பில் 1.1% உள்ளடங்கும் வகையில் நீர்த்தேக்க முறைமை வியாபித்துள்ளதுடன் களனி கங்கை, வக் ஓயா, எஸ்வத்து ஓயா, அருக்வத்த ஓயா, அங்கமுவ ஓயா மற்றும் எலிகே ஓயா ஆகியவற்றை பிரதானமாகக் கொண்ட நீர் மார்க்கங்களும், லபுகம, கலட்டுவான நீர்த்தேக்ககளும் இதில் பிரதானமாகும். அவ்வாறே குமாரி எல்ல, ரன்முது எல்ல, எல்ல உட எல்ல, தமோதர எல்ல போன்ற நீரத்தேக்கங்கள் பிரதேுசத்தில் அமைந்துள்ளன.

தற்போது பிரதேசத்தின் மொத்த நிலப்பரப்பில் 73% பசுமை போர்வை வியாபித்துள்ளதுடன் அதில் 42% நிலப்பரப்பில் இறப்பர் பயிர்ச்செய்கை வியாபித்துள்ளது. கெற் பயிர்ச் செய்கைக்காக மொத்த நிலப்பரப்பில் 7.6% ஒதுக்கப்பட்டுள்ளதுடன் தெங்குப் பயிர்ச் செய்கை சுமார் 3.45% வியாபித்துள்ளது. பிரதேசத்தின் தொழில் புரிவோரில் சுமார் 40% வீதத்தினரின் பிரதான வாழ்வாதாரம் இறப்பர் பயிர்ச் செய்கை என்பதுடன் தேயிலைப் பயிர்ச் செய்கை, அன்னாசி பயிர்ச் செய்கை மற்றும் கலப்பு பயிர்ச் செய்கை பிரதேுசம் பூராகவும் சிறிதளவு காணக் கூடியதாக உள்ளது. கொழும்பு மாவட்டத்தின் மொத்த இறப்பர் உற்பத்தியில் 62% பங்களிப்பு அதன் மூலம் வழங்கப்படுகிறது. விசேடமாக கொஸ்கம, போப்பே, பஞ்ஞாகுல போன்ற பிரதேசங்களில் பாரியளவில் இறப்பர் பயிர்ச் செய்கை வியாபித்துள்ளது. அவ்வாறே சாலாவ வத்த, எலிசன் வத்த, சிரிநிவாச வத்த, பஞ்ஞாகுல வத்த ஆகயிவற்றைப் பிரதானமாகக் கொண்டு அரசுக்குச் சொந்தமான 4,698 ஹெக்டயார் பரப்பில் வியாபித்துக் காணப்படுகிறது.

கால்நடை வளக் கைத்தொழில் அப் பிரதேசத்தின் மற்றுமொரு வாழ்வாதார மார்க்கம் என்பதுடன் பிரதேசம் பூராகவும் வியாபித்துள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவு கோழிப் பண்ணைகள், பன்றிப் பண்ணைகள் மற்றும் மாட்டுப் பண்ணைகள் அதிகளவு காணப்படுகிறது. பாரியளவில் புஸ்ஸெல்லாவ பாம், நியோ பாம் மற்றும் பிரிமா பாம் போன்ற பண்ணைகள் தொழிற்படுவதுடன் வீடுகளை அண்டியதாகத் தொழிற்படும் சிற்றளவு பண்ணைகளும் ஏராளமாக பிரதேசம் பூராக வியாபித்துள்ளது. கொழும்பு மாவட்டத்தில் கால்நடை வள உற்பத்திக்காக இதன் மூலம் 66% போன்ற உயர்வான பங்களிப்பு வழங்கப்படுகிறது.

கருங்கற்கள் உடைத்தல், மற்றும் மரம் வெட்டும் கைத்தொழிலும் இப் பிரதேுசத்தில் காணக் கிடைக்கும் மற்றுமொரு செலூக்கமுடைய பொருளாதார செயற்பாடாக உள்ளதுடன் பிரதேசம் பூராக வியாபித்துள்ள பாரியளவு சுமார் 47 கருங்கல் குழிகளைக் காண முடியுமாக உள்ளது. இக் கைத்தொழில்கள் மூலம் துஜறமுக நகரம் நிர்மாணித்தல் மற்றும் அதிவேகப் பாதை நிர்மாணித்தல் போன்ற தேசிய ரீதியிலான கருத்திட்டங்களுக்காக நேரடிப் பங்களிப்பு வழங்கப்படுகிறது. ஆயினும் உரிய முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடு இன்றி துரிதமாக வியாபித்துச் செல்லும் கோழி, பன்றி போன்ற கால்நடை வளப் பண்ணைகள்

மற்றும் முறையற்ற விதத்திலான கருங்கல் உடைத்தல் கைதொழில் காரணமாக பிரதேசத்தின் மக்களது சுமுகவாழ்க்கைக்கு மற்றும் சூழல் வளங்களுக்கு சிறிதளவு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

சுற்றுலா கைத்தொழிலும் சிறிதளவு பிரதேசத்தில் பிரசித்தி பெற்ற ஒரு பொருளாதார செயற்பாடாகக் காணப்படுவதுடன் அதற்காக கூடுதல் வாய்ப்புக்கள் பிரதேசத்தில் காணப்படுகிறது.

அவ்வாறே திட்டமிடல் அதிகாரப் பிரதேசத்தின் சமூகத் தகவல்கள் பற்றிக் கருத்திற் கொள்ளும் போது குடிமதிப்பு புள்ளிவிபரத் தரவுகளின் பிரகாரம் சீதாவக்க அதிகாரப் பிரதேசத்தில் 2001 ஆம் ஆண்டு சனத்தொகை 113,084 ஆக மாற்றமடைந்துள்ளதுடன் அது 2018 ஆம் ஆண்டளவில் 162,729 வரை அதிகரித்துள்ளது. இது கொழும்பு மாவட்டத்தின் மொத்த சனத்தொகையுடன் ஒப்பிடும் போது 6% பெறுமதியைக் கொண்டுள்ளது. ஆயினும் தெஹிவல, கொழும்பு, மொரட்டுவ, கடுவெல, மகரகம போன்ற ஏனைய பிரதேச செயலகப் பிரிவுகளின் சனத்தொகையுடன் ஒப்பிடும் போது இப் பெறுமதி ஒப்பீட்டு ரீதியில் குறைந்த வீதத்தைக் கொண்டுள்ளமை வரைபு இலக்கம் 2.1 மூலம் தெளிவாகிறது.

***வரைபு இலக்கம் 2. 1– மேல் மாகாண பிரதேச செயலகப் பிரிவு ரீதியாக சனத்தொகை அடர்த்தி (2012)***




மூலம் : குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் (2012)

***வரைபட இலக்கம் 2. 2 – சீதாவக்க பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் நீலப் பசுமை பிரதேசம் (2018)***



***அட்டவணை இலக்கம் 2. 1 – சனத்தொகை வளர்ச்சி மற்றும் வளர்ச்சி வேகம் (1971-2018), சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசம்***

| ஆண்டு | சனத்தொகை | வருடாந்த சனத்தொகை வளர்ச்சி விகிதம் |
|---|---|---|
| **1971** | 76,501 | **-** |
| **1981** | 92,255 | **2.06** |
| **2001** | 113,084 | **1.13** |
| **2011** | 133,919 | **.184** |
| **2018** | **162,729** | **1.73** |

மூலம் : குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் (2012)

பிரதேசத்தின் மொத்த சனத்தொகையின் வருடாந்த வளர்ச்சி வேகத்தை கவனத்திற் கொள்ளும் போது அது 1971 – 1981 காலப்பகுதியில் 2.06% பெறுமதியினையும் 2001 ஆம் ஆண்டளவில் 1.13% பெறுமதியினையும் கொண்டு, 2011 ஆம் ஆண்டளவில் 1.84% வரை உயர்வடைந்து மீண்டும் 2018 ஆம் ஆண்டளவில் 1.73% சிறிதளவு குறைவடைந்துள்ளது. (அட்டவணை இலக்கம் 2.1) இதன் பிரகாரம் அதிகாரப் பிரதேசத்தின் சனத்தொகை வளர்ச்சியின் சராசரி சுமார் 1.5 பெறுமதியினைக் கொண்டுள்ளது.

சீதாவக்க பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் சனத்தொகைப் பரம்பல் தொடர்பாக கவனம் செலுத்தும் போது தேசிய வீதி வலைப்பின்னலின் பிரதான வீதியின் ஊடாக கொஸ்கம, ஹங்வெல்ல, பாதுக்க ஆகிய நகரங்களை மையமாகக் கொண்ட பிரதேசத்தின் கிழக்கில் இருந்து மேற்கே மற்றும் தெற்கே சனத்தொகையின் ஓர் உயர்வான பரவலைக் காண முடியும் என்பதுடன் சராசரி சனத்தொகை அடர்த்தி ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 948 நகர்களாக மாற்றமடைந்துள்ளது. கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியிாகப் பார்க்கும் போது 2011 ஆம் ஆண்டு ஆகக் கூடிய சனத்தொகை அடர்த்தி குடலுவில, வலவ்வத்த, பஹத்கம, பிட்டும்பே தெற்கு, வக தெற்கு, கலகெதர, கொஸ்கம, கஹட்டபிட்டிய, ஹங்வெல்ல நகரம், பாதுக்க மற்றும் அருக்வத்த ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் காணக் கூடியதாக உள்ளது. இக் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் சனத்தொகை அடர்த்தி ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 1,500 – 3,000 பேர்கள் ஆகும். இதற்கான முக்கிய காரணம், சீதாவக்க பிரதேசத்தின் பிரதான வர்த்தக நகர மத்திய நிலையமான கொஸ்கம, ஹங்வெல்ல மற்றும் பாதுக்க ஆகியன இக் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் அமைந்துள்ளமை ஆகும்.

மேலும் குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத் (2012) தரவு அறிக்கைகளின் பிரகாரம் வயது அமைப்புக்கு அமைய பிரதேசத்தில் 15 – 60 வயதுக்கு இடைப்பட்ட ஊழியப் படையினர் சுமார் 62% (அட்டவணை இலக்கம் 2.2) ஆவதுடன் வள உருத்தோற்ற அறிக்கையின் (2016) பிரகாரமும் 19 – 60 வயதுக்கு இடைப்பட்ட ஊழியப் படை எண்ணிக்கை கூடுதல் பெறுமதியைக் கொண்டுள்ளமை தெளிவாகிறது (வரைபு இலக்கம் 2.2).

குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் (2012) அறிக்கைகளின் பிரகாரம் இனங்களின் அடிப்படையில் சனத்தொகை தொடர்பாக கவனம் செலுத்துகையில் சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேச

சனத்தொகையில் பெரும்பான்மையினர் அதாவது 94.41% சிங்களவர்கள் என்பதுடன் எஞ்சிய 5.59% வீதத்தினர் தமிழ், முஸ்லிம், பரங்கியர் மற்றும் ஏனைய இனத்தவர்கள் ஆவார்கள் (வரைபு இரக்கம் 2.3)

***அட்டவணை இலக்கம் 2. 2 – வயது அமைப்பிற்கு அமைய சனத்தொகை (2011)***

| ***வயது இடைவெளி*** | ***சனத்தொகை*** | ***சதவீதம்*** |
|---|---|---|
| 14 – 0 | 31,628 | 23.8 |
| 59 – 15 | 83,250 | 62 |
| 60< | 19,041 | 14.2 |

மூலம் : குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் (2012)

***வரைபு இலக்கம் 2. 2 – வயது பிரமிட் பிரகாரம் சனத்தொகை (2016) – சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசம்***




மூலம் : வள உருத்தோற்ற அறிக்கை (2016)

***வரைபு இலக்கம் 2. 3 - இனங்களின் அடிப்படையில் சனத்தொகை (2016) சீதாவக்க பிரதேச சபை அதிகார பிரதேசம்***




மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

பிரதேசத்தின் வீடமைப்பு பரவுதல் தொடர்பாக கவனம் செலுத்தும் போது குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் (2016) தரவு அறிக்கைகளின் பிரகாரம் 2001 ஆம் ஆண்டு சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 27,542 ஆகும் என்பதுடன் 2011 ஆம் ஆண்டு வீடுகளின் எண்ணிக்கை 35,137 ஆகும். 2001 – 2011 கால எல்லைக்கான வருடாந்த வீடமைப்பு வளர்ச்சி வேகம் சுமார் 2.16% ஆக காணப்பட்டதுடன் சூழவுள்ள பிரதேசங்களான அவிசாவெல்ல, ஹோமாகம மற்றும் மகரகம போன்ற உள்ளூராட்சி பிரதேசங்களுடன் ஒப்பிடும் போது அது ஒரு நடுநிலைமையில் காணப்படுவதுடன் இக் கால எல்லைக்குள் ஏற்பட்ட சனத்தொகை வளர்ச்சிக்குச் சமாந்தரமாக பிரதேசத்தின் வீடமைப்பு முடிவுசெய்யப்பட்டுள்ளது.

***அட்டவணை இலக்கம் 2. 3 – பிரதேசத்தின் வீடமைப்பு பரவுதல் (2001 – 2011)***

| ***ஆண்டு*** | ***வீடுகளின் எண்ணிக்கை*** | ***சதவீதம் %*** |
|---|---|---|
| 2001 | 27,542 | 01 |
| 2011 | 35,137 | 2.16 |

மூலம் : குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் (2012)

குடிமதிப்பு புள்ளிவீபரத் திணைக்களத்தின் புள்ளிவிபரங்களின் பிரகாரம் சீதாவக்க பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் வீடு ஒன்றில் விசிக்கும் நபர்களின் எண்ணிக்கை 3.8 ஆகும். முழு நாட்டுக்கும் இப் பெறுமதி 3.9 ஆகும் என்பதுடன் கொழும்பு மாவட்டத்தில் இவ் எண்ணிக்கை 4.1 ஆகும். சீதாவக்க பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் வீடுகளின் அமைப்பு பின்வருமாறு காணப்படுகிறது.

***அட்டவணை இலக்கம் 2. 4 - சீதாவக்க பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் வீடுகளின் வகைக்கு அமைய வீடுகளின் அமைப்பு (2011)***

| *நிலைமை* | *வீடுகளின் எண்ணிக்கை* | *சதவீதம் %* |
|---|---|---|
| **தனி வீடு** | 33,839 | **96.31** |
| **இணைப்பு வீடு துணை வீடு** | 160 | **0.45** |
| **தொடர் மாடி வீடு** | 04 | **0.01** |
| **இரட்டை வீடு லயம் அறை / வரிசை வீடு** | 953 | **2.71** |
| **சேரி வீடு மற்றும் ஏனையவை** | 181 | **0.52** |
| **மொத்தம்** | 35,137 | 100 |

மூலம் : குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் (2012)

பிரதேசத்தில் ஆகக் கூடிய வீடமைப்பு அடர்த்தி கொஸ்கம, ஹங்வெல்ல, பஹத்கம, குடலுவில, குடாகந்த, கலகெதர, பாதுக்க, அருக்வத்த ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் காணப்படுவதுடன் ஆகக் குறைந்த அடர்த்தி தம்போர, உடகம, கனம்பெல்ல, திகன, இலுக்ஓவிட்ட ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் காணப்படுகிறது. பிரதான வீதிகளை அடிப்படையாகக் கொண்டு உயர்வான ஒரு நிரல் அபிவிருத்தி ஏற்பட்டுள்ளதுடன் அதனூடாகச் செல்லும் உட்டகட்டமைப்பு வசதிகள் மற்றும் அபிவிருத்தி செய்ய முடியுமான காணிகள் காணப்படுவதே இதற்கான காரணம் ஆகும். பிரதேுசத்தில்

வியாபித்துள்ள வீடமைப்பு வகைப்படுத்தல் பற்றிக் கவனத்திற் கொள்ளும் போது ஒற்றைமாடி மற்றும் இரண்டு மாடி வீடுகள் அதிகளவு வியாபித்துக் காணப்படுவதனை பிரதேசம் முழுவதும் காணக் கூடியதாக உள்ளது. வீடுகளை நிர்மாணிக்கும் போது சுவர்கள், வீட்டின் தரைகள், கூரைகளுக்குப் பயன்படுத்தும் பொருட்கள் பற்றிக் கவனம் செலுத்தப்பட்டு நிரந்தர, பகுதி அளவில் நிரந்தர மற்றும் வசதி குறைந்த எனும் வகைப்படுத்தல் அட்டவணை இலக்கம் 2.5 மூலம் காட்டப்பட்டுள்ளது.

***அட்டவணை இலக்கம் 2. 5 - சீதாவக்க அதிகாரப் பிரதேசத்தின் வீடுகளின் தரத்திற்கு ஏற்ப வகைப்படுத்தல் (2011)***

| தொகுதி | வீட்டு அலகுகளின் எண்ணிக்கை | சதவீதம் (%) |
|---|---|---|
| **நிரந்தர** | 32,326 | **92** |
| **பகுதி அளவில் நிரந்தர** | 2,108 | **06** |
| **குறைந்த வசதிகள், ஏனையவை** | 703 | **02** |
| மொத்தம் | 35,137 | 100 |

மூலம் : குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் (2012)

மேற்குறித்த தரவுகளை அடிப்படையாகக் கொண்டு திட்டமிடல் பிரதேசத்தின் வீடமைப்பு அடர்த்தி தொடர்பான பகுப்பாய்வின் போது அவற்றுள் சுமார் 92% மனித குடியிருப்புக்குப் பொருத்தமான நிலையில் காணப்படுவதுடன் சுமார் 6% போதியளவு உட்டகட்டமைப்பு வசதிகள் வழங்கப்பட வேண்டிய நிலையில் காணப்படுகிறது. இந்த வீட்டு அலகுகள் துன்தான, வலவ்வத்த, குடலுவில, வேரகொல்ல, திகன, சுதுவெல்ல, கொடிகந்த ஆகியவற்றை அண்டிய பிரதேசங்களில் வியாபித்துள்ளதுடன் சுமார் 2% வசதி குறைந்த வீடுகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய வதிவிட அலகுகள் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

நிலச் சாய்வுடன் கூடிய தன்மை மற்றும் தோட்ட விவசாய நடவடிக்கைகள், பாதுகாக்கப்பட்ட காடுகள், குறைந்தபட்ட உட்கட்டமைப்பு வசதிகள் காணப்படுதல் போன்றன விடமைப்பு அடர்த்தி குறைவடைவதற்கு ஏதுவாய் அமைந்துள்ளன. பிரதேசத்தில் காலத்திற்கக் காலம் நடைமுறைப்படுத்தப்பட்ட அரசின் காணிப் பகிர்வு கருத்திட்டத்தின் ஊடாக சனத்தொகை மற்றும் வதிவிட அலகுகள் பிரதேசங்களுக்கு மையப்படுத்தப்பட்டுள்ளதுடன் அக் காரணிகளும் வீடமைப்பு அடர்த்தி உயர்வடைவதில் ஆதிக்கம் செலுத்தி உள்ளது. பிரதேசத்தின் பிரதான நகர மத்திய நிலையமான ஹங்வெல்ல, பாதுக்க மற்றும் கொஸ்கம ஆகிய பிரதேசங்களை அண்டியதாக சுமார் 50 அனுமதியற்ற வதிவிட அலகுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் அலுத் அம்பலம, சுதுவெல்ல ஆகிய பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் வீடுகள் சிதரிய நிலையில் காணப்படுகிறது. எவ்வாறாயினும் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள புள்ளிவிபரங்களின் பிரகாரம் வீடுகள் அற்ற சனத்தொகையினர் சீதாவக்க பிரதேசத்தில் காணப்படாரம ஒரு விசேட அம்சம் ஆகும். அவ்வாறே அனுமதியற்ற நிர்மாணிப்புக்கள் அதிகரிக்கும் ஒரு போக்கு காணப்படாமையும் அவதானிக்கப்பட்டுள்ளது. ஆயினும் தற்போதுள்ள வீடுகளின் வசதிகள் மேலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய நிலையில் காணப்படுகிறது.

திட்டமிடல் பிரதேசத்தின் வீதி வலைப்பின்னல் பற்றிக் கருத்திற் கொள்கின்ற போது தற்போதுள்ள “A” தர நெடுஞ்சாலையாக பிரதேசத்தின் வடக்கு மற்றும் மேற்கு எல்லை ஊடாக அமையப் பெற்றுள்ள கொழும்பு - இரத்தினபுரி, புதிய வீதி (ஹைலெவல் வீதி) மற்றும் கொழும்பு - ஹங்வெல்ல பழைய வீதி (லோலெவல் வீதி) ஆகியவற்றை இனம் காண முடியும். “B” தர வீதிகளாக கலகெதர – ஹொரண வீதி, கோட்டே – போபே வீதி, தும்மோதர – புவக்பிட்டிய வீதி, கலுஅக்கல – லபுகம வீதி, போபே – தம்போர – லபுகம வீதி ஆகிய வீதிகள் வியாபித்துள்ளன. அதற்கு மேலதிகமாக பிரதேசம் பூராக பரவிக காணப்படும் ஏனைய வீதி வலைப்பின்னல்கள் பற்றிக் கவனம் செலுத்துகையில் பெரும்பாலும் குறுகிய வீதி வலைப்பின்னல்களை உள்ளடக்கி உள்ளது என்பதை அடையாளம் காணக் கூடியதாக உள்ளது. சீதாவக்க பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் வீதி முறைமை வியாபித்துள்ள விதம் பின்வரும் அட்டவணை இலக்கம் 2.6 மூலம் மற்றும் வரைபட இலக்கம் 2.3 மூலம் காட்டப்பட்டுள்ளது.

***அட்டவணை இலக்கம் 2. 6 - பிரதேசத்தின் வீதி முறைமையின் பரம்பல்***

| உரிமை | எண்ணிக்கை |
|---|---|
| வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான வீதிகள் | 08 |
| மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான வீதிகள் | 19 |
| பிரதேச சபைக்குச் சொந்தமான வீதிகள் | 881 |
| புகையிரத வீதி | 01 |

மூலம் : வீதி அபிவிருத்தி அதிகார சபை (2016)
மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (2016)
சீதாவக்க பிரதேச சபை (2016)

கொழும்பு – அவிசாவெல்ல பிரதான வீதியில் நாள் ஒன்றுக்கு பகல் வேளைகளில் சுமார் 30,000 மோட்டார் வாகனங்கள் கொழும்பு நோக்கி பயணிப்பதுடன் அவிசாவெல்ல நோக்கி சுமார் 20,000 வாகனங்கள் பயணிப்பதாக புள்ளிவிபரத் தரவுகளின் அடிப்படையில் அறிக்கையிடப்பட்டுள்ளது.

கொழும்பு, கோட்டையில் இருந்து அவிசாவெல்ல வரை அமையப் பெற்றுள்ள களனிவெளி புகையிரதப் பாதை சீதாவக்க அதிகாரப் பிரதேசத்தின் ஊடாக சுமார் 25 கி.மீற்றர் தூரத்திற்கு பரவிக் காணப்படுவதுடன் பாதுக்க, அருக்வத்த, அங்கம்பிட்டி, உக்கல், பின்னவல, வக, கடுகொட, கொஸகம ஊடாக இப் பாதை பயணிக்கிறது. நாளாந்தம் சுமார் 20,000 பேர் தமது போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக புகையிரத சேவையைப் பயன்படுத்துவதாக புகையிரதத் திணைக்கள அறிக்கைகள் உறுதி செய்கின்றன.

***வரைபட இலக்கம் 2. 3 – பிரதேசத்தில் காணப்படும் வீதி முறைமை (2017)***




**குறுகிய சாலை அமைப்பு**

மூலம்: - நகர அபிவிருத்தி அதிகார சபை

கி.மீ.
0 0.5 1 2 3

நகர அபிவிருத்தி அதிகார சபை

ஜனவரி 2019

மேல் மாகாண பிரிவு | சீதாவக்க அபிவிருத்தி திட்டம் (2019 - 2030) | தயாரிப்பு: மேல் மாகாண அலுவலகம

மூலம் : நகர அபிவிருத்தி அதிகாரசபை (2018)

பிரதேசத்தில் காணப்படும் ஏனைய உட்டகட்டமைப்பு வசதிகள் தொடர்பாக கலந்துரையாடும் போது ஒட்டு மொத்த சீதாவக்க பிரதேச சபை உள்ளடங்கும் வகையில் மின்சார விநியோகம் பரவிக் காணப்படுவதுடன் அங்கு அதிகூடிய மின் விநியோகம் இலங்கை மின்சார சபை மூலம் மேற்கொள்ளப்படுகிறது. (வரைபட இலக்கம் 2.4) பிரதேசத்தில் மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ளும் மார்க்கம் தொடர்பாக அட்டவணை இலக்கம் 2.7 மூலம் விளக்கப்பட்டுள்ளது.

***அட்டவணை இலக்கம் 2. 7 – பிரதேசத்திற்கான மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளும் மார்க்கங்கள்***

| எரிசக்தி மார்க்கம் | ஹங்வெல்ல பிரதேச செயலகப் பிரிவு | பாதுக்க பிரதேச செயலகப் பிரிவு |
|---|---|---|
| மின்சார சபை | 20,004 | 12,805 |
| நீர் மின்சாரம் மூலம் | 20 | 28 |
| மண்எண்ணெய் | 1,383 | 567 |
| சூரிய எரிசக்தி | 09 | 14 |
| ஏனையவை | 21 | 09 |

மூலம் : குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் (2012)

பிரதேசத்தின் மின்சார நுகர்வில் சுமார் 90% வதிவிடப் பாவனைக்கானது என்பதுடன் வர்த்தகம் மற்றும் கைத்தொழில் போன்ற ஏனைய பாவனைகளுக்கான அளவு குறைந்த மட்டத்தில் உள்ளதாக அட்டவணை இலக்கம் 2.8 மூலம் தெளிவாகிறது.

***அட்டவணை இலக்கம் 2. 8 – மின்சார நுகர்வுத் தேவை***

| பாவனை | வாடிக்கையாளர் தொடர்பு எண்ணிக்கை | |
|---|---|---|
| | தனி அவத்தை | மூன்று அவத்தை |
| வதிவிடம் | 30,354 | 368 |
| வர்த்தகம் | 2,353 | 511 |
| கைத்தொழில் | 27 | 207 |
| ஹோட்டல் | 19 | 54 |
| மதத்தலம் | 82 | 17 |

மூலம் : இலங்கை மின்சார சபை, ஹங்வெல்ல, அவிசாவெல்ல (2016)

***வரைபட இலக்கம் 2. 4 – சீதாவக்க பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் மின்சார விநியோகம் காணப்படும் பிரதேசங்கள்***




மூலம் : இலங்கை மின்சார சபை (2017)

சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் நீர் நுகர்வு பற்றி கருத்திற் கொள்ளும் போது மொத்த சனத்தொகையில் 80% வீதத்தினர் தமது குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக கிணற்று நீரைப் பயன்படுத்துகின்றனர். குழாய்நீர் வசதிகளுக்கான கேள்வியை விடவும் கூடுதலான குடிநீர் வழங்கும் ஆற்றல் பிரதேசத்தில் காணப்பட்ட போதும் காலா காலமாக சம்பிரதாய முறைகள் மீது இப் பிரதேச

மக்கள் இன்னமும் கூடுதல் ஆர்வம் காட்டுகின்ற ஒரு போக்கு காணப்படுகிறது. வரைபட இலக்கம் 2.5 மூலம் பிரதேசம் பூராக குழாய் நீர் வசதிகள் வியாபித்துள்ள விதம் காட்டப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக பிரதேசத்தில் காணப்படும் வீடுகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது 15% ஏற்கனவே குழாய்நீர் வசதியைப் பெற்றுக் கொண்டுள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை மூலம் 2012 ஆண்டு 1,715 நீர் இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் அவற்றுள் 95% வதிவிடப் பாவனைகளுக்காக வழங்கப்பட்டுள்ளது.

***வரைபட இலக்கம் 2. 5 – சீதாவக்க பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் குழாய் நீர் காணப்படும் பிரதேசங்கள்***




மூலம் : தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை (2017)

பிரதேசத்தின் கல்வி வசதிகள் தொடர்பாக கவனம் செலுத்தும் போது பிரதானமாக கல்வி நிர்வாக நடவடிக்கைகள் ஹங்வெல்ல கோட்டக் கல்வி அலுவலகம் மற்றும் பாதுக்க கோட்டக் கல்வி அலுவலகம் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

திட்டமிடல் எல்லைக்குள் 2001 ஆம் ஆண்டளவில் 53 அரசாங்க பாடசாலைகள் தாபிக்கப்பட்டுள்ளதாக கல்விக் காரியாலய அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அவற்றுள் 02 தேசிய பாடசாலைகள் உள்ளடங்கும். பிரதேசத்தின் மொத்த மாணவர் எண்ணிக்கை சுமார் 30,102 என்பதுடன் அதில் பிரதேசத்தில் காணப்படும் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் எண்ணிக்கை சுமார் 20,848 ஆகும். (அட்டவணை இலக்கம் 2.9) எஞ்சிய எண்ணிக்கையினர் திட்டமிடல் அதிகாரப் பிரதேசத்திற்கு வெளியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற பாடசாலைகளுக்குச் செல்வதை அவதானிக்க முடியும்.

***அட்டவணை இலக்கம் 2. 9 – பாடசாலை வகைப்படுத்தல் - சீதாவக்க பிரதேச சபை (2001)***

| ***பாடசாலை வகைப்படுத்தல்*** | ***பாடசாலை எண்ணிக்கை*** | ***சதவீதம் (%)*** | ***மாணவர் எண்ணிக்கை*** | ***சதவீதம் (%)*** |
|---|---|---|---|---|
| 1AB | 02 | 04 | 4,457 | 21 |
| 1C | 07 | 13 | 5,707 | 27 |
| 2 | 28 | 53 | 8,269 | 40 |
| 3 | 16 | 30 | 2,415 | 12 |
| ***மொத்தம்*** | **53** | **100** | **20,848** | **100** |

மூலம் : கல்விக் காரியாலயம், ஹங்வெல்ல (2017)

பாடசாலைகளின் ஆசியரியர் - மாணவர் விகிதாசாரம் பற்றிக் கருத்திற் கொள்ளும் போது மாயாதுன்ன மகா வித்தியாலயம், கனம்பெல்ல கனிஷ்ட வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் ஆசிரியர் - மாணவர் விகிதாசாரம் நல்ல நிலையில் காணப்படுகிறது. ஒட்டுமொத்தமாக பிரதேசத்தின் பாடசாலை முறைமையில் 70% பாடசாலைகளில் போதுமான அளவு ஆசிரியர்கள் காணப்படுவதாகவும் அதன் பிரகாரம் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் 30% ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகவும் கல்விக் காரியாலய அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாடசாலை முறைமையில் உட்டக்டமைப்பு வசதிகள் தொடர்பாக கவனம் செலுத்தும் போது சுமார் 50% பாடசாலைகளுக்கான உட்டகட்டமைப்பு வசதிகள் போதுமான அளவு காணப்படவில்லை எனவும் அந்த அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரதேசத்தில் 100 மாணவர்களுக்குக் குறைவான எண்ணிக்கை கொண்ட 14 பாடசாலைகள் அமைந்துள்ளதுடன் வசதிகள் குறைவு என்பதனால் அப் பாடசாலைகள் மூடப்படும் அபாயத்தை எதிர் நோக்கி உள்ளது. கடந்த சில வருடங்களில் அவ்வாறான 04 பாடசாலைகள் மூடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

திட்டமிடல் பிரதேசத்தின் கழிவுப்பொருள் முகாமைத்துவம் பற்றிக் கலந்துரையாடும் போது பிரதேசத்தின் வதிவிட காணித் துண்டுகளுள் கூடுதலான அளவு 10 பர்ச்சஸ்களுக்கு கூடுதலான காணித் துண்டுகளாக காணப்படுவதன் காரணமாக நாளாந்தம் தமது வீடுகளிலிருந்து உருவாகும் திண்மக் கழிவுப் பொருட்கள்

தத்தமது தோட்டங்களுக்குள் வைத்தே முகாமை செய்தல் பொதுவான ஒரு நிலைமையாகக் காணப்பட்ட போதும் திட்டமிடல் அதிகாரப் பிரதேசத்தின் பிரதான நகர மத்திய நிலையங்களான ஹங்வெல்ல, பாதுக்க, கொஸ்கம ஆகிய நகரப் பிரதேசங்களை அண்டியதாக கழிவுப் பொருட்கள் சேகரித்தல் இடம்பெறுவதுடன் நாள் ஒன்றுக்கு 08 – 09 டொன்கள் கழிவுப் பொருட்கள் ஒன்று சேர்வதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (அட்டவணை இலக்கம் 2.10). நாள் ஒன்றுக்கு ஒன்று சேரும் கழிவுகளில் சுமார் 80% உக்கும் பொருட்களாகக் காணப்படுவதுடன் 20% உக்காத கழிவுகள் ஆகும். கொஸ்கம நகரத்திற்கு அண்மையில் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படுவதுடன் அங்கு வாராந்தம் இரண்டு தடவைகள் சுமார் 04 டொன் கழிவுப் பொருட்கள் மீள்சுழற்சிக்காக பயன்படுத்தப்பட்ட போதும் அது இப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு போதுமானதாக இல்லை என்பதுடன் முறைசார்ந்த கழிவு முகாமைத்துவ முறைமை ஒன்றின் தேவைப்பாடு பிரதேசத்திற்கு ஓர் அத்தியவசிய காரணியாக உள்ளது.

***அட்டவணை இலக்கம் 2. 10 – சீதாவக்க அதிகாரப் பிரதேசத்தின் நாளாந்த திண்மக் கழிவுப்பொருள் அமைப்பு***

| பாவனை | அளவு (டொன்) |
|---|---|
| சேதன மற்றும் உக்கும் | 8 |
| உக்காத | 1 |
| கண்ணாடி மற்றும் ஏனையவை | 0.78 |
| மொத்தம் | 9.78 |

மூலம் : சீதாவக்க பிரதேச சபை (2018)

***அட்டவணை இலக்கம் 2. 11 – நாளாந்தம் ஒன்றுசேரும் திண்மக் கழிவுப்பொருட்களின் அளவு***

| பாவனை | அளவு (டொன்) |
|---|---|
| வதிவிடம் | 1.7 |
| வியாபாரம் | 2.6 |
| ஏனைய இடங்கள் (ஹோட்டல், வங்கி, கட்டடம்) | 0.35 |

மூலம் : சீதாவக்க பிரதேச சபை (2018)

பிரதேசத்தில் வியாபித்துள்ள திறந்தவெளிப் பிரதேசங்கள் மற்றும் ஓய்வு, பொழுதுபோக்கு வசதிகள் தொடர்பாக கவனம் செலுத்தும் போது தற்போதுள்ள பாடசாலை விளையாட்டு மைதானங்களுக்கு பொதுமக்கள் பிரவேசிப்பதற்கான அவகாசம் திறந்து விடப்பட்டுள்ள போதும் அது ஒட்டுமொத்த சனத்தொகையினருக்கு போதுமானதாக இல்லை. பிரதேசத்தில் காணப்படும் பொது ஓய்வு இடங்களாக லெஷர் வேர்ல்ட் பூங்கா, இலுக்விட்ட ஈர வலய தாவரப் பூங்கா (சீதாவக்க தாவரவியல் பூங்கா), தும்மோதர திவியமல எல்ல, வக் ஓயா போன்ற பிரதேசங்களை அடையாளப்படுத்த முடியும் என்பதுடன் பெருமளவு இயற்கை காடுகள் மற்றும் பாரியளவு இறப்பர் தோட்டங்கள், வயல் நிலங்கள் மற்றும் தாழ் நிலங்கள் காணப்படல் மக்களது திறந்தவெளிப் பிரதேசங்களின் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்வதற்கு

பெரிதும் துணை புரிகின்றன. பிரதேசத்தில் காணப்படும் அடையாளம் காணப்பட்ட திறந்தவெளி இடங்கள் பின் இணைப்பு இலக்கம் 01 மூலம் காட்டப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் காணப்படும் சுகாதார வசதிகள் தொடர்பாக கவனம் செலுத்தும் போது பாதுக்க பிரதேசத்தில் அமைந்துள்ள மாவட்ட வைத்தியசாலை, கொஸ்கம பிரதேசத்தில் அமைந்துள்ள தள வைத்தியசாலை ஆகியன முக்கிய இடத்தினை வகிக்கின்றன. இதற்கு மேலதிகமாக 04 ஆயுர்வேத மருந்தகங்கள், 02 சுகாதார வைத்திய உத்தியோகத்தர் அலுவலகங்கள், 24 அரச மருத்துவ சிகிச்சை நிலையங்கள் மற்றும் 08 மத்திய மருந்தகங்கள் காணப்படுவதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. மேலும் 02 தனியார் வைத்தியசாலைகள் மூலம் பிரதேசத்தின் சுகாதாரத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன. அதற்கு மேலதிகமாக குறிப்பிடத்தக்க அளவு சனத்தொகையினர் பிரதேசத்திற்கு வெளியில் அமைந்துள்ள வைத்தியசாலைகளுக்கு சுகாதார வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக செல்வது ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது.

## 2.3 திட்டப் பிரதேசத்தை நிர்ணயித்தல்

சீதாவக்க அபிவிருத்தி திட்டத்தை தயாரிப்பதற்காக பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் ஒரு பின்னணி ஆய்வு மேற்கொள்ளப்பட்டதுடன் அதனூடாக சுற்றுப்புறத்தில் காணப்படும் அதிகாரப் பிரதேசத்தின் ஊடாக ஏற்பட முடியுமான தாக்கங்கய் திட்டமிடல் பிரதேசத்தை தீர்மானிக்கும் போது கவனத்திற் கொள்ளப்பட்டது. அதன் பிரகாரம் சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தைச் சுற்றியுள்ள ஏனைய பிரதேச சபை அதிகார பிரதேசங்களில் இருந்து உருவாகும் சாதக மற்றும் பாதக நிலைமைகள் தொடர்பாக விசேடமாக ஆய்வு செய்யப்பட்டது.

சீதாவக்க அதிகாரப் பிரதேசமானது சீதாவக்கபுர நகர சபை அதிகார எல்லை மற்றும் சீதாவக்க பிரதேச சபை அதிகார எல்லை என 02 நிர்வாக அலகுகளை உள்ளடக்கி உள்ளது. சீதாவக்கபுர நகர சபை அதிகாரப் பிரதேசத்திற்காகத் தயாரிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டத்தின் ஒழுங்குவிதிகள் 1999 ஆம் ஆண்டு சட்டமாக்கப்பட்டுள்ளது. இவ் இரண்டு அதிகாரப் பிரதேசங்களையும் சுற்றி கடுவெல மாநகர சபை அதிகாரப் பிரதேசம், மகரகம மாநகர சபை அதிகாரப் பிரதேசம் மற்றும் கம்பஹ, களுத்துரை, இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்கள் அமையப் பெற்றுள்ளன. கொழும்பு மாவட்டத்தில் அமைந்துள்ள கடுவெல மற்றும் மகரகம அதிகாரப் பிரதேசங்களுக்காக புறம்பான அபிவிருத்தி திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் களுத்துரை, இரத்தினபுரி, கம்பஹ மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள அவ்வந்த அதிகாரப் பிரதேசங்களுக்காக வெவ்வேறான அபிவிருத்தி திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

அதன் பிரகாரம் சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்கான அபிவிருத்தி திட்டத்தை தயாரிப்பதற்கான தேவைப்பாடு அடையாளம் காணப்பட்டது. சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசமானது ஹங்வெல்ல பிரதேச செயலகப் பிரிவு மற்றும் பாதுக்க பிரதேச செயலகப் பிரிவு என 02 பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கி உள்ளது. ஹங்வெல்ல பிரதேச செயலகப் பிரிவில் 36 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் அமைந்துள்ளதுடன் பாதுக்க பிரதேச செயலகப் பிரிவில் 54 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் அமைந்துள்ளன.

அதன் பிரகாரம் சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குச் சொந்தமான ஒட்டுமொத்த 90 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை (பின் இணைப்பு இலக்கம் 02) உள்ளடக்கியதாக வடக்கே களனி கங்கை, மேற்கே புஸ்ஸெலி ஓயா, கிழக்கே எஸ்வத்து ஓயா மற்றும் தெற்கே ஹொரண பிரதேச சபை அதிகார

எல்லைகளை எல்லைகளாகக் கொண்ட சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் திட்டமிடல் பிரதேசமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (வரைபட இலக்கம் 2.6)

***வரைபட இலக்கம் 2. 6 – சீதாவக்க பிரதேச சபையின் அமைவிடம்***




மூலம் : நகர் அபிவிருத்தி அதிகாரசபை (2018)

அத்தியாயம்

# 03



# அபிவிருத்தி திட்டம் ஒன்றின் தேவைப்பாடு

# அத்தியாயம் 03
# அபிவிருத்தி திட்டம் ஒன்றின் தேவைப்பாடு

## 3.1 அறிமுகம்

சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் சந்தர்ப்பங்கள் மற்றும் பிரச்சினைக்குரிய நிலைமைகள் தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டதுடன் தற்போது ஆராயப்பட்டு வரும் அபிவிருத்தி திட்ட வரைவு மூலம் அந்த பிரச்சினைகளுக்கு போதியளவு தீர்வு கிடைக்கப் பெறவில்லை. அதன் பிரகாரம் பிரதேசத்தில் காணப்படும் வளங்கள் மூலம் உயர்ந்தபட்ச பயனைப் பெற்று நிலைபேறான ஓர் அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக புதியதோர் அபிவிருத்தி திட்டம் ஒன்றை தயாரிப்பதற்கான தேவை எழுந்துள்ளது.

இங்கு பிரதேசத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தும் பிரதான சிக்கல் நிலைமை சில இனம் காணப்பட்டுள்ளதுடன் அது பின்வருமாறு.

1. பிரதேசத்தில் காணப்படும் பசுமைப் போர்வை சடுதியாக குறைவடைகின்ற போக்கு
2. தற்போதுள்ள கல் உடைக்கும் மற்றும் கால்நடை வளக் கைத்தொழிலை அண்டிய குடியிருப்பாளர்களுடனான மோதல்கள்.
3. பிரதேசத்தில் ஏற்படும் வெள்ள அனர்த்த நிலைமைகள்
4. பிரதேசத்தில் காணப்படும் இயற்கை வளங்கள் நிலைபேறான அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படாமை

### 3.1.1 இனம் காணப்பட்ட பிரச்சினைகள்

பிரச்சினை இலக்கம் 01: பிரதேசத்தில் காணப்படும் பசுமைப் போர்வை சடுதியாக குறைவடைகின்ற போக்கு காணப்படல்

கொழும்பு மாவட்டத்தில் காணப்படும் உள்ளூராட்சி நிறுவனங்களுள் ஆகக் கூடிய பசுமைப் போர்வையினைக் கொண்ட ஒரு பிரதேசமாக சீதாவக்க திட்டமிடல் பிரதேசம் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அந்த பசுமைப் போர்வை சடுதியாக குறைவடையும் ஒரு போக்கு காணப்படுகிறது.

அதற்காக மேற்கொள்ளப்பட்ட என்டீவீஜ (NDVI) பகுப்பாய்வு மூலம் 1995 மற்றும் 2016 வரை திட்டமிடல் பிரதேசத்தில் அமைந்துள்ள பசுமைப் போர்வை தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டதுடன் அப் பசுமைப் போர்வை குறைவடைந்துள்ளமை அதன் மூலம் புலனாகிறது. அதன் பிரகாரம் 1995 ஆம் ஆண்டு பிரதேசத்தின் மொத்த நிலப்பரப்பில் 95% வீதமாக அதாவது 20,000 ஹெக்டயார் நிலப்பகுதிக்கும் அதிகமான ஒரு பிரதேசத்தை உள்ளடக்கிய பசுமைப் போர்வை 2016 ஆம் ஆண்டளவில் 73% வரை அதாவது 15,600 ஹெக்டயார் வரை குறைவடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் வரைபட இலக்கம் 3.1 மூலம் 1995 ஆம் ஆண்டு அதிகாரப் பிரதேசத்தில் காணப்பட்ட பசுமைப் போர்வை காட்டப்பட்டுள்ளதுடன் வரைபட இலக்கம் 3.2 மூலம் 2016 ஆம் ஆண்டு காணப்பட்ட பசுமைப் போர்வை காட்டப்பட்டுள்ளது.

***வரைபட இலக்கம் 3. 1 – திட்டமிடல் பிரதேசத்தில் பசுமைப் போர்வை குறைவடையும் போக்கு - NDVI பகுப்பாய்வு – (1995)***




மூலம : **NDVI** பகுப்பாய்வு, நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

***வரைபட இலக்கம் 3. 2 – திட்டமிடல் பிரதேசத்தில் பசுமைப் போர்வை குறைவடையும் போக்கு - NDVI பகுப்பாய்வு – (2016)***




மூலம் : **NDVI** பகுப்பாய்வு, நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

அவ்வாறு கொழும்பு மாவட்டத்தின் பசுமைப் போர்வை குறைவடைந்து செல்லும் திசையினை பின்வரும் உருவப்பட இலக்கம் 3.1 மூலம் அவதானிக்க முடியும்.

***உருவப்பட இலக்கம் 3. 1 - சீதாவக்க பிரதேசத்தின் பசுமை குறைவடைதலின் வீதத்தினை சித்தரிக்கும் மாதிரிப்படம்***




90%




85%




73%

மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

என்டிவீஜ (NDVI) பகுப்பாய்வு மூலம் 1995 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை கொழும்பு மாவட்டத்தின் பசுமைப் போர்வை மாற்றமடைந்துள்ள விதம் மற்றும் 1985 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை கொழும்பு மாவட்டத்திற்காக தயாரிக்கப்பட்ட பூமிப் பாவனை வடிவ வரைபடத்தை (வரைபட இலக்கம் 3.3) பகுப்பாய்வு செய்யும் போது கொழும்பு மாவட்டத்தின் பூமிப் பாவனை வடிவில் பெரும்பகுதி நகரமயப்படுத்தல் நோக்கி சார்ந்துள்ளமையினைக் காட்டுகிறது. அது படிப்படியாக சீதாவக்க திட்டமிடல் பிரதேசத்தை நோக்கி வியாபித்துச் செல்வது அதன் மூலம் அவதானிக்கப்பட்டுள்ளது. (உருவப்பட இலக்கம் 3.2)

***உருவப்பட இலக்கம் 3. 2 – கொழும்பு மாவட்டத்தின் பூமி பாவனை வடிவம் மாற்றமடைந்துள்ள விதம் (1985,2005,2014)***









மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

சீதாவக்க பிரதேச சபை அதகார பிரதேுசத்திற்காக மேற்கொள்ளப்பட்ட கூருணர்வுப் பகுப்பாய்வு (Sensitivity Analysis) மூலம் சூழல் கூருணர்வுப் பிரதேசங்களை நகர அபிவிருத்திப் பிரதேசங்களாக மாற்றமடைந்து வருகின்றமை உறுதிப்படுத்தப்படுவதுடன் அதனை வரைபட இலக்கம் 3.4 மூலம் தெளிவாக அடையாளம் காண முடியும்.

அதன் பிரகாரம் திட்டமிடல் பிரதேசத்தில் அதி கூருணர்வு சூழல் மற்றும் நடுத்தர கூருணர்வு சூழல் பிரதேசங்கள் காணப்படுவதை சுட்டிக்காட்ட முடியும் என்பதுடன் அது மொத்தெ நிலப் பிரதேசத்தில் 70% ஆகும். அந்த அதி கூருணர்வு சூழல் முறைமை பெரும்பாலும் களனி கங்கை, ஹைலெவெல் வீதி மற்றும் அவிசாவெல்ல வீதிகளுக்கு இடையில் போன்றே எஸ்வத்து ஓயா மற்றும் புஸ்ஸெலி ஓயா மற்றும் வக் ஓயா ஆகியவற்றை அண்டிய பிரதேசங்களில் அமைந்துள்ளன.

ஆயினும் இந்த அதி கூருணர்வு சூழல் பிரதேுசங்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் விதமாக பிரதான பிரவேச வீதி ஊடாக அதாவது ஹைலெவெல் மற்றும் லோலெவல் வீதிகள் ஊடாக வர்த்தக மற்றும் ஏனைய அபிவிருத்திச் செயற்பாடுகள் பரவலாக வியாபித்துக் காணப்படுகின்ற வித்த்தினை பிரதானமாக அவதானிக்க கூடியதாக உள்ளது. அது அபிவிருத்தி அழுத்தப் பகுப்பாய்வு (Development Pressure Analysis) வரைபட இலக்கம் 3.5 மூலம் காட்டப்படுவதுடன் எதிர்கால அபிவிருத்திச் செயற்பாடுகள் விருத்தியடைக் கூடிய பிரதேசங்களை இனம் காண்பதற்காக மேற்கொள்ளப்பட்ட சாத்தியக்கூற்றுப் பகுப்பாய்வு (Potential Analysis) வரைபட இலக்கம் 3.6 மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

***வரைபட இலக்கம் 3. 3 – திட்டமிடல் பிரதேசத்தின் பூமிப் பாவனைத் திட்டம் (2016)***




மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

***வரைபட இலக்கம் 3. 4 - சூழல் கூருணர்வு குறிகாட்டி (2017)***




மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

***வரைபட இலக்கம் 3. 5 - அபிவிருத்தி அழுத்தப் பகுப்பாய்வு (2017)***




வளர்ச்சி அழுத்த பகுப்பாய்வு

மூலம்: - நகர அபிவிருத்தி அதிகார சபை

கி.மீ.
0 0.5 1 2 3

நகர அபிவிருத்தி அதிகார சபை

ஜனவரி 2019

மேல் மாகாண பிரிவு | சீதாவக்க அபிவிருத்தி திட்டம் (2019 - 2030) | தயாரிப்பு: மேல் மாகாண அலுவலகம்

மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

***வரைபட இலக்கம் 3. 6 - சாத்தியக் கூற்று பகுப்பாய்வு (2017)***




மூலம் : நகர அப்விருத்தி அதிகார சபை (2018)

அவ்வாறே தற்போது காணப்படுவதைப் போன்றே அபிவிருத்தி நடவடிக்கைகள் வியாபித்துச் செல்லல் தொடர்ந்தும் இடம்பெறுமாயின் முறைசாராத விதமாக சூழல் அதி கூருணர்வு மற்றும் நடுத்தர சூழல் கூருணர்வு பிரதேசங்கள் பாரிய அச்சுறுத்தலுக்கு உட்படக்கூடும் என்பது புலனாகிறது. ஆகவே நடைமுறையில் போன்றே எதிர்காலத்திலும் திட்டமிடல் பிரதேசத்திற்கே உரித்தான இயற்கை சூழல் முறைமைக்கு அச்சுறுத்தல் உள்ளதாக முடிவு செய்ய முடியும் என்பதுடன் இயற்கை பசுமைப் போர்வை குறைவடைந்து செல்வதைப் போன்றே சிக்கல் நிறைந்த அபிவிருத்தி செல்திசை தொடர்ந்தும் இத் திட்டமிடல் பிரதேசத்தில் ஏற்படக் கூடும் என்ற முடிவிற்கு வர முடியும்.

மேற்குறித்த ஆய்வுகளுக்கு மேலதிகமாக பிரதேுசத்தில் காணப்படும் சூழல் வெப்பநிலை தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டதுடன் அதன் போது கூகல் இணைய வசதிகள் மூலம் காற்றுத் திசைப் பகுப்பாய்வு மென்பொருள் ஊடாக 1996 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை கொழும்பு மாவட்டத்தின் காற்றின் திசை பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டது. இலங்கையில் காற்று வீசும் போக்கில் சுமார் 59% மேற்கு மற்றும் தென் மேற்குத் திசையில் இருந்து கிழக்குத் திசை நோக்கி பயணிப்பதாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது. அதன் பிரகாரம் மேற்கு திசையில் இருந்து கொழும்பு மற்றும் கொழும்பைச் சூழவுள்ள பிரதேசங்களின் ஊடாக சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தை நோக்கி காற்று வீசுகிறது. தற்போது கொழும்பு மற்றும் கொழும்பைச் சூழவுள்ள பிரதேசங்கள் அதிக அடர்த்தியுடன் அபிவிருத்தி அடைந்துள்ளதுடன் அதன் காரணமாக அதனைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் சூழல் வெப்பநிலையின் பரவல் ஓர் உயர்வான பெறுமதியைக் கொண்டுள்ளது. இதன் தாக்கம் காற்றின் பயணத் திசையுடன் சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் நோக்கிச் செல்வதற்கான அதிக சாத்தியம் உள்ள அதே நேரம் தற்போது அப் பிரதேசத்தில் காணப்படும் பசுமைப் போர்வை மூலம் இந்த வெப்பநிலையினை குறிப்பிடத்தக்க அளவு குறைத்துக் கொள்வதற்கு துணை புரிந்துள்ள போதும் மேலும் இப் பிரதேசத்தின் சூழல் கூருணர்வு வலயங்கள் மற்றும் பசுமைப் போர்வைக்கு தடைகள் ஏற்படும் விதமாக அபிவிருத்திச் செயற்பாடுகள் நடைபெறுமாயின் கொழும்பு மாவட்டத்தில் வாழ்வதற்குப் பொருத்தமான சுமார் $26C^0$ வெப்பநிலையுடன் கூடிய சூழல் முறைமை ஒன்று காணப்படும் இத் திட்டமிடல் பிரதேசத்திற்கு பாதகமான விளைவுகள் ஏற்டக் கூடிய அதிகளவு சாத்தியம் நிலவுகிறது.

***உருவப்பட இலக்கம் 3. 3 – கொழும்பு மாவட்டத்தின் வெப்பநிலை மாற்றமடைதல***




மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை

அதன் பிரகாரம் மேலே குறிப்பிடப்பட்ட பசுமைப் போர்வை குறைவடையும் போக்கினை திட்டமிடல் பிரதேசத்தில் காணப்படும் அதி கூருணர்வு சூழல் முறைமை மற்றும் நடுத்தர சூழல் கூருணர்வுப் பிரதேசங்கள் அழிவடையும் அச்சுறுத்தல் காரணமாக வலய ரீதியான மற்றும் தேசிய ரீதியில் இப் பிரதேசத்தைப் பாதுகாப்பது அத்தியவசியம் என்பது இனம் காணப்பட்டது.

பிரச்சினை இலக்கம் 02: தற்போதுள்ள கல் உடைக்கும் மற்றும் கால்நடை வளக் கைத்தொழிலை அண்டிய குடியிருப்பாளர்களுடனான மோதல்கள்

பிரதேசத்தின் கைத்தொழில்களுக்கும் வதிவிடக் குடியிருப்பாளர்களுக்கும் இடையில் இடம்பெறும் மோதல்கள் திட்டமிடல் பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட அதற்கடுத்த பிரதான பிரச்சினை ஆகும். அதன் போது சீதாவக்க பிரதேசத்தின் பிரதான பொருளாதார செயற்பாடுகள் தொடர்பாக கவனம் செலுத்தும் போது கால்நடை வளக் கைத்தொழில் மற்றும் கருங்கல் உடைக்கும் கைத்தொழில் ஆகியன பிரதான இடத்தை வகிப்பதுடன் சூழல் ரீதியாக ஆகக் கூடிய பாதக விளைவுகளை ஏற்படுத்தும் கைத்தொழில் வகையைச் சேர்ந்தவை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. அங்கு திட்டமிடல் பிரதேசம் பூராக சிறிய அளவு மற்றும் பாரியளவு விலங்குப் பண்ணைகள் பரவிக் காணப்படுகிறது. அது வரைபட இலக்கம் 3.7 மூலம் காட்டப்படுகிறது.

திட்டமிடல் பிரதேசத்தில் உள்ள பாதுக்க நிர்வாகப் பிரதேசத்தில் மாத்திரம் 2016 ஆம் ஆண்டு மாடு, ஆடு, கோழி, பன்றி ஆகிய பண்ணைகளை அண்டிய தொழில்களில் 1,700 குடும்பங்கள் ஈடுபட்டுள்ளதுடன் அது பாதுக்க பிரதேச சபைப் பிரதேசத்தில் வாழும் மொத்த குடும்பங்களின் எண்ணிக்கையில் 10% வீதம் ஆகும்.

அவ்வாறே சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் வாழும் மொத்த சனத்தொகையில் 17% வீதம் கால்நடை வள கைத்தொழிலை அண்டிய தொழில்களில் ஈடுபட்டுள்ளார்கள். அதன் பிரகாரம் திட்டமிடல் பிரதேசத்தில் சுமார் 15,000 விலங்குப் பண்ணைகள் பரவிக் காணப்படுகிறது. இங்கு பிரதானமாக கொழும்பு மாவட்டத்தில் விலங்கு உற்பத்திகளில் உயர்வானதொரு சதவீதப் பங்களிப்பு இப் பிரதேசத்தில் காணப்படும் பண்ணைகளினூடாக வழங்கப்படுகிறது. ஆகவே திட்டமிடல் பிரதேசத்தில் பிரதான கைத்தொழிலாக கால்நடை வளர்ப்புக் கைத்தொழில் பிரசித்தி பெற்று விளங்குவது அடையாளம் காணப்பட்டுள்ளது.

ஆயினும் பிரதேசத்தில் பிரிவு மட்டத்திலான பிரச்சினைகளை அவதானிக்கின்ற போது கூடுதல் எண்ணிக்கையான பிரிவுகளில் பன்றி கோழி போன்ற பண்ணைகளின் கழிவுப் பொருட்கள் முறையற்ற விதத்தில் அகற்றப்படல் காரணமாக பெரும்பாலான சமூக சுற்றாடல் பிரச்சினைகள் ஏற்படுடுவது புலனாகிறது.

***வரைபட இலக்கம் 3. 7 - கால்நடை வள கைத்தொழில் கருத்திட்டம் (2017)***




மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

இங்கு பாரியளவு பன்றி மற்றும் கோழிப் பண்ணைகளில் இருந்து அகற்றப்படும் கழிவுப் கொருட்கள் புஸ்ஸெலி ஓயா, வக் ஓயா மற்றும் களனி கங்கை போன்ற பிரதான நீர் நிலைகளில் கொட்டப்படும் ஒரு போக்கு நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் ஒரு சிக்கல் நிலைமையாக மாற்றம் பெற்றுள்ளது.

மேலும் கால்நடைப் பண்ணைகளில் இருந்து வெளியேற்றப்படும் துர் நாற்றம், விலங்குக் கழிவுகள் நீர்சார்ந்த சூழலுடன் ஒன்று கலத்தல் போன்ற சிக்கல் நிலைமைகள் காரணமாக உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றுக்கு கிடைக்கப் பெறும் முறைப்பாடுகளின் எண்ணிக்கையில் ஓர் அதிகரிப்பினைக் காட்டுகிறது. அது தொடர்பாக 2016 ஆம் ஆண்டு 45 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றதுடன் 2017 ஆம் ஆண்டு அம் முறைப்பாடுகளின் எண்ணிக்கை 70 ஆக உயர்வடைந்துள்ளது.

இங்கு ஆகக் கூடுதலான முறைப்பாடுகள் பதிவாகி உள்ள பிரிவுகளாக பிரதேச செயலக வள வெட்டுமுகத் தோற்றம் - 2016 அறிக்கைகளின் பிரகாரம் மேல் கொஸ்கம தெற்கு, எஸ்வத்த வடக்கு, கீழ் கொஸ்கம கிழக்கு ஏ, கனம்பெல்ல மேற்கு ஆகிய பிரிவுகளை உதாரணமாக சுட்டிக் காட்ட முடியும்.

*வரைபு இலக்கம் 3. 1 – கால்நடை வள கைத்தொழில் தொடர்பான முறைப்பாடுகள்*




மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

***உருவப்பட இலக்கம் 3. 4 – பிரதேசத்தின் கால்நடை வள கைத்தொழில் பரம்பல்***



மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

திட்டமிடல் பிரதேசத்தில் பரரவலாக வியாபித்துக் காணப்படும் பிரதானமான ஒரு கைத்தொழிலாக கருங்கற்கள் உடைக்கும் கைத்தொழிலை அறிமுகப்படுத்த முடியும். அக் கைத்தொழில்கள் வதிவிடப் பிரதேசங்களுக்கு அண்மையில் அமைந்துள்ளதன் காரணமாக அங்கு வாழும் குடியிருப்பாளர்களுக்கும் கருங்கற்கள் உடைக்கும் கைத்தொழிலாளர்களுக்கும் இடையில் சிக்கல் நிலைமை ஏற்படுகின்றமை அக் கைத்தொழிலுக்கு பாரிய அச்சுறுத்தலாக உள்ளது.

இங்கு சனத்தொகை அடர்த்தி கூடிய பிரதேசங்கள் மற்றும் கருங்கற்கள் உடைக்கும் பிரதான கைத்தொழில்கள் அமைந்துள்ள பிரதேசங்களை அபிவிருத்தி செய்யும் போது மிகத் தெளிவாக சனத்தொகை அடர்த்தி கூடிய பிரதேசங்களுக்கு அண்மையில் கருங்கற்கள் உடைக்கும் கைத்தொழில்கள் அமைந்துள்ளமை புலனாகிறது. (வரைபட இலக்கம் 3.8 மூலம் பிரதேசத்தின் சனத்தொகை அடர்த்தி மற்றும் வரைபட இலக்கம் 3.9 மூலம் பிரதேசத்தின் கருங்கற்கள் உடைக்கும் கைத்தொழில் பரம்பல் காட்டப்பட்டுள்ளது.)

திட்டமிடல் பிரதேசத்தில் குடியிருப்பாளர்கள் பெருமளவில் வாழும் நுரானிவத்த, கஜுவத்த, குடாகந்த, தித்தெனியவத்த, தெல்கஸ்ஹேன போன்ற பகுதிகளில் பாரியளவுவில் கருங்கற்கள உடைக்கும் கைத்தொழில் மேற்கொள்ளப்படுகிறது.

***வரைபட இலக்கம் 3. 8 - பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் சனத்தொகை அடர்த்தி கூடிய பிரதேசங்கள் (2016)***




மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

***வரைபட இலக்கம் 3. 9 - கருங்கற்கள் உடைக்கும் பிரதான கைத்தொழில்கள் அமைந்துள்ள பிரதேசங்கள்***




மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

திட்டமிடல் அதிகாரப் பிரதேசத்தில் கருங்கற்கள் அகழ்வு தொடர்பாக கிடைக்ப்பெற்றுள்ள முறைப்பாட்டுத் தரவுகளின் எண்ணிக்கை 2015ஆம் மற்றும் 2017ஆம் ஆண்டுகள் தொடர்பாக கருத்திற் கொள்ளும் போது 06 முறைப்பாடுகள் தொடக்கம் 12 முறைப்பாடுகள் வரை அதிகரித்துள்ளமையினை அவதானிக்க முடியும். அதனை பின்வரும் வரைபு இலக்கம் 3.2 மூலம் காட்ட முடியும்.

***வரைபு இலக்கம் 3. 2 – கருங்கற் கைத்தொழில் தொடர்பான முறைப்பாடுகள்***




மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

திட்டமிடல் பிரதேசத்தில் கருங்கற்கள் உடைக்கும் கைத்தொழில்கள் அமைந்துள்ள சுமார் 47 இடங்கள் இனம் காணப்பட்டுள்ளதுடன் பாரியளவில் மேற்கொள்ளப்படும் 06 கருங்கற்கள் உடைக்கும் கைத்தொழில்களைப் பிரதானமாக அடையாளம் காண முடியும். அவ்வாறான 11 கருங்கற்கள் உடைக்கும் கைத்தொழில்கள் தொடர்பில் பொதுமக்கள் எதிர்ப்புத் தெரவித்துள்ளதாக சீதாவக்க பிரதேச செயலகத்திற்குக் கிடைக்கப் பெற்றுள்ள தரவு ஆய்வின் போது அவதானிக்கப்பட்டுள்ளது. அதன் போது கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளாக கட்டடங்களில் வெடிப்புக் காணப்படல், வீதிகள் பழுதடைதல், அதிக தூசி, அதிக சப்தம், திட்டமிடல் பிரதேசத்தின் நிலத் தோற்றம் அழிவடைதல், உயிர் பல்வகைமைக்குப் பாதிப்பு ஏற்படல், நில்க கீழ்நீர் வற்றிப் போவதால் கிணற்று நீரைப் பயன்படுத்தும் மக்கள் அசௌகரியங்களுக்கு உட்படல் போன்ற சூழல் மற்றும் சமூகப் பிரச்சினைகளுக்கு பிரதேசத்தில் வாழும் மக்கள் முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. அப் பிரச்சினைகளை பின்வரும் உருவப்படம் மூலமும் அவதானிக்க முடியும்.

***உருவப்பட இலக்கம் 3. 5 – பிரதேசத்தின் கருங்கல் உடைக்கும் கைத்தொழில***



மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

பிரதேசத்தின் பிரதான கைத்தொழில்களாக பரந்துபட்டுக் காணப்படும் கல்நடை வளக் கைத்தொழல் மற்றும் கருங்கற்கள் உடைக்கும் கைத்தொழில் மூலமாக பகுதி அளவில் நகரமயத்துடன் கூடிய வதிவிச் சூழலைக் கொண்ட இத் திட்டமிடல் பிரதேசத்தில் உருவாகி உள்ள சுற்றாடல் மற்றும் சமூகப் பிரச்சினை நிலைமைகளை குறைப்பதற்காக புதியதொரு திட்டமிடலின் தேவை ஏற்பட்டுள்ளமையினை இனம் காண முடியும்.

## பிரச்சினை இலக்கம் 03 : பிரதேசத்தில் ஏற்படும் வெள்ள அனர்த்த நிலைமைகள்

சீதாவக்க பிரதேுச செயலகப் பிரிவு மற்றும் பாதுக்க பிரதேச செயலகப் பிரிவின் 2016 ஆம் ஆண்டுக்கான அறிக்கைகளின் பிரகாரம் வெள்ளம் காரணமாக முழுமையாக மற்றும் பகுதி அளவில் சேதமடைந்த வீடுகள் மற்றும் கட்டடங்களின் எண்ணிக்கை முறையே 2,135 மற்றும் 108 என அறிக்கையிடப்பட்டுள்ளது. அதன் போது சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் வெள்ள நிலைமை காரணமாக சுமார் 9,000 பேர்கள் பாதிக்கப்பட்டார்கள்.

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தரவுகளின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டு சீதாவக்க பிரதேச செயலாளர் பிரிவில் 34 கிராஅ உத்தியோகத்தர் பிரிவுகள் வெள்ள அனர்த்தத்திற்கு ஆளானதுடன் பாதுக்க பிரதேச செயலாளர் பிரிவில் 05 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் வெள்ள அனர்த்தத்திற்கு ஆளாக்கப்பட்து. இதற்கு மேலதிகமாக வெள்ள அனர்த்தத்திற்கு ஆளாகி உள்ள மொத்த நிலப் பரப்பு 5,871 ஏக்கர்கள் ஆவதுடன் அது திட்டமிடல் பிரதேசத்தின் மொத்த நிலப்பரப்பின் சதவீதமாகக் கூறுமிடத்து 11% சதவீதம் ஆகும். மேலும் இவ்வாறு வெள்ள அனர்த்தத்திற்கு ஆளாகும் பிரதேசங்கள் பிரதானமாக ஏற்கனவே பகுதி அளவில் நகரமயமாக்கல் சிறப்பாக இடம்பெற்றுள்ள மற்றும் சன அடர்த்தி அதிகமாக உள்ள பிரதேசங்களிலேயே அமைந்துள்ளது. அதன் போது விசேடமாக ஹைலெவல் வீதியின் இரண்டு பக்கங்களிலும் அவிசாவெல்ல வீதியின் இரண்டு பக்கங்களிலும் ஹங்வெல்ல வீதி, கொஸ்கம நகரத்தை அண்டியதாக மற்றும் பாதுக்க நகரத்தை அடிப்படையாகக் கொண்டு இவ்வாறு வெள்ள அச்சுறுத்தலுக்கு ஆளாவதனை அவதானிக்க முடியும்.

கடந்த சில வருடங்களாக களனி கங்கை பெருக்கெடுத்ததன் காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ள நிலைமைகள் தொடர்பான அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத் தரவுகளைப் பகுப்பாய்வு செய்கின்ற போது பிரதானமாக 05 தொடக்கம் 09 அடி வரையான மாற்றங்களுடன் வெள்ள நிலைமைகளுக்கு மேலே குறிப்பிடப்பட்ட பிரதேசங்கள் ஆளாவது புலப்படுகிறது. (வரைபட இலக்கம் 3.10 மூலம் வெள்ள அபாயத்திற்கு ஆளாகும் பிரதேசங்கள் காட்டப்பட்டுள்ளது.)

தொடர்ந்தும் 2010 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான தரவுகளைப் பகுப்பாய்வு செய்கின்ற போது களனி கங்கை பெருக்கெடுப்பதன் காரணமாக ஏற்படும் வெள்ள அச்சுறுத்தல் உருவாகும் சாத்தியப்பாடு ஓராண்டு காலம் மற்றும் ஆகக் கூடியது 10 ஆண்டு காலத்திற்குள் அடிக்கடி இடம்பெறுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. மக்களின் நாளாந்த வாழ்வு மீது ஒரு குறிப்பிடத்தக்க அளவு அச்சுறுத்தல் இந்த வெள்ள அனர்த்த அச்சுறுத்தல் மூலம் ஏற்படுவது இதன் மூலம் தெளிவாவதுடன் இப் பிரச்சினையினை இழிவுபடுத்தி நிலைபேறான ஓர் அபிவிருத்தியை நோக்கிச் செல்வதற்கான புதியதோர் அபிவிருத்தி திட்டத்தின் தேவையினை இனம் காண முடியும்.

***வரைபட இலக்கம் 3. 10 - வெள்ள அச்சுறுத்தலுக்கு ஆளாகும் பிரதேசங்கள் (2016)***




மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

## பிரச்சினை இலக்கம் 04 : பிரதேசத்தில் காணப்படும் இயற்கை வளங்கள் நிலைபேறான அபிவிருத்திக்காக பயன்படுத்தப்படாமை

பிரதேசத்தில் காணப்படும் வளங்கள் தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டதுடன் அதன் போது பிரதேசத்தில் காணப்படும் இயற்கை வளங்கள் திட்டமிடல் பிரதேசத்தின் நிலைபேறான அபிவிருத்திக்காக முழுமையாக பயன்படுத்தப்படவில்லை என்பது அடையாளம் காணப்பட்டதுடன் காணப்படும் வளங்கள் 03 தொகுதிகளின் கீழ் இனம் காணப்பட்டது.

### அ) இயற்கை கூருணர்வு சூழல் முறைமை ஒன்று அமையப்பெறல்

இத் திட்டமிடல் பிரதேசத்தில் வருடம் முழுவதும் காணப்படும் மழை காரணமாக என்றும் பசுமையான மற்றும் குறிப்பிட்ட பருவத்தில் இலை உதிரக் கூடிய காடுகளுடன் கூடிய சூழல் முறைமை ஒன்றைக் காண முடியும். அதற்கு உதாரணமாக இலுக்ஓவிட்ட, இதிகட காடுகள் போன்ற சூழல் முறைகளைக் குறிப்பிடலாம். இதற்கு மேலதிகமாக சீதாவக்க பிரதேச சபையில் உள்ள ஈர நிலங்கள் பிரதானமாக வயல்கள் மற்றும் சதுப்பு நிலங்களை உள்ளடக்கி உள்ளதுடன் அவற்றுள் பராவ ஈர வலயம் முக்கிய இடத்தினை வகிக்கிறது.

இதற்கு மேலதிகமாக கொழும்பு மாவட்டத்தில் அமைந்துள்ள பிரதான நீர் வீழ்சிகளான எல்ல உட எல்ல, ரன்முது எல்ல, குமாரி எல்ல, தம்போர போன்ற நீர் வீழ்ச்சிகள் இத் திட்டமிடல் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ளமையினை ஒரு விசேட அம்சமாகக் கருத முடியும். சீதாவக்க பிரதேச சபை அதிகார பிரதேத்திற்கு வடக்கு எல்லையில் பாயும் களனி கங்கையைப் பிரதானமாகக் கொண்ட வக் ஓயா, புஸ்ஸெலி ஓயா ஆகியன பிரதான நீர் வடிவத்திற்கு பங்களிப்புச் செய்வதுடன் பிரதேசத்தில் வியாபித்துள்ள சிறிய வாய்க்கால்களை உள்ளடக்கிய நீர் வழிந்தோடும் வடிவங்களைக் காணக் கூடியதாக உள்ளது. அதன் மூலம் பிரதேசத்தின் சூழல் பெறுமதிகளை மேலும் அதிகரிப்பதற்கு ஏதுவாய் அமைந்துள்ளது. இதற்கு மேலதிகமாக தேசிய ரீதியில் பெறுமதி வாய்ந்ததாகக் காணப்படும் பிரதான நீர்த்தேக்கமான லபுகம நீர்த்தேக்கம் மற்றும் கலட்டுவான நீர்த்தேக்கங்களுடன் தொடர்புடைய ஒரு சூழல் முறைமை பிரதேசத்தில் அமைந்திருப்பதும் பிரதேசத்தில் காணப்படும் சூழல் ரீதியான பெறுமதியை உயர்வடையச் செய்ய ஏதுவாய் அமைந்துள்ளது. ஆயினும் அப் பிரதேசத்தில் காணப்படும் இயற்கை வளங்கள் சுற்றுலாக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக குறிப்பிடத்தக்க அளவு பயன்படுத்தப்படவில்லை.

### ஆ) பாதுகாக்கப்படாத தொல்பொருளியல் பெறுமதி வாய்ந்த இடங்கள் அமையப்பெறல்

பிரசித்தி பெற்ற விஜயபா கொல்லைக்குப் பின்னர் சிறியதொரு இராச்சியமாக ஆரம்பிக்கப்பட்ட சீதாவக்க பிரதேச சபை பின்னர் காலனித்துவ ஆட்சிக் காலத்திற்கும் உட்பட்டிருந்தது. பௌத்த மதத்தை அடிப்படையாகக் கொண்ட தொல்பொருளியல் நினைவுத் தூபிகள், மகா விஹார சம்பிரதாயம் போன்றே ஆங்கிலேயர், ஒல்லாந்தர் மற்றும் போர்த்துக்கேய ஆட்சிக் காலத்திற்குரிய கட்டட நினைவுத் தூபிகள் இப் பிரதேசம் முழுவதும் பரவிக் காணப்படுகிறது.

***உருவப்பட இலக்கம் 3. 6 – பிரதேசத்தில் காணப்படும் ஒருசில தொல்பொருளியல் இடங்கள்***







மூலம் : ஹங்வெல்ல, பாதுக்க பிரதேச செயலக, வள வெட்டுமுகத் தோற்றம் (2016)

யினும் இவற்றைப் பேணிப் பாதுகாத்து நிலைபேறான அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படவில்லை என்பது புலனாகிறது. அதன் போது பாதுகாக்கப்படாத தொல்பொருளியல் வளங்கள் (வரைபட இலக்கம் 3.11) அமைந்துள்ள பிரதேசங்கள் தொடர்பான விபரங்களை பின்வருமாறு அட்டவணை இலக்கம் 3.1 மூலம் சுட்டிக் காட்ட முடியும்.

***அட்டவணை இலக்கம 3. 1 - சீதாவக்க பிரதேச செயலகப் பிரிவில் (ஹங்வெல்ல) பாதுகாக்கப்படாத தொல்பொருளியல் இடங்கள்***

| தொடர் இலக்கம் | இடம் |
|---|---|
| 1. | பழைய அரண்மனை |
| 2. | நீர் அகழி |
| 3. | இனிப்பு பலா மரம் |
| 4. | கல் ஆசனம் |
| 5. | லெவ்கே சிலை |
| 6. | அவமண்டல குகை |
| 7. | பஞ்ஞாகுல |
| 8. | கல் குட்டை |
| 9. | நோர்த் அம்பலன்வத்த கற்குகை 02 |

மூலம் : வள வெட்டுமுகத் தோற்ற அறிக்கை (2016)

***அட்டவணை இலக்கம 3. 2 - பாதுக்க பிரதேச செயலகப் பிரிவில் பாதுகாக்கப்படாத தொல்பொருளியல் இடங்கள்***

| தொடர் இலக்கம் | இடம் |
|---|---|
| 1. | பழைய கட்டடக் கலையினை எடுத்துக் காட்டும் மொரகெலே வங்களா |
| 2. | வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்குரிய கூரகல மலையில் அமைந்துள்ள கற்குகை |
| 3. | பாதுக்க வாடிவீடு |
| 4. | எழுவாகல புராதன ரஜமகா விஹாரை |
| 5. | ராஜசிங்க காலத்திற்குரிய நிக்கவாகந்த நிதன்கல |
| 6. | பழைய சுவர் ஓவியங்களுடன் கூடிய பரம தம்ம நிகேதனதராமை |
| 7. | ஆங்கிலேயர் காலத்திற்குரிய சங்கிலிப் பாலம் |

மூலம் : வள வெட்டுமுகத் தோற்ற அறிக்கை (2016)

இதன் பிரகாரம் தொல்பொருயில் பெறுமதி வாய்ந்த இந்த வளங்களைப் பாதுகாத்து சுற்றுலாக் கைத்தொழிலுக்காகப் பயன்படுத்தி பிரதேசத்தில் வாழும் மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்தல் போன்றே திட்டமிடல் பிரதேசத்தின் பெருமையை வலுவடையச் செய்வதற்காகவும் புதியதோர் அபிவிருத்தி திட்டத்தை ஏதுவாக்க முடியும் என்பதைச் சுட்டிக் காட்ட முடியும்.

**(இ) சூழல் நட்புறவு ஹோட்டல்கள் மற்றும் விடுதிகள் போன்றன அமையப் பெறல்.**

தேசிய ரீதியில் அவதானம் செலுத்தப்பட்டுள்ள சீதாவக்க தாவரவியல் பூங்கா மற்றும் லெஷர் வேர்ல்ட் போன்ற இயற்கைச் சூழலுடன் இணைந்த பொருளாதாரச் செயற்பாடுகள் இப் பிரதேசத்தில் தாபிக்கப்பட்டுள்ளது.

***உருவப்பட இலக்கம் 3. 7 – பிரதேசத்தில் காணப்படும் சூழல் நட்புறவு ஹோட்டல்கள் மற்றும் விடுதிகள***


லெஷர் வேர்ல்ட்
சீதாவக்க தாவரவியல் பூங்கா

மூலம் : ஹங்வெல்ல, பாதுக்க பிரதேச செயலகம் வள வெட்டுமுகத் தோற்றம் (2016)

திட்டமிடல் பிரதேசத்தில் காணப்படும் இந்த வளங்கள் மூலம் பிரதேசத்தை நோக்கி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரச் செய்து சூழல் நட்புறுவுடன் பிரதேசத்தின் பொருளாதாரத்தை வலுவடையச் செய்வதற்கு புதிய அபிவிருத்தி திட்டத்தை ஏதுவாக்கிக் கொள்ள முடியும் என்பதைச் சுட்டிக்காட்ட முடியும்.

***வரைபட இலக்கம் 3. 11 – பாதுகாக்கப்படாத தொல்பொருளியல் இடங்கள் (2017)***




**கண்டுபிடிக்கப்படாத தொல்பொருள் தளங்கள்**

மூலம்: - நகர அபிவிருத்தி அதிகார சபை

0 0.5 1 2 3 கி.மீ.

நகர அபிவிருத்தி அதிகார சபை

ஜனவரி 2019

மேல் மாகாண பிரிவு | சீதாவக்க அபிவிருத்தி திட்டம் (2019 - 2030) | தயாரிப்பு: மேல் மாகாண அலுவலகம்

மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

## 3.2 தரப்பினர்களின் கருத்து

பிரதேசத்தில் அமைந்துள்ள நிறுவனங்கள் மற்றும் துறைகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் தரப்பினர்களினால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் மற்றும் யோசனைகள் ''என்விவோ'' (NVIVO) மென்பொருளைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டதுடன் அது தொடர்பாக நகர வடிவமைப்பு தரப்பினர்களினால் மேலதிக பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டு அபிவிருத்தி திட்டம் ஒன்றை தயாரிப்பதற்கான தேவை இனம் காணப்பட்டது.

***உருவப்பட இலக்கம் 3. 8 - தரப்பினர்களின் கருத்துக்கள***




மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

தரப்பினர்களிடம் பெறப்பட்ட பிரச்சினைகளுள் முறையான உட்டகட்டமைப்பு வசதிகளில் காணப்படும் குறைபாடு, வெள்ளம் மற்றும் மண்சரிவு அபாயம், கருங்கல் உடைக்கும் கைத்தொழிலுடனான வதிவிடக் குடியிருப்பாளர்களின் மோதல், காடழிப்பு மற்றும் விவசாயக் காணிகள் வேறு பாவனைகளுக்காக மாற்றப்படல் போன்றன இனம் காணப்பட்டுள்ளது. சந்தர்ப்பங்களாக பாரியளவு ஊழியர் படை காணப்படல், விவசாயக் காணிகள் பாரியளவு காணப்படல், ஏற்கனவே காணப்படும் கைத்தொழில்கள், லபுகம மற்றும் கலட்டுவான நீர் மூலங்கள் காணப்படல் ஆகியன அடையாளம் காணப்பட்டுள்ளது.

தரப்பினர்களின் கருத்துக்கள் மற்றும் யோசனைகள் மற்றும் மேலே கலந்துரையாடப்பட்ட அடையாளம் காணப்பட்ட சிக்கல் நிறைந்த நிலைமைகள் ஆகியவற்றுக்கிடையே சமத்துவம் காணப்படுவதனால் அவ்வாறான சிக்கல்களைக் குறைப்பதற்காக முறையான புதியதோர் அபிவிருத்தி திட்டம் ஒன்றினை உருவாக்கும் தேவை உள்ளதாக இனம் காணப்பட்டுள்ளது.

இந்த அத்தியாயத்தின் மூலம் சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் பிரச்சினைகள் மற்றும் வாய்ப்புக்கள் தொடர்பான ஆரம்ப ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான ஒழுங்கான தொலைநோக்கின் ஊடாக பிரதேசத்தில் வாழும் மற்றும் குடிபெயரும் சனத்தொகையினருக்கு சிறந்ததொரு சூழலை உருவாக்குவதற்கான விபரமானதொரு விளக்கம் இத் திட்டத்தின் இரண்டாம் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



# இரண்டாம் பகுதி

## அமைச்சரின் அனுமதி

### சீதாவக்க பிரதேச சபை, அபிவிருத்தி திட்டத்திற்கான அனுமதி

2019.07.09 ஆம் திகதி நகர அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமைத்துவ சபையினால் பரிந்துரைக்கப்பட்டதற்கு அமைய, நகர அபிவிருத்தி அதிகார சபையின் 1978 ஆம் ஆண்டின் சட்ட இலக்கம் 41 இல், திருத்தியமைக்கப்பட்ட 1982 ஆம் ஆண்டின் சட்ட இலக்கம் 4 இன், பிரிவு 8F இன் பிரகாரம் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் சீதாவக்க பிரதேச சபை, அபிவிருத்தி திட்டத்திற்கு பாரிய நகரம் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலி சம்பிக ரணவக்க ஆகிய நான் இத்தால் அனுமதி வழங்குகின்றேன்

.................................................................
பாட்டலி சம்பிக்க ரணவக்க
பாரிய நகரம் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர்

பாரிய நகரம் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு
17 மற்றும்18 ஆம் மாடிகள்,
"சுஹுரிபாய"
ஸ்ரீ சுபத்திபுர வீதி, பத்தரமுல்லை

திகதி : 2019.8.01

## வர்த்தமானி அறிவித்தல்

B 30684
2135/28

2nd Reading ; T-15 ; Raaj ; G 30684 (T)

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது


අංක 2135/28 - 2019 අගෝස්තු මස 06 වැනි අඟහරුවාදා - 2019.08.06

2135/28 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 06 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

#### சீதாவக்க பிரதேச சபை அபிவிருத்தித் திட்டத்தின் அனுமதிக்கான அறிவித்தல்

நகர அபிவிருத்தி அதிகார சபையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்கச் சட்டத்தின் மற்றும் அதன் பின் திருத்தியமைக்கப்பட்ட சட்டப் பிரிவுகளின் உப பிரிவு 8F இன் பிரகாரம், எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ், பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலி சம்பிக ரணவக்க ஆகிய நான், இந்த சட்டத்தின் உப பிரிவு 8(A) இன் பிரகாரம் தயார் செய்யப்பட்ட சீதாவக்க பிரதேச சபை அபிவிருத்தி திட்டத்திற்கு 2019 ஆம் ஆண்டு ஒக்த்து மாதம் 01 ஆந் திகதி அனுமதி வழங்கியுள்ளேன் என்பதை, சட்டத்தின் உப பிரிவு 8G இன் பிரகாரம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.

பாட்டலி சம்பிக்க ரணவக்க,
பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்.

பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு,
17 மற்றும் 18 ஆம் மாடிகள்,
"சுஹுருபாய",
ஸ்ரீ சுபத்திபுர வீதி,
பத்தரமுல்லை,
2019, ஓகத்து 01.


1A – G 30684 – 27 (2019/08)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

### *சீதாவக்க பிரதேச சபை அபிவிருத்தித் திட்டத்திற்கான அனுமதி*

*சீதாவக்க பிரதேச சபை அபிவிருத்திப் பகுதிக்காக, நகர அபிவிருத்தி அதிகார சபையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட 1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தின் பிரிவு "8A" இன் கீழ் தயாரிக்கப்பட்ட சீதாவக்க அபிவிருத்தித் திட்டமானது, பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சராகிய பாட்டலி சம்பிக்க ரணவக்க அவர்களுக்கு மேற்குறிப்பிட்ட திருத்தப்பட்டவாறான சட்டத்தின் பிரிவு 8F இன் கீழ் உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் 2019, ஓகத்து மாதம் 01 ஆந் திகதி அனுமதியளிக்கப்பட்டுள்ளது என்பதை பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கின்றேன்.*

*ஜகத் முனசிங்க,*
*தலைவர்,*
*நகர அபிவிருத்தி அதிகார சபை.*

*2019, ஓகத்து 01.*

08-755

# அத்தியாயம்

# 04



# அபிவிருத்தி திட்டமிடல் சட்டகம்

# அத்தியாயம் 04
# அபிவிருத்தி திட்டமிடல் சட்டகம்

## 4.1 அபிவிருத்தி திட்டத்தின் தொலைநோக்கு

**கொழும்பின் கவர்ந்திழுக்கும் பச்சை முகப்பு**



## 4.2 தொலைநோக்க வெளியீடு

எதிர்கால சீதாவக்கபுர அபிவிருத்தி திசைக்கான தொலைநோக்கினை கட்டியெழுப்பும் போது பிரதேசத்தின் தேசிய மற்றும் பிரதேச வலய முக்கியத்துவம், அபிவிருத்திப் போக்கு, தள்போதுள்ள வளங்கள், வசதிகள் மற்றும் வாய்ப்புக்கள், பூகோள அமைவிடம் போன்ற அனைத்துப் பிரிவுகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

இப் பிரதேசத்திற்கே உரித்தான மொத்த பூமி பாவனையில் 73% உள்ளடங்கும் வகையில் வியாபித்துக் காணப்படும் இயற்கை பசுமைப் போர்வையினை அடிப்படையாகக் கொண்டு மற்றும் அதனைப் பாதுகாத்து சூழல் நட்புறவுடைய நிலைபேறான ஓர் அபிவிருத்தியை நோக்கி பயணிப்பதனை ‘‘பசுமை நகரம்’’ என்பது பிரதிபலிக்கிறது. அவ்வாறே கவர்ச்சிகரமான *(Charismatic)* என்பது பிரதேசத்தில் காணப்படும் வாய்ப்புக்களைப் பயன்படுத்தி தனித்துவமான இயற்கைச் சூழல் பண்புகளினூடாக அபிவிருத்தியடைந்து வரும் சுபீட்சம் நிறைந்த, கவர்ச்சிகரமானதொரு நகரத்தை நோக்கி 2030 ல் சீதாவக்க பயணிக்க உள்ளதனை எடுத்துக் காட்டுகிறது.

## 4.3 அபிவிருத்தி திட்டத்தின் நோக்கங்கள்

**03 பிரதான நோக்கங்களின் ஊடாக சீதாவக்க நகர அபிவிருத்தி திட்டத்தை (2019 – 2030) தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.**

1. கொழும்பு மாவட்டத்தில் அமையப் பெற்ற நீலப் பசுமை நிலத்தோற்றம் மற்றும் பல்வேறுபட்ட அங்கங்களை உடைய சுற்றுலாப் பயணிகளின் தங்குமிடமாக மாற்றுதல் *(The Green Blue Landscape and the Diversified Eco – Tourism Destination in Colombo District)*

2. சூழலுடன் பின்னிப்பிணைக்கப்பட்ட கைத்தொழில் மற்றும் பாதுகாப்பான வதிவிட நகரமாக மாற்றுதல். *(Environmentally Integrated Industrial & Secure Residential Township)*

3. சுபீட்சம் நிறைந்த வதிவிட நகரமாக மாற்றுதல். *(The Opulent City of Colombo)*

## 4.4 அபிவிருத்தி திட்டத்தின் குறிக்கோள்கள்

**நோக்கம் 01**

**"கொழும்பு மாவட்டத்தில் அமையப் பெற்ற நீலப் பசுமை நிலத்தோற்றம் மற்றும் பல்வேறுபட்ட அங்கங்களை உடைய சுற்றுலாப் பயணிகளின் தங்குமிடமாக" மாற்றுதல். *(The Green Blue Landscape and the Diversified Eco – Tourism Destination in Colombo District)***

குறிக்கோள்கள் ***(OBJECTIVES);***

i. 2030 ஆம் ஆண்டளவில் தற்போதுள்ள நீர் மூலங்களை 100% வீதத்தைப் பாதுகாத்தல் மற்றும் தற்போதுள்ள பசுமைப் போர்வையில் 99% வீதத்தைப் பாதுகாத்தல்.

ii. 2030 ஆம் ஆண்டளவில் திட்டமிடல் பிரதேசத்தில் காணப்படும் கூருணர்வு சூழல் முறைமைகளைப் பாதுகாக்கும் விதத்தில் சுற்றுலாப் பயணிகளைக் கவரக் கூடிய 04 சிறிய நகரங்களை அபிவிருத்தி செய்தல்.

iii. 2030 ஆம் ஆண்டளவில் பிரதேசம் பூராக பரவிக் காணப்படும் பாதுகாக்கப்படாத தொல்பொருளில் பெறுமதி வாய்ந்த 17 இடங்களை சூழல் சுற்றுலாக் கைத்தொழிலுடன் ஒன்றிணைத்து மேம்படுத்துதல்.

iv. 2030 ஆம் ஆண்டளவில் களனி நதிக்கரையில் இருந்து 200 மீற்றர் எல்லையில் இயற்கை கவர்ச்சி நிறைந்த இடங்களை அடிப்படையாகக் கொண்டு மற்றும் எஸ்வத்து ஓயாவை அடிப்படையாகக் கொண்டு சூழல் சுற்றாடல் செயற்பாடுகளை மேம்படுத்தல் மற்றும் ஊக்கப்படுத்தல்.

v. மொத்த நிலப்பரப்பில் இனம் காணப்பட்ட சுமார் 2,135 ஹெக்டயார் சூழல் சுற்றுலா மேம்பாட்டு வலயத்தில் சூழல் நட்புறவு சுற்றுலா கைத்தொழிலை பேணிச் செல்வதற்காக ஊக்குவித்தல்.

**நோக்கம் 02**

**"சூழலுடன் பின்னிப்பிணைக்கப்பட்ட கைத்தொழில் மற்றும் பாதுகாப்பானதொரு வதிவிட நகரமாக" மாற்றுதல்.** *(Environmentally Integrated Industrial & Secure Residential Township)*

குறிக்கோள்கள் ***(OBJECTIVES);***

i. 2030 ஆம் ஆண்டளவில் 2,216 ஹெக்டயார்களைக் கொண்ட சூழல் நட்புறவு கைத்தொழில் பிரதேசம் ஒன்றை தாபித்தல்.

ii. 2030 ஆம் ஆண்டளவில் 99% இறப்பர் பயிர்ச்செய்கை நிலங்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதனூடாக கொழும்பு மாவட்டத்தின் இறப்பர் கைத்தொழிலுக்குத் தேவையான இறப்பர் பால் வழங்கும் வீதத்தினை 62% வீதத்திலிருந்து 70% வீதம் வரை அதிகரித்தல்.

**நோக்கம் 03**

**"சுபீட்சம் நிறைந்த வதிவிட நகரமாக" மாற்றுதல்.** ***(The Opulent City of Colombo)***

குறிக்கோள்கள் ***(OBJECTIVES);***

i. 2030 ஆம் ஆண்டளவில் அதிக மற்றும் நடுத்தர சூழல் கூருணர்வு பிரதேசங்களில் வாழ்கின்ற நபர்களை 50% வரை குறைத்தல்.

ii. 2030 ஆம் ஆண்டளவில் வதிவிட மற்றும் குடிபெயரும் மக்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை 90% வீதத்தால் அதிகரிப்பதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல்.

iii. 2030 ஆம் ஆண்டளவில் பிரதேசத்தில் வாழும் தொழிற்படையில் பயிற்றப்படாத தொழிற்படையை 70% வீதத்திலிருந்து 40% வீதம் வரை குறைத்தல்.

அத்தியாயம்

# 05



# ஞறுழுவு பகுப்பாய்வு

# அத்தியாயம் 05

# SWOT பகுப்பாய்வு

## 5.1 விவரமான SWOT பகுப்பாய்வு

சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்கான அபிவிருத்தி திட்டத்தை தயாரிக்கும் போது இனம் காணப்பட்ட பிரதேசத்தில் காணப்படும் பலம், பலவீனம் மற்றும் பிரதேசத்திற்கு வெளியில் இருந்து தாக்கம் செலுத்தும் சந்தர்ப்பங்கள் மற்றும் பயமுறுத்தல்கள் தொடர்பாக இதன் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

### 5.1.1 நோக்கம் 01 – கொழும்பு மாவட்டத்தில் அமையப் பெற்ற நீலப் பசுமை நிலத்தோற்றம் மற்றும் பல்வேறுபட்ட அங்கங்களை உடைய சுற்றுலாப் பயணிகளின் தங்குமிடம்

பிரதேசத்தின் முழு பூமி பாவனை வடிவத்தில் சுமார் 42% வீதத்தைக் கொண்ட இறப்பர் பயிர்ச்செய்கை, 7.6% வீதத்தைக் கொண்ட நெற்பயிர்ச் செய்கை, 1.1% வீதத்தைக் கொண்ட நீர் அண்டிய பிரதேசங்கள் மற்றும் ஏனைய சூழல் கூருணர்வு பிரதேசங்களைப் பாதுகாக்கும் விதமாக சூழல் நற்புறவு சுற்றாடல் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காகப் பயன்படுத்துவதற்கு இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

ப (S)

1. திட்டமிடல் பிரதேசத்தில் காணப்படும் 73% வீதமான பசுமைப் போர்வை மற்றும் 1.1% வீதமான நீர் போர்வை.
2. அரச வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட இந்திகட ஒதுக்கு காடு, லபுகம ஒதுக்குக் காடு மற்றும் மிரியகல்ல ஒதுக்குக் காடு அமையப் பெறல் மற்றும் தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த லபுகம மற்றும் கலட்டுவான நீர்த்தேக்கம் அமையப் பெறல்.
3. சுற்றுலாப் பயணிகளைக் கவரக் கூடிய இயற்கை நீர் வீழ்ச்சிகள் அமையப் பெறல்.
4. பிரதேசம் பூராக பரவிக் காணப்படும் குறுகிய வீதி முறைமை.
5. இயற்கை எழிலுடன் ஒன்று கலந்த எஸ்வத்து ஓயாவை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் கவர்ச்சிகரமான சுற்றுலா விடுதிகள்.
6. சீதாவக்க இராசதானியின் மரபுரிமை மற்றும் காலனித்துவத்தின் தாக்கத்தினை எடுத்துக் காட்டும் வரலாற்றுப் பெறுமதி வாய்ந்த இடங்கள் மற்றும் இடிபாடுகள் காணப்படல்.

ப (W)

1. ஹைலெவல் மற்றும் லோலெவல் ஆகிய வீதிகளின் இரு மருங்கிலும் சூழல் கூருணர்வு வலயத்தின் ஊடாக பரவியுள்ள முறைசாராத அபிவிருத்தி.
2. சுற்றுலாப் பயணிகளைக் கவரக் கூடிய தொல்பொருளியல் பெறுமதி வாய்ந்த இடங்கள் இதுவரை பொதுமக்களுக்கு திறந்து விடப்படாமை.
3. இறப்பர் பயிர்ச்செய்கை ஏனைய பூமி பாவனைகளுக்கு மாறும் போக்கு.

ச (O)

1. இலங்கை சுற்றுலாப் பயணிகளின் பிரதான பிரயாணப் பாதையான மேற்கு கரையோரம் மற்றும் கண்டி, அனுராதபுரம் வீதிகளுக்கு நடுவே அமையப் பெறல்.
2. தேசிய பௌதிக திட்டத்திற்கு (2017-2050) அமைய அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ஒரு பிரதேசமாக இனம் காணப்படல்.

ப (T)

--

## பலம்

### 1. திட்டமிடல் பிரதேசத்தில் காணப்படும் 73% வீதமான பசுமைப் போர்வை மற்றும் 1.1% வீதமான நீர் போர்வை.

திட்டமிடல் பிரதேசமானது இறப்பர், வயல்வெளிகள் மற்றும் தென்னை ஆகிய விவசாயப் பயிர்கள் போன்றே காடுகளை உள்ளடக்கிய பசுமைப் போர்வையினால் வளம் பெறும் ஒரு பிரதேசம் ஆகும். சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் சூழல் முக்கியத்துவம் தொடர்பாக வரைபு இலக்கம் 5.1 மூலம் விவரிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படும் ஆய்வுகளின் அடிப்படையில் முழு பூமிப் பாவனை வடிவத்தில் இறப்பர் பயிர்ச்செய்கை, நெற்பயிர்ச் செய்கை, தென்னைப் பயிர்ச்செய்கை மற்றும் காடுகள் உள்ளடங்கிய பசுமைப் போர்வை முழு பூமிப் பாவனை வடிவத்தில் 73% வீதத்தைக் கொண்டுள்ளது.

மேலும் 1.1% வீத நீர் ஏந்துப் பிரதேசத்தையும் இப் பூமிப் பாவனை வடிவம் கொண்டுள்ளதுடன் இவ்வாறான உயர்வான போர்வையுடன் கூடிய சூழல் முறைமைகள் அமையப் பெற்றுள்ளமையானது அசுத்தமான காற்றினைத் தூய்மைப்படுத்தி சுமுகமானதொரு சூழலை ஏற்படுத்தல், மண் அரிப்பினைத் தடுத்தல், அனைத்து வகையான விலங்குகளுக்குமான உணவு மற்றும் மூலிகைகளை வழங்குதல் மற்றும் புதிய வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல் போன்ற சூழல், பொருளாதார மற்றும் சமூக ரீதியிலான நன்மைகள் பலவற்றை அடைவதற்கு ஏதுவாயமையும் என்பதனைச் சுட்டிக்காட்ட முடியும். பிரதேசத்தின் பூமிப் பாவனை வடிவம் மூன்றாம் அத்தியாயத்தில் வரைபட இலக்கம் 3.3 மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

***வரைபு இலக்கம 5. 1 – பிரதேசத்தில் காணப்படும் சூழல் முக்கியத்துவம்***




மூலம் : கள ஆய்வு, நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

**2.** அரசாங்க வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்ட இந்திகட ஒதுக்குக் காடு, லபுகம ஒதுக்குக் காடு மற்றும் மீரியகல்ல ஒதுக்குக் காடு ஆகியன இப் பிரதேசத்தில் அமையப் பெறல் மற்றும் தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த லபுகம மற்றும் கலட்டுவாவ நீர்த்தேக்கங்கள் அமையப் பெறல்.

அரசாங்க நிறுவனங்கள் மூலம் ஒதுக்குக் காடாக பெயரிடப்பட்டுள்ள 03 பிரதான ஒதுக்குக் காடுகள் இத் திட்டமிடல் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ளன. அதன் பிரகாரம் லபுகம ஒதுக்குக் காடு 1,020 ஹெக்டயார்களையும், மீரியகல்ல ஒதுக்குக் காடு 240 ஹெக்டயார்களையும், இந்திகட ஒதுக்குக் காடு 572 ஹெக்டயார்களையும் உள்ளடக்கி உள்ளது. இக் காடுகளை அரசாங்கத்தினால் ஒதுக்குக் காடுகளாக பிரகடனப்படுத்துதல் மற்றும் சட்ட ரீதியான ஏற்பாடுகள் மூலம் நீண்ட காலத்திற்கு பாதுகாக்க முடிந்துள்ளமை ஆகியன திட்டமிடல் பிரதேசத்தில் உள்ள விசேடமான ஒரு நன்மை என்பது இனம் காணப்பட்டுள்ளது. (வரைபட இலக்கம் 5.1)

மேலும் தேசிய ரீதியாக முக்கியம் பெறுகின்ற லபுகம மற்றும் கலட்டுவான ஆகிய நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் இப் பிரதேசத்தில் அமைந்துள்ளதுடன் கொழும்பு மாவட்டத்தில் அமைந்துள்ள 10 பிரதேச செயலகங்களும் உள்ளடங்கும் வகையில் லபுகம நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் மூலம் நாளாந்தம் 60,000 கன மீற்றர் நீர் விநியோகிக்கப்படுவதுடன் கலட்டுவான நீர் சுத்திகரிப்பு நிலையம் மூலமாக நாளாந்தம் 90,000 கன மீற்றர் நீர் விநியோகிக்கப்படுகிறது. (தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு சபை – 2017) இவ்வாறான தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த நீர் மூலங்கள் மற்றும் ஒதுக்குக் காடுகள் இந்த அதிகார எல்லைக்குள் அமைந்துள்ளமை பிரதேசத்திற்கு தனித்துவமான ஒரு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதனை இனம் காண முடியும் என்பதுடன் நீலப் பசுமை நிலத்தோற்றத்துடன் பல்வேறுபட்ட சுற்றுலாப் பயணிகளின் தங்குமிடம் எனும் நோக்கத்தை அடைந்து கொள்வதற்கான ஒரு பலம் என்பதனையும் சுட்டிக்காட்ட முடியும்.

***உருவப்பட இலக்கம் 5. 1 - லபுகம மற்றும் கலட்டுவான நீர் சுத்திகரிப்பு நிலையங்கள***



மூலம் : கள ஆய்வு, நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

***வரைபட இலக்கம் 5. 1 – சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் ஒதுக்கு காட்டுப் பிரதேசம்***




மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

## 3. சுற்றுலாப் பயணிகளைக் கவரக் கூடிய இயற்கை நீர் வீழ்ச்சிகள் அமையப் பெறல்.

சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் இயற்கை எழில் மிகுந்த சில நீர் வீழ்ச்சிகள் அமைந்துள்ளதுடன் எல்லஉட எல்ல, குமாரி எல்ல, ரன்முது எல்ல, தம்போர எல்ல ஆகியன அவற்றுள் முக்கியமான நீர்வீழ்ச்சிகளாகக் காணப்படுகின்றன. இந் நீர்வீழ்ச்சிகள் தற்போது பிரதேசத்தின் இயற்கை அழகைப் பாதுகாப்பதற்கும் சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கும் ஆற்றல் பெற்றுள்ளது. (வரைபட இலக்கம் 5.2)

***வரைபட இலக்கம 5. 2 – சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள நீர்வீழ்ச்சிகள***




மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

***அட்டவணை இலக்கம் 5. 1 - சீதாவக்க அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் பாதுகாக்கப்பட்ட நீர்வீழ்ச்சிகள***

| இடம் | கிராம உத்தியோகத்தர் பிரிவு |
|---|---|
| 1. எல்லஉட எல்ல | இலுக்ஓவிட்ட |
| 2. குமாரி எல்ல | கொஸ்வத்த |
| 3. ரன்முது எல்ல | பஞ்ஞாகுல |
| 4. தம்போர எல்ல | தம்போர |

மூலம் : வள வெட்டுமுகத் தோற்றம் (2016)

**4. பிரதேசம் பூராக பரவிக் காணப்படும் குறுகிய வீதி முறைமை.**

பிரதேசம் பூராகவும் பெருமளவு பரவிக் காணப்படும் வீதி முறைமையானது அபிவிருத்திப் பணிகளை அதைரியப்படுத்தி சூழல் கூருணர்வு பிரதேசங்களைப் பாதுகாப்பதற்கு பெரிதும் துணை புரிந்துள்ளது. ஒட்டுமொத்தமாக பார்க்குமிடத்து பிரதேசத்தின் A மற்றும் B தர வீதிகளின் முழுத் தூரம் சுமார் 197 கிலோ மீற்றர்களும், ஏனைய குறுகிய வீதி முறைமைகளின் முழுத் தூரம் சுமார் 1,068 கிலோ மீற்றர்களும் ஆகும். பிரதேசம் பூராக குறுகிய வீதி வலைப்பின்னல் பரவிக் காணப்படும் விதம் வரைபட இலக்கம் 5.3 மூலம் காட்டப்பட்டுள்ளது. (மூலம் : நிலஅளவைத் திணைக்களம் - 2016)

***உருவப்பட இலக்கம் 5. 2 – பிரதேசத்தில் காணப்படும் குறுகிய பிரவேச வீதிகளின் நிலைமை***




மூலம் : கள ஆய்வு, நகர அபிவிருத்தி அதிகார சபை – (2018)

***வரைபட இலக்கம் 5. 3 – பிரதேசத்தின் குறுகிய வீதி முறைமை (2016)***




மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

## 5. இயற்கை எழிலுடன் ஒன்று கலந்த எஸ்வத்து ஓயாவை அடிப்படையாகக் கொண்டு செயற்படும் கவர்ச்சிகரமான சுற்றுலா விடுதிகள்.

தற்போது கூட இயற்கைச் சூழலுடன் பின்னிப்பிணைந்த சுற்றுலாக் கைத்தொழிலை மையமாகக் கொண்ட பல தங்குமிடங்கள் பிரதேசத்தில் தொழிற்படுவதுடன் நாளாந்தம் சுமார் 8,000 சுற்றுலாப் பயணிகளும் வாரம் ஒன்றுக்கு சுமார் 2,500 சுற்றுலாப் பயணிகளும் இங்கு வருகை தருவதாக குறிப்பிட்ட தங்குமிட மற்றும் ஹோட்டல் உரிமையாளர்களுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் போது தெரியவந்தது. இக் கைத்தொழிலானது சூழல் நட்புறவினை பேணும் விதத்தில் இயற்கைச் சூழலுடன் இணைந்த வகையில் தொழிற்படுவதாக மேற்கொள்ளப்படும் கள ஆய்வுகளின் போது தெரியவந்துள்ளது. பிரதேசத்தில் தொழிற்படும் சூழல் நட்புறவு சுற்றுலாப் பயணிகள் தங்குமிடங்கள் சில உருவப்பட இலக்கம் 5.3 மூலம் காட்டப்பட்டுள்ளது.

***உருவப்பட இலக்கம் 5. 3 - சூழல் நட்புறவு சுற்றுலாப் பயணிகள் தங்குமிடங்கள்***




மூலம் : கள ஆய்வு, நகர அபிவிருத்தி அதிகார சபை, 2018

## 6. சீதாவக்க இராசதானியின் மரபுரிமை மற்றும் காலனித்துவத்தின் தாக்கத்தினை எடுத்துக் காட்டும் வரலாற்றுப் பெறுமதி வாய்ந்த இடங்கள் மற்றும் இடிபாடுகள் காணப்படல்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சீதாவக்க இராசதானிக்கு உட்பட்ட இடிபாடுகள் இத் திட்டப் பிரதேசத்தில் பாதுகாக்கப்படாமை காரணமாக தற்போது அழிவடைந்து வருகிறது. சீதாவக்க இராசதானியானது போர்த்துக்கேயர்கள், ஒல்லாந்தர்கள் மற்றும் ஆங்கிலேயர்களின் காலனித்துவ ஆட்சிக்கு உட்படல் காரணமாக அக் காலங்களுக்குரிய அங்கங்களுடன் கூடிய இடிபாடுகள் இப் பிரதேசத்தில் இன்றும் கூட காணக்கூடியதாக உள்ளது.

முதலாம் இராஜசிங்க மன்னரின் கல்லறை, ஹங்வெல்லையில் அமைந்துள்ள லெவ்கே சிலை மற்றும் கல் ஆசனம், அயர் வங்களா, தும்மோதர சங்கிலிப் பாலம் போன்றன அவற்றுள் முக்கிய இடம் வகிக்கின்றது. பிரதேசத்தில் அமைந்துள்ள தொல்பொருளியல் பெறுமதி வாய்ந்த பல இடங்கள் பின்வரும் அட்டவணை இலக்கம் 5.2 மற்றும் உருவப்பட இலக்கம் 5.4 மூலம் காட்டப்பட்டுள்ளது.

***அட்டவணை இலக்கம் 5. 2 – சீதாவக்க திட்டமிடல் பிரதேசத்தில் காணப்படும் தொல்பொருளியல் இடங்கள் (கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் அடிப்படையில்)***

| **தொடர் இலக்கம்** | **இடம்** | **கிராம உத்தியோகத்தர் பிரதேசம்** |
|---|---|---|
| 1. | சீதாவக்க மாளிகை அமைந்துள்ள கோட்டை | ஹங்வெல்ல |
| 2. | நீர் அகழி | ஹங்வெல்ல நகரம் |
| 3. | இனிப்பு பலா மரம் | ஹங்வெல்ல நகரம் |
| 4. | கல் ஆசனம் | ஹங்வெல்ல நகரம் |
| 5. | லெவ்கே உருவச்சிலை | ஹங்வெல்ல |
| 6. | அவமடல குகை | அகரவிட்ட |
| 7. | பஞ்ஞாகுல | அகரவிட்ட |
| 8. | கல் குட்டை | அகரவிட்ட |
| 9. | நோர்த் அம்பலன்வத்த கற்குகை 02 | வேரகொல்ல |
| 10. | பழைய கட்டட வடிவமைப்புக் கலையினை எடுத்துக் காட்டும் மொரகெலே வங்களா | பின்னவல |
| 11. | வரலாற்றுக்கு முன்னைய யுகத்திற்குச் சொந்தமான கூரகல மலையில் அமைந்துள்ள கற் குகை | கூரகல |
| 12. | பாதுக்க வாடிவீடு | பாதுக்க |
| 13. | எழுவாகல புராதன ரஜ மகா விஹாரை | வக வடக்கு |
| 14. | ராஜசிங்க யுகத்திற்குச் சொந்தமான நிக்கவாகந்த நிதன்கல | முலகல |
| 15. | பழைய சுவர் ஓவியங்களுடன் கூடிய பரம தம்ம நிகேதனாராமை | முலகல |
| 16. | ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திற்குச் சொந்தமான சங்கிலி பாலம் | முலகல |

மூலம் : வள வெட்டுமுகத் தோற்ற அறிக்கை (2016)

***உருவப்பட இலக்கம் 5. 4 – பிரதேசத்தில் காணப்படும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சில இடங்கள்***




மூலம் : கள ஆய்வு, நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

## பலவீனம்

**1. ஹைலெவல் மற்றும் லோலெவல் ஆகிய வீதிகளின் இரு மருங்கிலும் சூழல் கூருணர்வு வலயத்தின் ஊடாக பரவியுள்ள முறைசாராத அபிவிருத்தி.**

சீதாவக்க திட்டமிடல் பிரதேசத்தில் காணப்படும் சூழல் அதி கூருணர்வு வலயத்தின் பாரியளவு நிலப்பரப்பு களனி கங்கையினூடாக பரவிக் காணப்படுவதுடன் ஹைலெவல் மற்றும் லோலெவல் வீதிகள் களனி கங்கைக்கு சமாந்தரமாக அமைந்துள்ளது. பிரதேுசத்தில் காணப்படும் பெரும்பாலான அபிவிருத்தி நடவடிக்கைகள் இந்த இரண்டு வீதிகளின் ஊடாக முறையற்ற விதத்தில் உருவாகும் ஒரு போக்கு காணக் கிடைப்பதுடன் அது சூழல் அதி கூருணர்வு வலயத்திற்கு சவாலாகக் காணப்படுவதாக இத் திட்டத்தின் மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. பூகோளத் தகவல் முறைமையின் துணையுடன் மேற்கொள்ளப்பட்ட சூழல் கூருணர்வு பகுப்பாய்வு மூன்றாம் அத்தியாயத்தில் வரைபட இலக்கம் 3.4 மூலம் காட்டப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் அதி கூருணர்வு சூழல் வலயயங்கள் அமைந்துள்ள இடங்கள் காட்டப்பட்டுள்ளதுடன் அவற்றுள் பெரும்பாலானவை திட்டமிடல் பிரதேசத்தின் மேற்கு, வடமேற்கு, வடக்கு மற்றும் வடகிழக்கு திசைகளில் பரவிக் காணப்படுகிறது.

மூன்றாம் அத்தியாயத்தில் வரைபட இலக்கம் 3.8 மூலம் காட்டப்பட்டுள்ளவாறு பிரதேசத்தில் காணப்படும் ஹைலெவல் மற்றும் லோலெவல் ஆகிய வீதிகள் அந்த அதி கூருணர்வு சூழல் வலயத்தின் ஊடாக பயணிப்பதன் காரணத்தால் அதிகூடிய சனத்தொகை அடர்த்தி அப் பிரதேசத்தில் அமையப் பெற்றுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

## 2. சுற்றுலாப் பயணிகளைக் கவரக் கூடிய தொல்பொருளியல் பெறுமதி வாய்ந்த இடங்கள் இதுவரை பொதுமக்களுக்கு திறந்து விடப்படாமை.

திட்டமிடல் பிரதேசத்தில் பரவிக் காணப்படும் தொல்பொருளியல் பெறுமதி வாய்ந்த பாதுகாக்கப்படாத சுமார் 16 இடங்கள் அட்டவணை இலக்கம் 5.2 ல் குறிப்பிடப்பட்டவாறு தற்போது இனம் காணப்பட்டுள்ளது. ஆயினும் இவற்றுள் பெரும்பாலான இடங்கள் அவற்றின் பெறுமதியை எடுத்துக் காட்டும் விதத்தில் பொதுமக்களைக் கவரக் கூடிய வகையில் பொருத்தமான முறையில் அவற்றின் சுற்றுச் சூழல் திறந்து விடப்படாது காணப்படுகின்றமை கள ஆய்வின் போது அவதானிக்கப்பட்டது. அவ்வாறே அவற்றின் முக்கியத்துவம் தொடர்பான அறிவு காணப்படாமை ஒரு குறைபாடாக அடையாளம் காணப்பட்டது.

***உருவப்பட இலக்கம் 5. 5 – பொது மக்களின் கவனத்தை ஈர்க்காத சில தொல்பொருளியல் இடங்கள்***



**ஹங்வெல்ல பிரதேசத்தில் அமைந்துள்ள வரலாற்று பிரசித்தி பெற்ற வெல்கே நினைவுத் தூபி**

**ஹங்வெல்ல பிரதேசத்தில் அமைந்துள்ள புராதன கல் ஆசனம்**



மூலம் : கள ஆய்வு, நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

## 3. இறப்பர் பயிர்ச்செய்கை ஏனைய பூமி பாவனைகளுக்கு மாறும் போக்கு.

2017ஆம் ஆண்டு திட்டமிடல் பிரதேசத்தில் சுமார் 9,000 ஹெக்டயார் பரப்பளவில் இறப்பர் பயிர்ச் செய்கை பரவிக் காணப்பட்டிருந்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது. அது மொத்த நிலப் பரப்பில் 42 சதவீதம் ஆகும். அப் பயிர்ச் செய்கையின் மூலம் பிரதேசத்தின் இதமான காலநிலைக்கு உகந்த அதிகூடிய வாய்ப்பு நிலவுகின்ற போதும் குறுங்கால பொருளாதார நன்மைகளுக்காக தற்போது இப் பயிர்ச்செய்கை அன்னாசி போன்ற ஏனைய பூமி நுகர்வுகளுக்கு போன்றே வதிவடத் தேவைகளுக்காக காணிகளைத் துண்டுகளாகப் பிரிக்கும் ஒரு போக்கு காணப்படுவதை அவதானிக்க முடிகிறது. (வரைபு இலக்கம் 5.2)

***வரைபு இலக்கம 5. 2 - இறப்பர் பயிர்ச்செய்கை மாற்றமடைவதற்கான தீவிரப் போக்கு***




மூலம் : நிலஅளவைத் திணைக்களம் (2016)

இதற்கு மேலதிகமாக இறப்பர் தோட்டங்களில் கோழி வளர்ப்பு, பன்றி வளர்ப்பு மற்றும் சூழல் சுற்றுலா தங்குமிடங்களை நிர்மாணித்தல் போன்ற கைத்தொழில்களுக்கு மறுதல் ஊடாகவும் இந்த இறப்பர் கைத்தொழில் கீழ் நிலைக்கு விழுவதற்கு காரணமாய் அமைந்துள்ளது. ஆகவே பிரதேசத்தில் காணப்படும் மிகப் பிரதானமான ஒரு கைத்தொழில் என்ற வகையில் தொடர்ந்தும் நிலைத்திருப்பதில் தாக்கம் செலுத்தி உள்ளது. (இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் - 2017)

இங்கு இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தினால் இனம் காணப்பட்டவாறு பிரதேசத்தின் இறப்பர் போர்வை குறைவடைவதில் தாக்கம் செலுத்திய காரணங்கள் வருமாறு.

1. சீதாவக்க பிரதேசமானது பகுதி அளவில் நகரமயமாகி வருவதுடன் அதன் போது தேவையான வதிவிட காணிகளுக்கான கேள்விகளைப் பூர்த்தி செய்வதற்காக காணிகளைத் துண்டுகளாகப் பிரித்தல்.
2. இறப்பர் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் தொழிலாளர்களின் நாளாந்த வருமானம் மிகவும் குறைந்த அளவில் (800/-) காணப்படுவதனால் இறப்பர் பயிர்ச்செய்கையில் நாட்டம் கொள்ளும் தொழிலாளர்களின் எண்ணிக்கை சடுதியாக வீழ்ச்சியடைதல்.
3. பயிற்றப்பட்ட சிறந்த இறப்பர் பால் வெட்டுநர்கள் பற்றாக்குறை மற்றும் எதிர்வரும் 10 ஆண்டுகளில் தற்போதுள்ள பால் வெட்டுநர்களுள் 50% வீதத்திற்கு மேற்பட்டோரது வயது முதிர்ச்சியடைதல்.
4. இறப்பர் பயிர்ச்செய்கையில் குறிப்பிடத்தக்க அளவு வீதம் களனி கங்கை நதிக்கரையினை அண்டிய பிரதேசத்தில் காணப்படுவதனால் வெள்ள அபாயத்திற்கு உட்படுவதன் காரணமாக பயிர்ச்செய்கையில் இருந்து தூரமாதல்.
5. சுதுமல் எனப்படும் நோய் நிலைமைக்கு ஆளாகுதல் காரணமாக இறப்பர் பயிர்ச்செய்கை அழிவடைதல்.

6. மின்சார சபை ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் கருத்திட்டங்கள் இறப்பர் காணிகளுக்கு தடை ஏற்படும் விதத்தில் மேற்கொள்ளப்படுவதன் காரணமாக காணி உரிமையாளர்கள் பயிர்ச்செய்கை தொடர்பாக கொண்டுள்ள ஆர்வம் குறைவடைதல்.

***உருவப்பட இலக்கம் 5. 6 - இறப்பர் காணிகள் வேறு நுகர்வுகளுக்காக மாற்றப்படல்***





மூலம் : கள ஆய்வு, நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

**சந்தர்ப்பங்கள்**

1. **இலங்கை சுற்றுலாப் பயணிகளின் பிரதான பிரயாணப் பாதையான மேற்கு கரையோரம் மற்றும் கண்டி - அனுராதபுரம் வீதிகளுக்கு நடுவே இத் திட்டமிடல் பிரதேசம் அமையப் பெறல்.**

*உருவப்பட* இலக்கம் 5.7 மூலம் காட்டப்பட்டுள்ளவாறு சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மூலம் இனம் காணப்பட்டுள்ள இலங்கையின் பிரதான சுற்றுலாப் பயணப் பாதையான மேற்கு கரையோரம் மற்றும் நாட்டின் உள்ளக வீதிகளுக்கு நடுவில் இத் திட்டமிடல் பிரதேுசம் அமைந்துள்ளது. அங்கு கொழும்பு – நுவரெலியா வீதி, கொழும்பு – கண்டி – அனுராதபுரம் பொலனறுவை வீதி, கொழும்பு - களுத்துரை - ஹிக்கடுவ – வல்கம – மாத்தறை – அறுகம்பை வீதி ஆகிய சுற்றுலா வீதிகளுக்கு நடுவில் சீதாவக்க திட்டமிடல் பிரதேசம் அமைந்துள்ளதனை ஒரு விசேட அம்சமாக இனம் காண முடியும். ஆகவே திட்டமிடல் அதிகாரப் பிரதேசத்தின் அமைவிடத்தின் அனுகூலத்தினைக் கருத்திற் கொண்டு இயற்கை சூழலுடன் ஒன்றிணைந்த ஒரு சுற்றுலாக் கைத்தொழிலை உருவாக்குவதற்குரிய அதிக அனுகூலமான ஒரு நிலைமை காணப்படுகிறது.

***உருவப்பட இலக்கம் 5. 7 - இலங்கையின் சுற்றுலாப் பயணப் பாதை***




மூலம் : இலங்கை சுற்றுலா சபை (2018)

## 2. தேசிய பௌதிக திட்டத்திற்கு (2017-2050) அமைய அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ஒரு பிரதேசமாக இனம் காணப்படல்.

தேசிய பௌதிகத் திட்டமிடலின் (2017 – 2050) பிரகாரம் சீதாவக்க திட்டமிடல் பிரதேசம் பொருளாதார நடைவழியினை எல்லையாகக் கொண்ட சூழல் கூருணர்வு வலயத்தில் அமைந்துள்ள ஒரு பிரதேசமாக சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசம் இனம் காணப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தேசிய ரீதியாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இவ்வாறான ஒரு திட்டமிடல் சூழல் நட்புறவு அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்கான ஓர் அரிய வாய்ப்பு அடையாளம் காணப்பட்டுள்ளது (இரண்டாம் அத்தியாயத்தில் *உருவப்பட* இலக்கம் 2.2 மூலம் காட்டப்பட்டுள்ளது)

### 5.1.2 நோக்கம் 02 – "சூழலுடன் பின்னிப்பிணைந்த கைத்தொழில் மற்றும் பாதுகாப்பான வதிவிட நகரமாக" மாற்றியமைத்தல்.

பிரதேசத்தில் காணப்படும் கருங்கல் உடைத்தல் கைத்தொழில் மற்றும் கால்நடை வளக் கைத்தொழில் ஆகியவற்றுக்கும் வதிவட நடவடிக்கைக்கும் இடையில் உருவாகியுள்ள சர்ச்சைகளைக் குறைப்பதற்காக அக் கைத்தொழில்களை சூழல் நட்புறவுடன் பேணிச் செல்வதற்கான விசேட ஒழுங்குவிதிகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் பாதுகாப்பான ஒரு வதிவிட நகரமாக மாற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

ப (S)

1. முழு பூமி பாவனையில் 73% சதவீதம் இன்னமும் நகரமயப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் அவற்றுள் 41% நிலப்பரப்பில் இறப்பர் பயிர்ச்செய்கை பரவிக் காணப்படல்.
2. தேசிய ரீதியில் பரவியுள்ள பாரியளவு கால்நடை வளக் கைத்தொழில் மற்றும் கருங்கல் உடைத்தல் கைத்தொழில் அமையப் பெறல்.
3. கைத்தொழில் மற்றும் விவசாயத் துறையின் 11% வீதமான ஊழியப் படை காணப்படல்.

ப (W)

1. கருங்கல் கைத்தொழில் மற்றும் கால்நடை வளக் கைத்தொழில் மூலம் சூழல் ரீதியாக வதிவிடக்காரர்களுக்கு நிகழும் இடைஞ்சல்கள்.
2. எதிர்வரும் 10 ஆண்டு காலத்திற்குள் தற்போது இறப்பர் பால் வெட்டுபவர்களுள் 50% வீதத்திற்கு மேற்பட்ட எண்ணிக்கையினர் முதுமையடைதல்.

ச (O)

1. இறப்பர் கைத்தொழில் (62%) மற்றும் கால்நடை வளக் கைத்தொழில் (66%) இற்காக தற்போதுள்ள தேசிய ரீதியிலான பங்களிப்பினை வழங்குதல்.
2. உத்தேச அரச கருத்திட்டங்கள்
   i. உத்தேச ஹொரண கைத்தொழில் நகரம்
   ii. களனிவெளி புகையிரதப் பாதையை இரட்டைப் புகையிரதப் பாதையாக அபிவிருத்தி செய்யும் கருத்திட்டம்.
3. பாரிய நகரம் மற்றும் மேல்மாகாண மாநகரத் திட்டமிடல் - 2030 மூலம் வக நகரத்தின் ஊடாக இரத்தினபுரி மாவட்டம் வரை உத்தேசிக்கப்பட்டுள்ள அதி சக்திவாய்ந்த மின்சாரக் கம்பி முறைமை.

ப (T)

--

## பலம்

-

**1. முழு பூமி பாவனையில் 73% சதவீதம் இன்னமும் நகரமயப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் அவற்றுள் 41% நிலப்பரப்பில் இறப்பர் பயிர்ச்செய்கை பரவிக் காணப்படல்.**

திட்டமிடல் பிரதேசத்தில் மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் பிரதானமான ஒரு பொருளாதார செயற்பாடாக இறப்பர் பயிர்ச்செய்கை மற்றும் அதனை அண்டியனை கத்தொழில்களை அறிமுகப்படுத்த முடியும். அதன் போது தற்போது சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள மொத்த பசுமை நிலப் பிரதேசத்தில் ஆகக் கூடிய விகிதம் இறப்பர் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதுடன் அது சதவீதமாகக் கூறப்படின் 42% வீதம் ஆகும். அதில் 11.5% அல்லது சுமார் 4,698 ஹெக்டயார் நிலப் பிரதேசம் அரசாங்கத்திற்குச் சொந்தமான இறப்பர் தோட்டங்களாகக் காணப்படல் (அட்டவணை இலக்கம் 5.3) இறப்பர் போர்வை குறைவடையும் போக்கு குறைவடைவதற்குப் பெரிதும் துணை புரிந்துள்ளது.

***அட்டவணை இலக்கம் 5. 3 – சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் அரசுக்குச் சொந்தமான இறப்பர் தோட்டங்கள்***

| | இறப்பர் தோட்டங்கள். | அளவு (ஹெக்டயார்) |
|---|---|---|
| 1. | சாலாவ வத்த | 2,003 |
| 2. | எலிசன் வத்த | 1,518 |
| 3. | சிரி நிவாச வத்த | 1,042 |
| 4. | பஞ்ஞாகுல வத்த | 135 |
| | **மொத்தம்** | **4,698** |

மூலம் : வள வெட்டுமுகத்தோற்ற அறிக்கை (2016)

***உருவப்பட இலக்கம் 5. 8 – பிரதேசத்தில் காணப்படும் பாரியளவு இறப்பர் தோட்டங்கள்***



மூலம் : கள ஆய்வு, நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

## 2. தேசிய ரீதியில் பரவியுள்ள பாரியளவு கால்நடை வளக் கைத்தொழில் மற்றும் கருங்கல் உடைத்தல் கைத்தொழில் அமையப் பெறல்.

பிரதேச செயலக அறிக்கைகளின் பிரகாரம் (வள வெட்டுமுகத்தோற்றம் - 2016) திட்டமிடல் பிரதேசத்தில் வீடுகள் மட்டத்தில் மேற்கொள்ளப்படும் கால்நடை வளக் கைத்தொழில் பற்றிக் கருத்திற் கொள்ளும் போது சுமார் 15,000 பாரியளவு மற்றும் சிற்றளவு கால்நடைப் பண்ணைகள் பரவிக் காணப்படுவதுடன் அதில் சுமார் 1,700 குடும்பங்கள் ஈடுபட்டுள்ளன.

சீதாவக்க பிரதேச செயலகம் முழுவதும் சுமார் 47 பிரதான கருங்கற் தொழிற்சாலைகள் உள்ளிட்ட குறிப்பிடத்தக்க அளவு சிறிய கருங்கல் தொழிற்சாலைகள் பரவிக் காணப்படுவதுடன் அதன் மூலம் பலருக்கு தொழில்வாய்ப்பு கிடைக்கப்பெற்றுள்ளன. (பிரதேசத்தின் கால்நடை வளக் கைத்தொழில் பரம்பல் மற்றும் கருங்கல் உடைக்கும் கைத்தொழில் பரம்பல் ஆகியன மூன்றாம் அத்தியாயத்தில் வரைபட இலக்கம் 3.7 மற்றும் 3.9 மூலம் காட்டப்பட்டுள்ளது.)

***உருவப்பட இலக்கம் 5. 9 – பிரதேசத்தின் கால்நடை வள மற்றும் கருங்கல் கைத்தொழிலகளின் பரம்பல்***



மூலம் : கள ஆய்வு, நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

### 3. கைத்தொழில் மற்றும் விவசாயத் துறையின் 11% வீதமான ஊழியப் படை காணப்படல்.

தற்போது ஹங்வெல்ல, பாதுக்க ஆகிய நகரங்களின் மத்திய பிரதேசம் தவிர்ந்த ஏனைய அனைத்து பிரதேசம் பூராகவும் பரவிக் காணப்படும் கிராமிய விவசாயப் பொருளாதார வடிவத்தினை அவதானிக்க முடிவதுடன் விவசாயத் துறையில் ஈடுபட்ட நபர்கள் குறிப்பிடத்தக்க அளவில் காணப்படுவதுடன் விவசாயம் மற்றும் கைத்தொழில் துறைகளில் ஈடுபட்டுள்ள ஊழியப்படை மொத்த சனத்தொகையில் 10% சதவீதத்தை தாண்டி உள்ளது. அதனைப் பின்வரும் அட்டவணை இலக்கம் 5.4 மூலம் காட்ட முடியும்.

***அட்டவணை இலக்கம் 5. 4 – தொழிலில் ஈடுபட்டுள்ள விதம் (2016)***

| விவசாயம் | கைத்தொழில் | அரச | தனியார் | ஏனையவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 9,720 | 7,867 | 10,112 | 22,767 | 38,331 | **88,797** |
| 6% | 5% | 6.4% | 14.4% | 24.2% | **56.2** |

மூலம் : வள வெட்டுமுகத் தோற்ற அறிக்கை (2016)

## பலவீனம்

### 1. கருங்கல் கைத்தொழில் மற்றும் கால்நடை வளக் கைத்தொழில் மூலம் சூழல் மற்றும் குடியிருப்பாளர்களுக்கு ஏற்படும் தடைகள்

பிரதேசத்தில் பிரசித்தி பெற்ற கைத்தொழில்களாகக் காணப்படும் கருங்கல் உடைத்தல் மற்றும் கால்நடை வளக் கைத்தொழில் ஆகியவற்றைப் பிரதானமான வருமான மார்க்கமாக இனம் காண முடியும். ஆயினும் இக் கைத்தொழில் மூலம் ஏற்படும் பக்க விளைவுகள் காரணமாக வதிவி சனத்தொகையினருடன் அடிக்கடி மோதல் உருவாவதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. பிரதேசத்தில் 47 கருங்கல் கைத்தொழில் நடைபெறும் இடங்கள் பரவிக் காணப்படுவதுடன் அவற்றுள் பொதுமக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ள 11 இடங்களின் அகழ்வுப் பணிகள் தற்போது சட்ட நடவடிக்கைகளின் பிரகாரம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக ஹங்வெல்ல மற்றும் பாதுக்க பிரதேச செயலகத்தின் தரவுகளின் அடிப்படையில் தெரியவந்துள்ளது.

***வரைபு இலக்கம 5. 3 – கருங்கல் கைத்தொழில் மற்றும் கால்நடை வளக் கைத்தொழில் தொடர்பான முறைப்பாடுகள்***




மூலம் : வள வெட்டுமுகத்தோற்ற அறிக்கை (2016)

மேற்குறித்த வரைபுக் குறிப்பு மூலம் 2015 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை கருங்கல் உடைக்கும் கைத்தொழில் தொடர்பாக கிடைக்கப் பெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை காட்டப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு முதல் 06 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் அத் தொகை படிப்படியாக 2017 ஆம் ஆண்டளவில் 12 ஆக அதிகரித்துள்ளது. மேலும் கால்நடை வளக் கைத்தொழில் தொடர்பாக கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பாக 2015 ஆம் ஆண்டு 15 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் அது 2017 ஆம் ஆண்டளவில் 50 முறைப்பாடுகள் வரை அதிகரித்துள்ளது.

பிரதேசம் முழுவதும் பரவிக் காணப்படும் கருங்கல் உடைக்கும் இடங்கள் மற்றும் கால்நடை வளக் கைத்தொழிலுக்கும் மக்களின் வாழ்க்கைக்கும் இடையில் உருவாகும் மோதல்கள் இப் பிரதேசத்தில் காணப்படும் ஒரு பிரதான குறைபாடாக இனம் காணப்பட்டது. அதன் போது கருங்கற் கைத்தொழில் மூலம் ஏற்படும் அதிர்ச்சி காரணமாக வீடுகள் சேதமடைதல், பிரவேச பாதைகள் சேதமடைதல் போன்ற பிரச்சினைகள் ஏற்படுவதுடன் கால்நடை வளக் கைத்தொழிலின் ஒழுங்கற்ற கழிவுப்பொருள் முகாமைத்துவம், துர்நாற்றம் போன்ற சுகாதாரப் பிரச்சினைகள் உருவாகி உள்ளதாக 2018 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வுகளின் போது தெரியவந்துள்ளது. கருங்கல் உடைக்கும் கைத்தொழில் மற்றும் கால்நடை வளக் கைத்தொழில் மூலம் அனர்த்தங்களுக்கு உள்ளாகும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் வரைபட இலக்கம் 5.4 மூலம் காட்டப்பட்டுள்ளது.

## 2. எதிர்வரும் 10 ஆண்டு காலத்திற்குள் தற்போது இறப்பர் பால் வெட்டுபவர்களுள் 50% வீதத்திற்கு மேற்பட்ட எண்ணிக்கையினர் முதுமையடைதல்.

சீதாவக்க திட்டமிடல் பிரதேசத்தில் இறப்பர் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள நபர்களுள் பெரும்பாலோனோர் முதுமைப் பருவத்தை அடைந்தவர்களாகக் காணப்படுவதாக இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் தரவு அறிக்கைகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆகவே 50% வீதத்திற்கும் அதிகமானோரின் வயது 50 இற்கும் அதிகமாக உள்ளதென அடையாளம் காணப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக அக் கைத்தொழிலில் ஈடுபடும் நபர் ஒருவரது நாளாந்த சம்பளம் ரூ.800/- மாத்திரம் என்பதனால் இளைஞர்கள் இத் தொழிலில் இருந்து தூரமாகும் ஒரு நிலைமை உருவாகி உள்ளது.

***வரைபட இலக்கம 5. 4 – கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக திட்டமிடல் பிரதேசத்தில் வெள்ளம், கருங்கல் உடைக்கும் கைத்தொழில் மற்றும் கால்நடை வளக் கைத்தொழில் காரணமாக பாதிப்புக்கு உள்ளாகும் பிரதேசங்கள்***




மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

## சந்தர்ப்பங்கள்

### 1. இறப்பர் கைத்தொழில் (62%) மற்றும் கால்நடை வளக் கைத்தொழில் (66%) இற்காக தற்போதுள்ள தேசிய ரீதியிலான பங்களிப்பினை வழங்குதல்.

இறப்பர் உற்பத்தி இலங்கையின் மூன்றாவது மிகப்பெரிய ஏற்றுமதிப் பொருளாகக் காணப்படுவதுடன் அது உலக சந்தைக்கு 0.7% சதவீத பங்களிப்பை வழங்குவதாக அறிக்கையிடப்பட்டுள்ளது (மூலம் : மத்திய வங்கி அறிக்கை – 2016)

தேசிய பொருளாதாரத்திற்கு கொழும்பு மாவட்டத்திலிருந்து இறப்பர் கைத்தொழில் மூலம் கிடைக்கப் பெறும் பங்களிப்பில் சுமார் 62% சீதாவக்க பிரதேசத்தில் இருந்து கிடைக்கப் பெறுவதுடன் அது கால்நடை வளக் கைத்தொழிலுக்கான சுமார் 66% வீத பங்களிப்பு ஆகும் என அறிக்கையிடப்பட்டுள்ளது. (மூலம் : வள வெட்டுமுகத்தோற்ற அறிக்கை (2016) மற்றும் குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் (விவசாயத் தரவுகள்) – 2016)

### 2. நகர அபிவிருத்தி அதிகார சபை, இலங்கைப் புகையிரதத் திணைக்களம் ஆகிய நிறுவனங்கள் மூலம் இனம் காணப்பட்டுள்ள உத்தேச அரச கருத்திட்டங்கள்.

- உத்தேச ஹொரண கைத்தொழில் நகரம்
- களனிவெளி புகையிரதப் பாதையை இரட்டைப் புகையிரதப் பாதையாக அபிவிருத்தி செய்யும் கருத்திட்டம்.
- ஹோமாகம தொழில்நுட்ப நகரக் கருத்திட்டம்

மேற்குறித்த உத்தேச கருத்திட்டங்கள் மூலம் திட்டமிடல் பிரதேசத்தில் உள்ள கைத்தொழிலாளர்களுக்காக பல்வேறு துறைகளின் ஊடாக வசதிகளை வழங்க கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஹொரண உத்தேச கைத்தொழில் நகரக் கருத்திட்டத்தில் இறப்பர் கைத்தொழில்சாலைகளை தாபித்தல் தொடர்பில் முன்னரிமை அளிக்கப்படுவதற்காக இனம் காணப்பட்டுள்ளமை ஒரு விசேட அம்சம் ஆகும். ஹோமாகம தொழில்நுட்ப நகர கருத்திட்டத்தின் மூலம் பிரதேசத்தில் உள்ள மக்களுக்கு தொழிநுட்ப அறிவினை விருத்தி செய்வதற்கான சந்தர்ப்பத்தை அடைந்து கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுவதுடன் களனிவெளி புகையிரத வீதிக் கருத்திட்டம் நிர்மாணிக்கப்படுவதன் ஊடாக செயற்திறன் வாய்ந்த ஒரு போக்குவரத்து சேவையினைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கிறது.

### 3. பாரிய நகரம் மற்றும் மேல்மாகாண மாநகர சபைத் திட்டம் - 2030 மூலம் வக நகரத்தின் ஊடாக இரத்தினபுரி மாவட்டம் உத்தேசிக்கப்பட்டுள்ள அதி சக்தி வாய்ந்த மின் கம்பி முறைமை.

பாரிய நகரம் மற்றும் மேல்மாகாண மாநகர சபைத் திட்டம் - 2030 மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள மின் திட்டத்திற்கு அமைய இலங்கை மின்சார சபையினால் வக நகரத்தின் ஊடாக இரத்தினபுரி வரை 132 கிலோவொட் மின் கம்பி முறைமை ஒன்று உத்தேசிக்கப்பட்டுள்ளது. (உருவப்பட இலக்கம் 5.10) அதன் பிரகாரம் சீதாவக்க திட்டமிடல் அதிகாரப் பிரதேசத்தில் தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள அடர்த்தி

குறைந்த வதிவிட மற்றும் நகர விவசாய வலயம், கால்நடை வளக் கைத்தொழில் வலயம் மற்றும் தோட்டங்களை அண்டிய பொருளாதார செயற்பாட்டு வலயம்தின் ஊடாக 132 கிலோவொட் மின் கம்பி முறைமை பயணிப்பதன் காரணமாக அக் கைத்தொழில்களுக்குத் தேவையான அதி சக்தி வாய்ந்த வொட்களைக் கொண்ட மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடிய ஆற்றல் காணப்படுகிறது.

***உருவப்பட இலக்கம் 5. 10 – உத்தேச அதிசக்தி வாய்ந்த மின் கம்பி முறைமை பயணப் பாதை (2030)***




மூலம் : பாரிய நகரம் மற்றும் மேல் மாகாண திட்டம்

### 5.1.3 நோக்கம் 03 – “சுபீட்சம் நிறைந்த வதிவிட நகரம்” ஆக மாற்றுல்.

பிரதேசத்தில் சூழல் சுற்றுலா கைத்தொழிலை (Eco Tourism) உருவாக்குவதன் மூலம் மக்களுக்கான புதிய பொருளாதார செயற்பாடுகளை அறிமுகப்படுத்தல், இறப்பர் பயிர்நிலங்கள் உள்ளிட்ட ஏனைய சூழல் கூருணர்வு பிரதேசங்களை பாதுகாக்கும் வகையில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஊக்குவிப்புக்கள் மற்றும் அதற்கான விசேட ஒழுங்கு விதிகளை அறிமுகப்படுத்தல், உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் போன்ற நோக்கங்களை அடைந்து கொள்ளல் மூலமாக பிரதேச மக்கள் வாழ்வதற்கு ஏற்ற சுமுகமானதொரு சூழலை உருவாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

ப (S)

1. இயற்கை அழகுடன் பின்னிப்பிணைந்த சூழல்
2. பெருந்தெருக்கள் மற்றும் புகையிரதப் போக்குவரத்து சேவையுடன் கூடிய முறையான வலயப்படுத்தல் தொடர்புகள் உள்ள ஒரு பிரதேசமாகக் காணப்படல்.
3. பிரதேசத்தில் தற்போதுள்ள குடும்பங்களின் எண்ணிக்கையில் சுமார் 94% தேசிய மின்சார முறைமையின் ஊடாக மின்சாரத்தைப் பெறல்.

ப (W)

1. களனி கங்கை மற்றும் புஸ்ஸெலி ஓயா பெருக்கெடுப்பதன் காரணமாக திடீர் வெள்ள அனர்த்தத்திற்கு ஆளாகும் பிரதேசங்கள் காணப்படல்.
2. பிரதேசத்தின் தற்போதைய உட்டகட்டமைப்பு வசதிகள் போதியளவு காணப்படாமை.
3. பிரதேசத்தில் வாழும் ஊழியர் படையில் 70% வீதம் பயிற்றப்படாதவர்களாக காணப்படல்.

ச (O)

1. அரச நிறுவனங்கள் மூலம் இனம் காணப்பட்டுள்ள உத்தேச அபிவிருத்திக் கருத்திட்டங்கள்.
2. 2016 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட மேல் மாகாண திட்டத்தின் (Western Region Megapolis Plan) மூலம் விவசாயப் பிரதேசமாக அபிவிருத்தி செயவதற்கு இனம் காணப்படல்.
3. மேல் மாகாண மாநகரத் திட்டத்தின் கீழ் திட்டமிடல் பிரதேசத்திற்கான மின்சார புகையிரத வீதிகளை தாபித்தல்.

ப (T)

1. கருங்கல் உடைக்கும் கைத்தொழிலை மேற்கொள்வதற்கு ஏனைய பிரதேசங்களில் இருந்து முதலீட்டாளர்கள் வருகை தரல்.

## பலம்

### 1. இயற்கை அழகுடன் பின்னிப்பிணைந்த சூழல்

திட்டமிடல் அதிகாரப் பிரதேசத்தில் உள்ள இயற்கை நீர் வீழ்ச்சிகள், நதிகள் மற்றும் தாவரங்கள் போன்ற இயற்கைச் சூழல் முறைமையுடன் பின்னிப்பிணைக்கப்பட்ட வதிவிடப் பூமிப் பாவனை வடிவத்துடன் ஒன்றிணைந்த ஒரு சூழல் அமையப் பெற்றுள்ளமை இங்கு காணப்படும் ஒரு விசேட பண்பு ஆகும்.

*வரைபு இலக்கம 5. 4 – சீதாவக்க பிரதேச சபை பிரதேசத்தின் பூமிப் பயன்பாடு (2016)*




மூலம் : வள வெட்டுமுகத் தோற்ற அறிக்கை (2016)

மேற்குறித்த வரைபினை ஆராயும் போது பிரதேசத்தில் காணப்படும் மொத்த பூமிப் பயன்பாட்டில் 5,000 ஹெக்டயார் அளவு அதாவது 25% இற்கு கிட்டிய ஒரு தொகை வதிவிட நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளமை வெளிப்படுத்தப்படுகிறது. அத்துடன் பிரதேசத்தின் மொத்த பூமிப் பயன்பாட்டில் 9,000 ஹெக்டயார்களில் 42% இறப்பர் பயிர்ச் செய்கை வியாபித்துள்ளதாக, 3,000 பரப்பளவில் காடுகளும் சுமார் 1,500 ஹெக்டயார் பரப்பளவில் நெற்பயிர்ச் செய்கையும் வியாபித்துள்ளமையால் பிரதேச மக்கள் நீர் வீழ்ச்சிகள், நதிகள் மற்றும் தாவரங்கள் போன்ற இயற்கை சூழல் முறைமையுடன் பிணைக்கப்பட்ட ஒரு சுற்றுச் சூழலில் வாழ்க்கை நடாத்துவது தெளிவாகிறது.

## 2. பெருந்தெருக்கள் மற்றும் புகையிரதப் போக்குவரத்து சேவையுடன் கூடிய முறையான வலயப்படுத்தல் தொடர்புகள் உள்ள ஒரு பிரதேசமாகக் காணப்படல்.

திட்டமிடல் அதிகாரப் பிரதேசத்தில் பெருந்தெருக்கள் மற்றும் புகையிரதப் போக்குவரத்து சேவைகள் காணப்படுவதனை ஒரு விசேட அம்சமாக இனம் காண முடியும். களனிவெளிப் புகையிரதப் பாதை மூலமும் ஹைலெவல் மற்றும் லோலெவல் போன்ற A தர வீதிகள் மூலமும் ஏனைய B தர பிரவேச வீதிகள் ஊடாக சீதாவக்க திட்டமிடல் பிரதேசம், வர்த்தகத் தலைநகரமான கொழும்பு நகரம் மற்றும் மாலம்பே, மஹரகம, அவிசாவெல்ல, கம்பஹ, ஹொரண, இரத்தினபுரி, கேகாலை, தெஹியோவிட்ட மற்றும் ஹற்றன், மட்டக்களப்பு போன்ற தூரப் பிரதேசங்களுடன் முறையான ஒரு டிதாடர்பினைப் பேணிச் செல்வதற்கு திறமை பெற்றுள்ளது. கிழே குறிப்பிடப்படும் வரைபட இலக்கம் 5.5 மூலம் பிரதேசத்தின் பிரதான பெருந்தெருக்கள் வலைப்பின்னல் அமைந்துள்ளமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

***வரைபட இலக்கம 5. 5 – சீதாவக்க பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் பிரதான வீதி வலைப்பின்னல்கள்***




சீதாவாக பிரதேச சபா பகுதியில் உள்ள பிரதான சாலைகள்

0 0.5 1 2 3 கி.மீ.

மூலம: - நகர அபிவிருத்தி அதிகார சபை

நகர அபிவிருத்தி அதிகார சபை

ஜனவரி 2019

மேல் மாகாண பிரிவு | சீதாவக்க அபிவிருத்தி திட்டம் (2019 - 2030) | தயாரிப்பு: மேல் மாகாண அலுவலகம

மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

பிரதேசத்தில் காணப்படும் 03 பிரதான புகையிரத நிலையங்களாக பாதுக்க, கொஸ்கம மற்றும் வக-கஹஹேன ஆகிய புகையிரத நிலையங்கள் ஊடாக மற்றும் பின்னவல, அருக்வத்த, அங்கம்பிட்டிய, உக்கல்ல, மொரகெலே, வட்டரெக்க, மாவல்கம மற்றும் கடுகொட ஆகிய சுமார் 08 சிறிய புகையிரத நிலையங்கள் மூலமாக மக்களுக்கு புகையிரதப் போக்குவரத்து வசதிகளைப் பெறக் கூடியதாக உள்ளமை ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடும் போது பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு முக்கியமான காரணி என அறிமுகப்படுத்த முடியும்.

## 3. பிரதேசத்தில் தற்போதுள்ள குடும்பங்களின் எண்ணிக்கையில் சுமார் 94% தேசிய மின்சார முறைமையின் ஊடாக மின்சாரத்தைப் பெறல்.

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் (2012) தொகைமதிப்பு அறிக்கைகளின் பிரகாரம் சீதாவக்க பிரதேச திட்டமிடல் அதிகாரப் பிரதேசத்தில் உள்ள சனத்தொகை 133,919 ஆகும். சீதாவக்க திட்டமிடல் பிரதேசத்தில் வாழும் குடும்பங்களின் எண்ணிக்கை அட்டவணை இலக்கம் 5.5 மூலம் காட்டப்பட்டுள்ளதுடன் அவற்றுள் 35,003 குடும்பங்கள் 2012 ஆம் ஆண்டளவில் தேசிய மின்சார முறைமையின் மூலம் மின்சாரத்தைப் பெற்றுக் கொண்டுள்ளமை தெளிவாகிறது. (அட்டவணை இலக்கம் 5.6) அது பிரதேசத்தில் காணப்படும் முழு மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளும் மூலங்களின் சதவீதமாகப் பார்க்கும் போது அது 94% இற்கும் கூடுதலானது ஆகும். மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளும் மூலங்களுக்கு அமைய குடும்பங்களின் எண்ணிக்கை அட்டவணை இலக்கம் 5.6 மூலம் விளக்கப்பட்டுள்ளது.

***அட்டவணை இலக்கம் 5. 5 – சீதாவக்க பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் வீடுகளின் எண்ணிக்கை அதிகரித்தல் (2012-2030)***

| ஆண்டு | குடும்ப எண்ணிக்கை |
|---|---|
| 2012 | 35,224 |
| 2016 | 41,725 |
| 2030 | 50,769 |

மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

***அட்டவணை இலக்கம் 5. 6 – மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ளும் மூலங்களின் அடிப்படையில் குடும்ப எண்ணிக்கை***

| மூலம் | குடும்ப எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| தேசிய மின் விநியோகம் மூலம் | 35,003 | 94.1 |
| கிராமிய மின்சாரத் திட்டம் மூலம் | - | 0 |
| மண்ணெண்ணெய் எரிப்பதன் மூலம் | 2,221 | 5.7 |
| சூரிய கோசம் | 18 | 0 |
| உயிர் வாயு மூலம் | - | 0 |
| ஏனையவை | 29 | 0 |
| **மொத்தம்** | **37,271** | **100** |

மூலம் : தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் (2012)

தற்போது முழுப் பிரதேசமும் உள்ளடங்கும் வகையில் அமைந்துள்ள மின் விநியோகத்தின் ஊடாக இலங்கை மின்சார சபையினால் வழங்கப்பட்டுள்ளது. (அது அத்தியாயம் 02 ல் வரைபட இலக்கம் 2.4 மூலம் காட்டப்பட்டுள்ளது) மின்சார சபையின் மதிப்பீட்டின் பிரகாரம் குடும்ப அலகு ஒன்றுக்கான மின்சார விநியோகம் 120 கிலோவொட்கள் ஆகும். இச் சராசரிப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடப்படும் போது சீதாவக்க திட்டமிடல் பிரதேசத்திற்குத் தேவையான தற்போதைய மின்சார நுகர்வு (குடும்ப அலகு ஒன்றுக்கு மாத்திரம்) சுமார் 5.007 மெகாவொட்கள் ஆகும். மேலும் சீதாவக்க பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் வியாபித்துக் காணப்படும் கைத்தொழில்களான கால்நடை வளக் கைத்தொழில், இறப்பர் கைத்தொழில் மற்றும் சுற்றுலாக் கைத்தொழிலுக்குத் தேவையான மின்சார விநியோகத்தை பெற்றுக் கொள்வதற்குத் தேவையான மின் கம்பி முறைமையின் பரம்பல் முழுப் பிரதேுசத்தையும் உள்ளடக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளமை புலப்படுகிறது. (உயிர் வாயு மூலம் மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளல் பின்இணைப்பு இலக்கம் 03 ல் காட்டப்பட்டுள்ளது)

இலங்கை மின்சார சபையினால் தாபிக்கப்பட்டுள்ள மின் விநியோகக் கம்பி முறைமை மற்றும் உப நிலையங்கள் அமையப் பெற்றுள்ள விதத்திற்கு அமைய 132 கிலோவொட்களைக் கொண்ட 02 உப நிலையங்கள் பிரதேசத்தில் காணப்படுகிறது. அவை பாதுக்க மற்றும் கொஸ்கம ஆகிய நகரங்களுக்கு அண்மையில் அமைந்துள்ளதுடன் அவற்றின் மூலம் உயர்வான வோல்ட் முதல் குறைவான வோல்ட் வரை மின்சாரம் விநியோகிப்பதற்கான ஆற்றல் காணப்படுகிறது. ஆகவே 2030 ஆம் ஆண்டளவில் அபிவிருத்தியடைவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நடுத்தர அடர்த்தி கொண்ட கைத்தொழில் பிரதேசங்களுக்குத் தேவையான மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு காணப்படுகிறது. அது பின்வரும் உருவப்படம் மூலம் காட்டப்படுகிறது.

***உருவப்பட இலக்கம் 5. 11 – விநியோக மின்சார முறைமை***




மூலம் : இலங்கை மின்சார சபை (2015)

இதன் பிரகாரம் 2030 ஆம் ஆண்டுக்காக போதியளவு மின்சார வழங்கல் திட்டமிடல் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுவதால் சுபீட்சமான ஒரு வதிவிட நகரத்தை அடைந்து கொள்வதில் ஒரு பலமாக உள்ளதென இனம் காண முடியும்.

## பலவீனம்

1. **களனி கங்கை மற்றும் புஸ்ஸெலி ஓயா பெருக்கெடுப்பதன் காரணமாக திடீர் வெள்ள அனர்த்தத்திற்கு ஆளாகும் பிரதேசங்கள் காணப்படல்.**

பிரதேசத்தில் அமைந்துள்ள களனி கங்கை, வக் ஓயா மற்றும் புஸ்ஸெலி ஓயா ஆகியவற்றின் மூலம் மழைவீழ்ச்சி கூடிய காலங்களில் திடீரென வெள்ள அனர்த்த நிலைமைகள் உருவாகின்றன. இவ்வாறு வெள்ள அனர்த்தத்திற்கு ஆளாகும் பிரதேசங்களில் அதிக அடர்த்தியினைக் கொண்ட வதிவிட மற்றும் வர்த்தக இடங்கள் தாபிக்கப்பட்டுள்ளமை இப் பிரதேசத்தின் திட்டமிடல் ரீதியிலான ஒரு குறைபாடாக இனம் காண முடியும். அதன் பிரகாரம் சுமார் 5,6660 ஏக்கர் பரப்பளவு வெள்ள அனர்த்த பிரதேசமாக நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் இனம் காணப்பட்டுள்ளது.

***அட்டவணை இலக்கம் 5. 7 – வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான தகவல்கள் (2016)***

| பிரதேச செயலகப் பிரிவு | பிரதேசத்தில் உள்ள மொத்த கிராம உத்தியோகத்தர் பிரிவு எண்ணிக்கை | வெள்ள அனர்த்தத்திற்கு ஆளான கிராம உத்தியோகத்தர் பிரிவு எண்ணிக்கை | வெள்ள அனர்த்தத்திற்கு ஆளான குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| ஹங்வெல்ல | 36 | 34 | 2,135 |
| பாதுக்க | 54 | 05 | 108 |
| மொத்தம் | **90** | **37** | **2,243** |

மூலம் : சீதாவக்க பிரதேச செயலகம், ஹங்வெல்ல (2016)

மேலே இலக்கம் 5.7 மூலம் பிரதேசத்தில் 2016 ஆம் ஆண்டு வெள்ள அனர்த்தத்திற்கு ஆளான கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மற்றும் குடும்பங்களின் எண்ணிக்கை தொடர்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் சீதாவக்க பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் ஹங்வெல்ல பிரிவில் அமைந்துள்ள 36 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 34 பிரிவுகள் வெள்ள அனர்த்தத்திற்கு ஆளாகி உள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளதுடன் அவற்றுள் அனர்த்தத்திற்கு ஆளான குடும்பங்களின் எண்ணிக்கை 2,135 ஆகும். பாதுக்க பிரிவில் உள்ள 54 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 05 பிரிவுகள் மாத்திரம் அனர்த்தத்திற்கு ஆளாகி உள்ளதுடன் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை 108 என கணக்கிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் சீதாவக்க பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் ஹங்வெல்ல பிரிவு பாரியளவில் வெள்ள அனர்த்தத்திற்கு உட்படுவதாக அந்த அறிக்கையின் மூலம் தெளிவாகிறது. (திட்டமிடல் பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் அடிப்படையில் வெள்ள அனர்த்தத்திற்கு ஆளாகும் பிரதேசங்கள் வரைபட இலக்கம் 5.4 மூலம் காட்டப்பட்டுள்ளது)

***உருவப்பட இலக்கம் 5. 12 - ஹங்வெல்ல பிரதேசத்தின் வெள்ள அனர்த்த சந்தர்ப்பங்கள்***





மூலம் : கள ஆய்வு, நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

## 2. **பிரதேசத்தில் தற்போதைய உட்டகட்டமைப்பு வசதிகள் போதியளவு காணப்படாமை.**

சீதாவக்க திட்டமிடல் பிரதேசத்தில் 2012 ஆம் ஆண்டு சனத்தொகை 133,919 என்பதுடன் அது 2018 ஆம் ஆண்டளவில் சனத்தொகை வளர்ச்சி வேகம் 1.7 வீதம் ஆகும். அதாவது சனத்தொகை 162,729 வரை வளர்சியடைந்துள்ளதாக எதிர்வு கூறப்பட்டது. அதற்கு ஏற்ப 2030 ல் திட்டமிடல் பிரதேசத்தில் எதிர்பார்க்கப்படும் சனத்தொகை 198,246 என மதிப்பிட முடியும் என்பதுடன் அதன் பிரகாரம் தற்போதைய சனத்தொகைக்கு சுமார் 30,000 சனத்தொகையினர் புதிதாக இணைவாரகள் எனப் புலுப்படுகிறது. இதற்கு மேலதிகமாக பிரதேசத்திற்கு வருகை தர முடியுமான இடம்பெயர் சனத்தொகையினை மதிப்பீடு செய்கின்ற போது அது சுமார் 151,009 எனப் புலப்படுகிறது. (அட்டவணை இலக்கம் 5.8).

***அட்டவணை இலக்கம் 5. 8 – எதிர்பார்க்கப்பட்ட சனத்தொகை – 2030, சீதாவக்க பிரதேச சபை அதிகார பிரதேசம்***

| சனத்தொகை | எண்ணிக்கை |
|---|---|
| இடம்பெயர் சனத்தொகை (2030) | 151,009 |
| வதிவிட சனத்தொகை (2030) | 198,246 |
| மொத்தம் | **349,255** |

மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

ஆயினும் சீதாவக்க திட்டமிடல் பிரதேசத்தில் தற்போதுள்ள உட்கட்டமைப்பு வசதிகள் அவ்வாறான ஒரு சனத்தொகை வளர்ச்சிக்குப் போதுமானதாக இல்லாதிருத்தலானது ஒரு பிரச்சினையாக இனம் காணப்பட்டது. அவ்வாறான பிரச்சினை நிலைமைகள் சுகாதாரம், கல்வி, போக்குவரத்து மற்றும் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் ஆகிய துறைகளில் தாக்கம் செலுத்துகின்றன.

திட்டமிடல் பிரதேசத்தில் தற்போது சுகாதார வசதிகளை வழங்குவதற்காக பிரதானமாக தற்போதுள்ள அரச வைத்தியசாலைகளாக பாதுக்க பிரதேச வைத்தியசாலை மற்றும் சாலாவ பிரதேச வைத்தியசாலை ஆகியன மாத்திரம் தாபிக்கப்பட்டுள்ளன. அந்த வைத்தியசாலைகளில் நிலவும் பௌதிக மற்றும் மனித

வளங்கள் தற்போது பிரதேசத்தில் வாழும் மக்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்குப் போதுமானதாகக் காணப்படவில்லை. (வள வெட்டுமுகத் தோற்ற அறிக்கை – 2016) பிரதேசத்தில் காணப்படும் சுகாதார வசதிகளின் நிலைமை அட்டவணை இலக்கம் 5.9 மூலம் காட்டப்பட்டுள்ளது.

***அட்டவணை இலக்கம் 5. 9 – சீதாவக்க பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் காணப்படும் சுகாதார வசதிகள்***

| சுகாதார நிலையங்கள் | தற்போதுள்ள கட்டில்கள் எண்ணிக்கை | தற்போதுள்ள வைத்தியர்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| பாதுக்க வைத்தியசாலை | 80 | 46 |
| கொஸ்கம – தள வைத்தியசாலை | 40 | 14 |
| தனியார் வைத்தியசாலை | குறிப்பிடப்படவில்லை | 23 |
| மோத்த சனத்தொகை | 220(கற்பனைப் பெறுமதி) | 83 |

மூலம் : வள வெட்டுமுகத் தோற்ற அறிக்கை (2016)

இதற்கு மேலதிகமாக தற்போதைய வைத்தியசாலைகளின் அமைவிடத்தினை 03 கி.மீ. ஆரையுடன் கூடிய பரப்பில் கருதுமிடத்து பிரதேசத்திற்குத் தேவையான வைத்தியசாலைகளின் பரவல் குறைந்த அளவில் உள்ளதனை அவதானிக்க முடியும். (வரைபட இலக்கம் 5.6).

இதன் பிரகாரம் தெளிவாவது யாதெனில், சீதாவக்க திட்டமிடல் பிரதேசத்தின் சனத்தொகைப் பரம்பலை கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் நோக்குமிடத்து உயர்வான அடர்த்தியினைக் கொண்ட ஹங்வெல்ல, பாதுக்க மற்றும் கொஸ்கம் ஆகிய நகரங்களை அண்டிய பிரதேசங்களில் காணப்படுகிறது என்பதாகும். ஆயினும் கொஸ்கம மற்றும் பாதுக்க ஆகிய அதிகூடிய அடர்த்தியினைக் கொண்ட பிரதேசங்களுக்கு அந்த வைத்தியசாலை வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடிந்த போதும் ஏனைய அதிகூடிய அடர்த்திப் பிரதேசங்களுக்கு வைத்தியசாலை வசதிகள் இல்லை என்பது அவதானிக்க கூடியதாக உள்ளது. ஆகவே ஏனைய சனத்தொகை அடர்த்திப் பிரதேசங்கள் உள்ளடங்கும் வகையில் புதிய வைத்தியசாலைகளை உருவாக்குதல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டி உள்ளது.

***வரைபட இலக்கம் 5. 6 – வைத்தியசாலைகளின் பரம்பல் (2017), சீதாவக்க பிரதேச சபை அதிகார பிரதேசம்***




மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

சீதாவக்க திட்டமிடல் பிரதேசத்தில் தற்போதுள்ள கல்வி வசதிகள் தொடர்பாக கவனம் செலுத்தும் போது அதில் காணப்படும் ஆரம்ப, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்கள் முக்கிய இடத்தினை வகிக்கின்றன. இங்கு காணப்படும் பாடசாலைக் கட்டமைப்பினை கீழே குறிப்பிடப்பட்டவாறு சுட்டிக் காட்ட முடியும்.

***அட்டவணை இலக்கம் 5. 10 – சீதாவக்க பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் காணப்படும் பாடசாலைக் கட்டமைப்பு***

| பாடசாலைக் கட்டமைப்பு | எண்ணிக்கை |
|---|---|
| 1. ஆரம்ப பாடசாலைகள் | 04 |
| 2. இரண்டாம் நிலை பாடசாலைகள் | 27 |
| 3. மூன்றாம் நிலை பாடசாலைகள் | 07 |
| 4. தனியார் கல்வி நிலையங்கள் | குறிப்பிடப்படவில்லை |
| 5. ஏனையவை | - |
| மொத்தம் | **31** |

மூலம் : வள வெட்டுமுக அறிக்கை (2016)

இப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் தொகை 32,010 ஆகும். (2016 ஆம் ஆண்டு) இதற்கு மேலதிகமாக பிரதேசத்தில் காணப்படும் இனம் காணப்பட்ட பிரதான பாடசாலைகளில் 01 கி.மீ மற்றும் 02 கி.மீ ஆரையுடன் கூடிய பரப்பில் உள்ள பாடசாலைகளின் பரம்பல் பற்றி கருதுகின்ற போது சனத்தொகைப் பரம்பலுடன் ஒப்பிடும் போது பாடசாலைகளின் பரம்பல் உயர் நிலையில் காணப்பட்ட போதும் (வரைபட இலக்கம் 5.7) பிரதேசத்தில் காணப்படும் பாடசாலைகள் மூடப்படும் ஒரு போக்கு காணப்படுகின்றமை வள வெட்டுமுகத் தோற்ற அறிக்கையின் (2016) பிரகாரம் தெளிவாகிறது. அதன் பிரகாரம் கடந்த சில வருடங்களில் மூடப்பட்ட பாடசாலைகளின் தொகை அட்டவணை இலக்கம் 5.11 மூலம் காட்டப்பட்டுள்ளது.

***அட்டவணை இலக்கம் 5. 11 – பிரதேசத்தில் மூடப்பட்ட பாடசாலைகள் தொடர்பான தரவுகள்***

| நிர்வாகப் பிரதேசம் | மூடப்பட்ட பாடசாலைகள் தொகை |
|---|---|
| பாதுக்க பிரதேச செயலகப் பிரிவு | 04 |
| சீதாவக்க பிரதேச செயலகப் பிரிவு | 04 |

மூலம் : வள வெட்டுமுக அறிக்கை (2016)

இதற்காக பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் நிலவும் பௌதிக வசதிகள் (விஞ்ஞான ஆய்வு கூடம், மனைப் பொருளியல் கூடம், கணணி வசதிகள், சாப்பாட்டு அறை மற்றும் மலசல கூடம் ஆகியன) போதாமை இதற்கான பிரதான காரணமாக இனம் காணப்பட்டுள்ளது. ஆகவே திட்டமிடல் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளின் பௌதிக வசதிகளை அபிவிருத்தி செய்யும் தேவை உள்ளதாக குறிப்பிட முடியும். இதற்கு மேலதிகமாக பிரதேசத்தின் தொழிற் பயிற்சி வசதிகள் போதியளவு காணப்படவில்லை என்பதுடன் தற்போது பாதுக்க மற்றும் கொஸ்கம ஆகிய நகரங்களில் இரண்டு தொழிற் பயிற்சி நிலையங்கள் தாபிக்கப்பட்டுள்ளதுடன் அதில் 300 இற்கும் குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள்.

***வரைபட இலக்கம் 5. 7 – பாடசாலைகளின் பரம்பல் (2017), சீதாவக்க பிரதேச சபை அதிகார பிரதேசம்***




மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

சீதாவக்க திட்டமிடல் பிரதேசத்தின் போக்குவரத்து முறைமையில் நிலவும் குறைபாடுகள் தொடர்பாக அவதானிக்கும் போது திட்டமிடல் பிரதேசத்தில் வதிவிட மற்றும் இடம்பெயர்ந்துள்ள மக்களின் அடிப்படைப் போக்குவரத்து தேவைப்பாட்டை நிறைவு செய்யும் புகையிரத சேவை மற்றும் பொதுப் பயணிகள் பஸ் போக்குவரத்து சேவை ஆகிய இரண்டு போக்குவரத்து ஊடகங்களுக்கு இடையில் முறையான ஒரு தொடர்பு காணப்படாமையினை ஒரு முக்கிய பிரச்சினையாக நோக்க முடியும்.

நாளாந்த பாதுக்க நகரத்தில் சுமார் 30,000 சனத்தொகையினர் பாதுக்க பிரதேச வைத்தியசாலை, அரச நிர்வாக நிறுவனங்கள், பாடசாலைகள் உள்ளிட்ட தனியார் நிறுவனங்கள் மூலம் பல்வேறு சேவைகளை வழங்குவதற்காக செயற்படுவதுடன் அந்த மக்களுக்கான போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக்கொள்வதில் பிரதானமாக புகையிரதம் மற்றும் பஸ் வண்டிகள் மூலமாக மேற்கொள்ளப்படுகிறது. ஆயினும் அப் போக்குவரத்து சேவைகளுக்கு இடையில் முறையான ஒரு தொடர்பு காணப்படாத காரணத்தால் இச் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் நபர்களுக்கு பாதுகாப்பானதும் செயற்திறன் வாய்ந்ததுமான போக்குவரத்து சேவைகளை வழங்குவதில் தடைகள் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைமை கொஸ்கம மற்றும் வக ஆகிய பிரதான புகையிரத நிலையங்கள் உள்ளிட்ட ஏனைய புகையிரத நிலையங்கள் அமையப் பெற்றுள்ள பிரதேசங்களிலும் காணப்படுவதுடன் அப் புகையிரத நிலையங்களுக்கு அண்மையில் பஸ் நிலையங்கள் அமையப் பெறாமை மற்றும் தனியார் வாகனத் தரிப்பிட இடவசதிகள் இல்லாமை காரணமாக பயணிகள் புகையிரத சேவையைப் பெற்றுக் கொள்வதில் அதிகளவு நாட்டம் கொள்ளாமையினை ஒரு பிரச்சினையாக இனம் காணப்பட்டுள்ளது.

அவ்வாறே பிரதான புகையிரத நிலையங்களில் சுகாதார வசதிகள் உள்ளிட்ட ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் தேவை காணப்படுவதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

பின்வரும் வரைபடம் மூலம் பிரதேசத்தில் காணப்படும் புகையிரத நிலையங்கள் மற்றும் பஸ் நிலையங்களுக்கு இடையில் நிலவும் ஒருங்கிணைப்பில் குறைபாடு நிலவுவதை அவதானிக் முடியும்.

***வரைபட இலக்கம 5. 8 – புகையிரத மற்றும் பஸ் நிலையத்திற்கு இடையில் காணப்படும் ஒருங்கிணைப்பில் நிலவும் குறைபாடு – சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசம்***




மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

### 3. பிரதேசத்தில் வாழும் தொழிற்படையினருள் 70% வீதத்தினர் பயிற்றப்படாத தொழிற்படையினராக காணப்படல்.

குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் புள்ளிவிபர அறிக்கை – 2012 இற்கு அமைய திட்டமிடல் பிரதேச மொத்த சனத்தொகையில் 15 – 60 வயதிற்கு இடைப்பட்ட ஊழியர் படை 62.1% வீதம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரதேச செயலக அறிக்கை – 2018 இற்கு அமைய பொருளாதார செயற்பாட்டு சனத்தொகை 15 – 59 வயதிற்கு இடைப்பட்டது என இனம் காணப்பட்டுள்ளதுடன் அதில் 70% ஆரம்ப தரத்தில் உள்ள ஊழியர்களாக கருதப்படுகிறது. பாடசாலைக் கல்வியினைப் பெறாத மற்றும் தரம் 06 வரை மாத்திரம் கல்வி கற்ற நபர்கள் இதில் உள்ளடங்குவார்கள். அது பிரதேசத்தில் காணப்படும் பொருளாதார செயற்பாடுகளை தரமானதாக மேற்கொள்வதில் தடைகளை ஏற்படுத்தி உள்ளதாக இனம் காணப்பட்டுள்ளது.

ஊழியர் படையில் 20% வீதத்தினர் இரண்டாம் நிலைப் பிரிவு, அதாவது சாதாரண தரம் வரை பாடசாலைக் கல்வி கற்றவர்கள் ஆவார்கள். இந்த ஊழியப் படையினருள் சுமார் 10% வீதத்தினர் மூன்றாம் நிலைப் பிரிவில் அதாவது உயர்தரம் மற்றும் அதற்கு மேல் கல்வி கற்றவர்கள் என இனம் காணப்பட்டுள்ளது. (வரைபு இலக்கம் 5.5) ஊழியர் படையானது திட்டமிடல் பிரதேசம் பூராக பரவி உள்ள விதம் வரைபட இலக்கம் 5.9 மூலம் காட்டப்பட்டுள்ளது.

***வரைபு இலக்கம் 5. 5– சீதாவக்க பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் தற்போதைய ஊழியர் படை***




மூலம் : வள வெட்டுமுகத் தோற்ற அறிக்கை (2016)

ஆகவே அக் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக பிரதேசத்தில் வாழும் மக்களின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியினை ஏற்படுத்துவதற்காக புதிய கருத்திட்டங்களை உருவாக்குவதற்கான வாய்ப்பு இத் திட்டம் மூலம் இனம் காணப்பட்டுள்ளது.

***வரைபட இலக்கம் 5. 9 – ஊழியர் படையின் பரம்பல் (2016)***




மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

## சந்தர்ப்பம்

**1.** நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் இலங்கை புகையிரதத் திணைக்களம் ஆகிய அரச நிறுவனங்கள் மூலம் உத்தேச எதிர்கால கருத்திட்டங்கள்

ஹொரண நகரத்தில் கைத்தொழில் பேட்டை ஒன்றை தாபிப்பதற்கு மற்றும் களனிவெளி புகையிரதப் பாதையை இரட்டை வழி புகையிரதப் பாதையாக அபிவிருத்தி செய்வதற்கு அரசினால் ஏற்கனவே திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது.

அக் கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதன் மூலம் சீதாவக்க பிரதேசத்தில் வாழும் ஊழியர்களுக்கு தொழல் வாய்ப்பு கிட்டும் என எதிர்பார்க்கப்படுவதுடன் களனிவெளி புகையிரதப் பாதையை இரட்டைவழி புகையிரதப் பாதையாக அபிவிருத்தி செய்யும் கருத்திட்டத்தின் மூலம் பிரதேச மக்களுக்குத் தேவையான செயற்திறன் வாய்ந்த போக்குவரத்து சேவையினைப் பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைக்கிறது.

***உருவப்பட இலக்கம் 5. 13 – உத்தேச ஹொரண கைத்தொழில் பேட்டை கருத்திட்டம்***




மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

**2. 2016 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட மேல்மாகாண மாநகர திட்டமிடலின் (Western Region Megapolis Plan) ஊடாக விவசாயப் பிரதேசமாக அபிவிருத்தி செய்வதற்காக இனம் காணப்படல்.**

சுமார் 330 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் பரவிக் காணப்படும் இந்த விவசாய நகரப் பிரதேசம் மேல் மாகாணத்தின் மத்திய மற்றும் கிழக்கு திசை ஊடாக பரவிக் காணப்படுகிறது. மேல் மாகாண மாநகர

திட்டமிடலுக்கு அமைய சீதாவக்க அதிகாரப் பிரதேசம் விவசாய பிரதேசமாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென இனம் காணப்பட்டுள்ளதுடன் விவசாயப் பொருளாதார நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் அதன் மூலம் அந்த வலயத்தில் உட்டகட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் அத் திட்டத்தின் மற்றுமொரு நோக்கமாக இனம் காணப்பட்டுள்ளது. அதன் போது இத் திட்டத்தின் மூலம் சுமார் 90,000 புதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு எதிர்பாரக்கப்படுகிறது. ஆகவே இப் பிரதேசம் நகரத் திட்டமிடலின் ஊடாக புதிய இறப்பர் கைத்தொழிலுடன் தொடர்பான வேலை வாய்ப்புக்கள் மற்றும் கைத்தொழில் சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 3. மேல் மாகாண மாநகர சபை திட்டத்தின் கீழ் திட்டமிடல் பிரதேசத்திற்கான மின் புகையிரத வீதி தாபிக்கப்படல்.

மேல் மாகாண மாநகர திட்டத்தின் கீழ் களனிவெளிப் புகையிரதத்தை மின் சக்தியைக் கொண்டு இயக்குவதற்கு மற்றும் புதியதொரு மின்சாரப் புகையிரத வீதி ஒன்றை களனியில் இருந்து கொஸ்கம வரை நிர்மாணிப்பதற்கு இனம் காணப்பட்டுள்ளது. (*உருவப்பட* இலக்கம் 5.14)

## பயமுறுத்தல்

### 1. கருங்கற்கள் உடைக்கும் கைத்தொழிலுக்காக ஏனைய பிரதேசங்களில் இருந்து முதலீட்டாளர்கள் வருகை தரல்.

சீதாவக்க பிரதேச செயலகப் பிரிவின் ஹங்வெல்ல பிரிவில் 34 கருங்கல் கருத்திட்ட இடங்கள் இனம் காணப்பட்டுள்ளதுடன் அவற்றுள் சுமார் 28 கருங்கல் உடைக்கும் கைத்தொழில் முதலீட்டாளர்கள் கொழும்பு, பியகம, கடுவெல, களனி, பிட்டகோட்டே, ஹோமாகம ஆகிய பிரதேச குடியிருப்பாளர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளது. இதன் காரணமாக பிரதேசத்தின் பொருளாார நன்மைகள் வேறு பிரதேசங்களை நோக்கி ஈர்க்கப்படுவதுடன் இக் கருங்கல் உடைக்கும் கைத்தொழிலில் நீண்டகாலம் ஈடுபடுவதன் காரணமாக பிரதேசத்தின் சூழல் வளம் அழிவடையும் அபாயத்தை எதிர்நோக்கி உள்ளது.

***உருவப்பட இலக்கம் 5. 14 – உத்தேச புதிய மின்சார புகையிரத வீதி, சீதாவக்க திட்டமிடல் அதிகாரப் பிரதேசம்***




மூலம் : மேல் மாகாண மாநகரத் திட்ட கருத்திட்டம் (2030)

அத்தியாயம்

# 06



# அபிவிருத்தி திட்டம்

# அத்தியாயம் 06
# அபிவிருத்தி திட்டம்

## 6.1 கருதுகோள் திட்டம்

***வரைபட இலக்கம் 6. 1 – கருதுகோள் திட்டம் (2030)***




மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

எதிர்கால தொலைநோக்கின் மூலமாக கொழும்பு மாவட்டத்தின் ஆசிர்வதிக்கப்பட்ட பசுமை நகரமாக சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் போது பிரதேசத்தின் எதிர்கால செல்திசையின் அவகாச மாற்றம் மேலே உள்ள உருவப்பட குறிப்பு மூலம் காட்டப்பட்டுள்ளது. பிரதானமாக இயற்கைச் சூழலுடன் பிணைக்கப்பட்ட சூழல் சுற்றாடல் செயற்பாடுகள் வலயப் பிரதேசத்தின் கிழக்கு எல்லை ஊடாகவும் பிரதேசத்தின் மத்திய பகுதியை நோக்கிச் செல்லும் போது அதி கூருணர்வு சூழல் பிரதேசத்தைப் பாதுகாப்பதற்கான அடர்த்தி குறைந்த குடியிருப்பு சூழலை ஏற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. பிரதேசத்தின் வடக்கு மற்றும் மேற்கு எல்லைகளின் ஊடாக நீலப் பசுமை சூழலை உள்ளடக்கிய அதி கூருணர்வு சூழல் பிரதேசத்தைப் பாதுகாப்பதற்காக இனம் காணப்பட்ட சூழல் நேய செயற்பாட்டு பிரதேசம் ஒன்றும் கருதுகோள் திட்டம் மூலம் காட்டப்பட்டுள்ளது.

உத்தேச சூழல் சுற்றுலா மேம்பாட்டு வலயம் புவக்பிட்டிய – தும்மோதர வீதி மற்றும் அஸ்வத்து ஓயா ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மேம்பாடடைவதுடன் அதன் பெரும்பாலான உள்ளக பிரவேச வீதிகள் மேலும் விரிவுபடுத்தப்படாமை மற்றும் அடர்த்தி குறைந்த அபிவிருத்திகள் உத்தேசிக்கப்பட்டுள்ளமையால் சூழல் நட்புறவைப் பாதுகாக்கும் அபிவிருத்திக்கான வாய்ப்பு திறந்து விடப்பட்டுள்ளது.

உத்தேச பாதுக்க – கொஸ்கம மாற்றுப் பிரவேச வீதியின் ஊடாக தொடர்பு படும் கால்நடை வள வலயம் மற்றும் அடர்த்தி குறைந்த வதிவிட மற்றும் நகர விவசாய வலயத்தின் ஊடாக பிரதேசத்திற்கே உரித்தான கால்நடை வள மற்றும் கருங்கல் உடைக்கும் கைத்தொழில் ஆகியவற்றை சூழல் நட்புறவுடன் பேணிச் செல்ல எதிர்பார்க்கப்படுகிறது. அதன் மூலம் அக் கைத்தொழில்களுக்கும் அங்குள்ள குடியிருப்பாளர்களுக்கும் இடையிலான மோதல்களைக் குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இனம் காணப்பட்ட நகர சந்திகளான பாதுக்க, ஹங்வெல்ல, கொஸ்கம மற்றும் வக ஆகிய நகரங்களை ஒன்றுடன் ஒன்று தனித்துவமான பண்புகளின் அடிப்படையில் வர்த்தக மற்றும் சேவை வழங்கும் மத்திய நிலையங்களாக அபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்பு கிடைக்கின்றது. அடர்த்தி கூடிய அபிவிருத்தி நெருக்குதலின் முன் பாதுகாக்கப்பட வேண்டிய ஏனைய சூழல் கூருணர்வு பிரதேசங்கள் அதாவது, காட்டு நிலங்கள், நீர்த் தேக்கங்கள், ஈர நிலங்கள், வயல் நிலங்கள், இறப்பர் தோட்டங்கள் மற்றும் கால்வாய்கள் போன்றவற்றைப் பாதுகாப்பதற்கான விசேட உபாயவழிமுறைகள் இனம் காணப்பட்டுள்ளன. பிரதான நகர மத்திய நிலையங்களை இணைத்து மத்திய நிலையங்களுக்கு இடையிலான பிரவேசத்தை அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு மேலதிகமாக இடம்பெறும் அதிகூடிய அபிவிருத்தியைக் கட்டுப்படுத்துவதற்கு இத் திட்டம் மூலம் உபாயம் தீட்டப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் இக் கருதுகோள் திட்டத்தின் ஊடாக இயற்கைச் சூழல் பண்புகளை எடுத்துக் காட்டும் பிரதேசத்தில் இனம் காணப்பட்ட பிரச்சினைகளைக் குறைத்து பிரதேசத்திற்கே உரித்தான பசுமைப் போர்வை, நீர்ப் போர்வை மற்றும் மற்றும் வரலாற்றுப் பெறுமையினைப் பாதுகாத்து அக் காரணிகள் ஊடாக பொருளாதாரத்தை வலுவடையச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் பிரதேசத்தைப் பொருத்தமான ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக பாதுகாப்பதற்கும் வெள்ளம் மற்றும் மண்சரிவுகளுக்கு ஆளாகும், ஆளாவதற்கான சாத்தியம் உள்ள பிரதேசங்களை உரிய நிலப் பாவனை முகாமைத்துவத்தின் மூலமாக இழப்புகளைக் குறைப்பதற்கும் இத் திட்டம் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. அதன் மூலம் கொழும்பு மாவட்டத்தின் ''ஆசீர்வதிக்கப்பட்ட பசுமை நகரம்'' எனும் எதிர்கால தொலை நோக்கிடை அடைந்து கொள்வதற்கு சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்கு முடியுமாக இருக்கும்.

## 6.2 உத்தேச பூமிப் பாவனைத் திட்டம்

***வரைபட இலக்கம் 6. 2 – பூமிப் பாவனைத் திட்டம் (2030)***




மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

திட்டமிடல் அதிகாரப் பிரதேசம் கொழும்பு மாவட்டத்தின் ஆசீர்வதிக்கப்பட்ட பசுமைப் போர்வை எனும் தொலைநோக்கினை அடைந்து கொள்ளும் நோக்கில் பொருளாதார, சூழல், சமூக மற்றும் பௌதிக அபிவிருத்தி அதாவது தாங்க முடியுமான ஓர் அபிவிருத்தியினை நடைமுறைப்படுத்தும் பொருட்டு அதற்குத் தேவையான உபாய வழிமுறைக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் மாதிரி ஒன்றின் பிரதிபலிப்பு உத்தேச காணிப் பாவனை திட்டத்தின் (வரைபட இலக்கம் 6.2) மூலம் காட்டப்படுகிறது.

ஒட்டு மொத்த நிலப் பாவனைத் திட்டம் பிரதானமாக அடர்த்தி குறைந்த ஒரு வதிவிட அபிவிருத்தி எதிர்பார்க்கப்படுவதுடன் பிரதானமாக எஸ்வத்து ஓயா, மற்றும் களனி கங்கை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு சூழல் செயற்பாடுகளுடன் இணைந்த சுற்றுலா மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. உத்தேச அடர்த்தி குறைந்த வதிவிட மற்றும் நகர விவசாய வலயம் மற்றும் கால்நடை வள கைத்தொழில் வலயத்தில் எதிர்பார்க்கப்பட்ட கைத்தொழில் மேம்பாட்டுக்கான சந்தர்ப்பம் திறந்து விடப்படுவதுடன் ஏனைய பிரதேசங்களை கவர்ச்சிகரமான பிரதேசங்களாக அடர்த்தி குறைந்த்த அபிவிருத்தியுடன் மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. கொஸ்கம, பாதுக்க, ஹங்வெல்ல ஆகிய சந்திகளை அண்டிய பிரதேசங்களின் வர்த்தக காணிகளின் பயன்பாட்டுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதுடன் வக சந்தியை வதிவிட மத்திய நிலையமாக அபிவிருத்தி செய்வதற்கு யோசனை தெரிவிக்கப்படுகிறது. பாதுகாக்கப்பட வேண்டிய காட்டு நிலங்கள் மற்றும் நீரேந்துப் பகுதிகள், தாழ் நிலங்களை உள்ளடக்கிய சூழல் கூருணர்வு இடங்கள் சூழல் பாதுகாப்பு பிரதேசங்களாகப் பெயரிடப்பட்டுள்ளன. களனி கங்கை பெருக்கெடுக்கும் வேளைகளில் பாதிக்கப்படும் பிரதேசங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளை கட்டுப்படுத்தி சூழல் நட்புறவு கருத்திட்டங்களுக்கான சந்தர்ப்பம் திறந்து விடப்பட்டுள்ளது.

மேலும் உத்தேசக் காணிப் பாவனைத் திட்டத்தை யதார்த்தமாக்குவதற்கு அபிவிருத்தி திட்டத்தின் இரண்டாம் பிரிவின் ஊடாக திட்டமிடல் மற்றும் வலயப்படுத்தல் ஒழுங்கு விதிகள் அறிமுகம் செய்து வைக்கப்படும்.

பின்வரும் உருவப்படம் மூலம் உத்தேச வதிவிட வலயத்தின் ஒரு வெட்டுமுகத் தோற்றம் காட்டப்பட்டுள்ளது.

***உருவப்பட இலக்கம் 6. 1 – உத்தேச வதிவிட வலயத்தின் வெட்டுமுகத் தோற்றம்***




மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

கீழே காட்டப்படும் உருவப்படம் மூலம் உத்தேச சுற்றுலா சூழல் வலயத்தின் வெட்டுமுகத் தோற்றம் காட்டப்பட்டுள்ளது.

***உருவப்பட இலக்கம் 6. 2 – உத்தேச சுற்றுலா சூழல் வலயத்தின் வெட்டுமுகத் தோற்றம்***




மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

***உருவப்பட இலக்கம் 6. 3 - உத்தேச பொருளாதார மேம்பாட்டு வலயத்தின் வெட்டுமுகத் தோற்றம்***




மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

## 6.3 உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் உபாயவழிமுறை

அகொழும்பு மதவட்டத்தின் “ஆசீர்வதிக்கப்பட்ட பசுமை நகரம்” என்பதனை நோக்கமாகக் கொண்டு சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தை அந்த தொலைநோக்கினை நோக்கி கொண்டு செல்வதற்குத் தேவையான உபாய வழிமுறைகளான பௌதிக, சமூக உட்டகட்டமைப்பு வசதிகள் தொடர்பாக இங்கு விவரிக்கப்பட்டுள்ளது.

உத்தேச சேவை வழங்கல் உபாய வழிகள், உத்தேச போக்குவரத்து உபாய வழிகள், உத்தேச நீர் வழங்கல் உபாய வழிகள், உத்தேச மின் மற்றும் தரவுக் கம்பி உபாய வழிகள், உத்தேச கழிவுப்பொருள் மற்றும் மலக்கழிவகற்றல் உபாய வழிகள், உத்தேச திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ உபாய வழிகள் ஆகியன இத் தலைப்பின் கீழ் கலந்துரையாடப்பட உள்ளது.

### 6.3.1 சேவை முகாமைத்துவ உபாய வழிகள்

2030 ஆம் ஆண்டளவில் சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் வதிவிட மற்றும் குடிபெயரும் மக்களுக்கு எதிர்பார்க்கப்படும் சுகாதாரம், கல்வி வதிவிடம் ஆகிய சேவைகளை வழங்குதல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு இத் திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. (வரைபட இலக்கம் 6.3)

208 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு கொண்ட சீதாவக்க பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் 2012 ஆம் ஆண்டு சனத்தொகை 133,919 ஆகும் என குடிமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்கள (2012) அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த தரவு அறிக்கையின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டு சனத்தொகை 162,729 என எதிர்வு கூறப்பட்டதுடன் அதன் பிரகாரம் 2030 ஆம் ஆண்டளவில் அது 198,102 வரை அதிகரிக்கும் என எதிர்பார்க்க முடியும். ஆகவே சுகாதாரம், கல்வி, வதிவிடத் தேவைகள் எதிர்பார்க்கப்பட்ட சனத்தொகையினை அடிப்படையாகக் கொண்டு மேலும் விளக்கப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்ட சனத்தொகை பிரதானமாக சூழல் கூருணர்வு பிரதேசங்களை நோக்கி நகர்தல் மூலம் இடம் பெறும் அபிவிருத்தியைக் குறைப்பதற்கு உதவும் வகையில் உட்டகட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென இனம் காணப்பட்டது. அதன் பிரகாரம் வக, பாதுக்க, ஹங்வெல்ல, கொஸ்கம ஆகிய தெரிவு செய்யப்பட்ட சில நகரங்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் அபிவிருத்தியை நோக்கி நகர்வதற்கு அபிவிருத்தி திட்டம் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. அதன் போது நடுத்தர அடர்த்தி வதிவிட வலயம், சேவை வர்த்தக வலயம், பிரசைகள் வர்த்தக வலயம் ஆகியன மேலே குறிப்பிடப்பட்ட கநரங்களை அடிப்படையாகக் கொண்டு தாபிப்பதற்கு இந்த அபிவிருத்தி திட்டம் மூலம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக ஈர நிலப் பிரதேசங்கள், களனி கங்கையை அண்டிய பிரதேசங்கள், வக் ஓயா மற்றும் புஸ்ஸெலி ஓயாவை அண்டிய பிரதேசம் ஆகிய சூழல் பிரதேசங்களில் மிகக் குறைந்த வதிவிட அடர்த்தியுடன் கூடிய அபிவிருத்திகளைப் பேணிச் செல்வதற்கு திட்டம் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறே மேலே குறிப்பிடப்பட்ட கூருணர்வு சூழல் முறைமை தவிர்ந்த ஏனைய பிரதேசங்களை குறைந்தளவிலான வதிவிட அடர்த்தி கொண்ட பிரதேசங்களாக அபிவிருத்தி செய்தல் நோக்கமாகக் கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஒவ்வொரு பிரதேசத்திற்கு அமைய சுகாதாரம், கல்வி, வதிவிடத் தேவைகளை எதிர்பார்க்கப்பட்ட சனத்தொகையினை அடிப்படையாகக் கொண்டு மேலும் விவரிக்கப்பட்டுள்ளது.

#### 6.3.1.1 சுகாதார சேவைகள் உபாய வழிகள்

சீதாவக்க பிரதேச சபை அதிகார பிரதேசம் தற்போது சுகாதார வசதிகளை வழங்கும் இடங்களாக அரசாங்க வைத்தியசாலைகள், ஆயுர்வேத வைத்தியசாலைகள், தனியார் வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார வைத்திய உத்தியோகத்ர் அலுவலகம் ஆகியவற்றை உள்ளடக்கி உள்ளதுடன் அரச வைத்தியசாலைகளாக பாதுக்க பிரதேச வைத்தியசாலை மற்றும் சாலாவ பிரதேச வைத்தியசாலை ஆகியன இனம் காணப்பட்டுள்ளது.

சுகாதாரம், போசனை மற்றுள் சுதேச மருத்துவ அமைச்சு – வருடாந்த சுகாதார தரவு அறிக்கை – 2016 இற்கு அமைய கொழும்பு மாவட்டத்திற்காக வைத்தியசாலை ஒன்றில் 1,000 நபர்களுக்கு காணப்படப்பட வேண்டிய கட்டில்களின் விகிதாசாரம் 5.9 ஆக காணப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. உலக சுகாதார நிறுவனத்தினால ஏற்றுக் கொளளப்பட்டதற்கு இணங்க 1,000 நபர்களுக்காக காணப்பட வேண்டிய ஏற்றுக் கொள்ளப்பட்ட கட்டில்களின் விகிதாசாரம் 3:5 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் பிரதேச செயலகங்கள் மூலமாக 2016 ஆம் ஆண்டுக்காக தயார் செய்யப்பட்டுள்ள அறிக்கைகளின் பிரகாரம் அந்த ஆண்டு பாதுக்க பிரதேச வைத்தியசாலையில் காணப்பட்ட கட்டில்களின் எண்ணிக்கை 80 என்பதுடன் அந்த ஆண்டில் சிகிச்சை பெற்றுக் கொண்ட நோயாளர்கள் எண்ணிக்கை 6,400 என அறிக்கையிடப்பட்டுள்ளது. இந்த அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் சகல அரச வைத்தியசாலைகள் மற்றும் தனியார் வைத்தியசாலைகளில் உள்ள மொத்த கட்டில்களின் எண்ணிக்கை 210 என பிரதேச செயலகத்தினால் 2016 ஆம் ஆண்டுக்காக தயார் செய்யப்பட்ட அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆயினும் பிரதேசத்தின் தற்போதைய சனத்தொகை 162,729 என அறிக்கையிடப்பட்டுள்ளதன் காரணமாக மற்றும் மேலே உள்ள தரவுகள் பற்றிக் கவனத்திற் கொள்ளும் போது சீதாவக்க பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் 1,000 நபர்களுக்காக 1.4 கட்டில்கள் காணப்பட்டதுடன் உலக சுகாதார நிறுவனத்தினால ஏற்றுக் கொளளப்பட்டதற்கு இணங் காணப்பட வேண்டிய கட்டில்களின் எண்ணிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்ட பெறுமதிக்கு அமைய திட்டமிடல் பிரதேசத்தில் காணப்பட வேண்டிய கட்டில்களின் எண்ணிக்கை சுமார் 560 ஆக காணப்படல் வேண்டும். மேலும், தற்போதுள்ள வைத்தியசாலைகளுக்காக போதியளவு வைத்திய உத்தியோகத்தர்கள் காணப்படவில்லை என்பது வள வெட்டுமுகத் தோற்ற அறிக்கை – 2016 இற்கு அமைய தெளிவாகிறது.. ஆகவே 2030 ஆம் ஆண்டளவில் திட்டமிடல் பிரதேசத்தை அண்டியதாக காணப்படும் பிரதேச வைத்தியசாலைகள் உள்ளிட்ட ஏனைய சுகாதார வசதிகள் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்.

திட்டமிடல் பிரதேசத்தில் தற்போது காணப்படும் பிரதேச வைத்தியசாலைகள், மகப்பேற்று சிகிச்சை நிலையங்கள் மற்றும் ஆயர்வேத வைத்தியசாலைகளின் பரம்பல் பற்றிக் கருதும் போது சாலாவ பிரதேச வைத்தியசாலை மற்றும் பாதுக்க பிரதேச வைத்தியசாலையில் இருந்து 03 கிலோ மீற்றர் ஆரை கொண்ட பரப்பளவில் 2030 ஆம் ஆண்டளவில் கொஸ்கம் மற்றும் பாதுக்க ஆகிய இரண்டு நகரங்களை மையமாகக் கொண்டு தாபிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் நடுத்தர அடர்த்தி வதிவிட மற்றும் அடர்த்தி குறைந்த வதிவிட வலயங்களை பூரணமாக உள்ளடக்கும் வகையில் வைத்தியசாலை வசதிகளை பரவச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

ஆயினும் ஹங்வெல்ல நகரம் மற்றும் வக நகரத்தை அடிப்படையாகக் கொண்டு 2030 ஆம் ஆண்டு தாபிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள நடுத்தர அடர்த்தி மற்றும் அடர்த்தி குறைந்த வதிவிடப் பிரதேசங்கள் உள்ளடங்கும் வகையிலான வைத்தியசாலை தாபிக்கப்படவில்லை என்பது புலனாகிறது. அதன் பிரகாரம் புதிய ஒரு வைத்தியசாலை கஹஹேன, வக புகையிரத நிலையத்திற்கு அண்மையில் அமைந்துள்ள 3.8 ஹெக்டயார் வெற்றுக் காணியில் புதிய ஒரு வைத்தியசாலை நிர்மாணிப்பதற்கான யோசனை முன் வைக்கப்பட்டுள்ளது.

இத் திட்டமிடல் பிரதேசத்தில் 2030 ஆம் ஆண்டளவில் எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திப ற்றிக் கருத்திற் கொள்ளும் போது சுகாதார சேவைகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய விதம் தொடர்பான சில யோசனைகள் பின்வரும் வகையில் இனம் காணப்பட்டதுடன் சுகாதார அமைச்சினால் அது தொடர்பாக கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

* பாதுக்க நகரத்தில் அமைந்துள்ள அரசாங்க பிரதேச வைத்தியசாலையின் பௌதிக வசதிகள் மற்றும் மனித வளங்களை அபிவிருத்தி செய்தல்.
* கொஸ்கம நகரத்தில் அமைந்துள்ள அரசாங்க பிரதேச வைத்தியசாலையின் பௌதிக வசதிகள் மற்றும் மனித வளங்களை அபிவிருத்தி செய்தல்.

### 6.3.1.2 கல்விச் சேவை உபாய வழிகள்

சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் 31 அரசாங்க பாடசாலைகள் காணப்படுவதுடன் அப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர் எண்ணிக்கை சுமார் 32,010 எனவும் ஆசியரியர் எண்ணிக்கை 1,483 எனவும் அறிக்கையிடப்பட்டுள்ளது. இந்த 31 அரசாங்க பாடசாலைகள் 04 ஆரம்ப பாடசாலைகளையும் 27 இரண்டாம் நிலை பாடசாலைகளையும் உள்ளடக்கி உள்ளதுடன் அதனது ஆசிரியர் மாணவர் விகிதாசாரம் 1:21 ஆகும். (மூலம் வள வெட்டுமகத் தோற்றம் - 2016) கல்வித் திணைக்களத்தின் தரவுகுள் மற்றும் புள்ளிவிபரங்களுக்கு அமைய இலங்கையில் காணப்படும் ஆசிரியர் மாணவர் விகிதாசாரம் 1:23 ஆகும். விசேடமாக ஆரம்ப, இரண்டாம் நிலைப் பாடசாலைகளின் பரம்பல் பற்றிக் கருத்திற் கொள்ளும் போது ஒரு கிலோ மீற்றர் மற்றும் இரண்டு கிலோ மீற்றர் பரப்பளவில் முழு திட்டமிடல் பிரதேசமும் உள்ளடங்கும் வகையில் பரவிக் காணப்படுகின்றமை தெளிவாகிறது. (பாடசாலைப் பரம்பல் ஐந்தாம் அத்தியாயத்தின் வரைபட இலக்கம் 5.8 மூலம் காட்டப்பட்டுள்ளது) தற்போது தேவையான அளவு பௌதிக வசதிகள் இப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் தாபிக்கப்பட்டுள்ளன. மேலும் பிரதேசத்தில் கூடுதலான அளவு மாணவர்கள் சாதாரண தரம் வரை மாத்திரம் கல்வி கற்பவர்களாகக் காணப்படுகின்றமை குடிமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத் தரவுகள் மூலம் புலப்படுகிறது.

சீதாவக்க திட்டமிடல் பிரதேசத்தில் 2016 ஆம் ஆண்டளவில் காணப்படும் ஒட்டுமொத்த சனத்தொகை 162,000 ஆகும். முழு சனத்தொகையில் கல்வி கற்கும் அளவு 20% ஆகும். சீதாவக்க திட்டமிடல் பிரதேசத்திற்காக தயாரிக்கப்படும் அபிவிருத்தி திட்டத்திற்கு அமைய சுமார் 02 இலட்சம் சனத்தொகை வரை 2030 ஆம் ஆண்டளவில் அதிகரிப்பது புலப்படுகிறது. அதன் பிரகாரம் 2030 ஆம் ஆண்டளவில் முழு சனத்தொகையில் 25% சதவீதம் கல்வி கற்பதாக எடுகோள் கொள்ளப்படுமாயின் 50,000 மாணவர்கள் மீது கவனம் செலுத்தப்பட வேண்டி உள்ளது.

அதன் பிரகாரம் 2030 ஆம் ஆண்டுக்காக மேலே எதிர்வு கூறப்பட்ட கல்வி வழங்கப்பட வேண்டிய மாணவர்களுக்குத் தேவையான பாடசாலைகள் பிரதேசம் பூலாகப் பரவிக் காணப்படுவதனை அவதானிக்க முடியும். அதன் பிரகாரம் உத்தேச நடுத்தர அடர்த்தி வதிவிடப் பிரதேசத்தில் காணப்படும் ஆரும்ப மற்றும் இடைநிலைப் பாடசாலைகளை மேலும் அபிருத்தி செய்ய வேண்டிய தேவை உள்ளது. அதன் போது அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய பாடசாலைகளை பின்வரும் அட்டவணை மூலம் சுட்டிக் காட்ட முடியும்.

***அட்டவணை இலக்கம் 6. 1 – திட்டமிடல் பிரதேசத்தில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ள பாடசாலைகள்***

| பாடசாலையின் பெயர் | உத்தேச அபிவிருத்தி |
|---|---|
| 1. கொஸ்கம மகா வித்தியாலயம் | பௌதிக வசதிகளை அதிகரித்தல் மற்றும் மனித வளங்களை அதிகரித்தல் |
| 2. ஸ்ரீ சுமனஜோதி மகா வித்தியாலயம்ஸ்ரீ | |
| 3. பொரலுகொட மகா வித்தியாலயம் | |
| 4. ஸ்ரீ பியரத்தன மகா வித்தியாலயம் | |
| 5. வக, ரத்னசார மகா வித்தியாலயம் | |

மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

2030 ஆம் ஆண்டளவில் அதி கூருணர்வு சூழல் வலயத்தின் சனப்பெருக்கத்தைக் குறைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளமையால் அந்த வலயத்தில் அமைந்துள்ள பாடசாலைகளில் நிலவும் அபிவிருத்திகள் ஏற்கனவே போதியளவு காணப்படுவதாக இனம் காணப்பட்டுள்ளது. அகரவிட்ட மகா வித்தியாலயம், மாயாதுன்ன மகா வித்தியாலயம், ஹங்வெல்ல ராஜசிங்க மத்திய மகா வித்தியாலயம் மற்றும் கனம்பெல்ல கனிஷ்ட வித்தியாலயம் ஆகிய இதன் கீழ் இனம் காணப்பட்டுள்ளது. அவ்வாறே கருங்கல் உடைத்தல் கைத்தொழில் மற்றும் கால்நடை வளக் கைத்தொழில்கள் பெருமளவு காணப்படும் ஒரு பிரதேசத்தில் அமைந்துள்ள தித்தெனிய கனிஷ்ட வித்தியாலயம் அவதானம் மிகுந்த ஒரு வலயத்தில் அமைந்துள்ள ஒரு பாடசாலையாக இனம் காணப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு வள வெட்டுமகத் தோற்ற அறிக்கையின் பிரகாரம் பிரதேசத்தின் உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுள் சித்தியடையும் மாணவர் வீதம் 20% இலும் குறைவானது என அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பல்கலைக்கழகக் கல்வியைத் தொடரும் மாணவர்கள் எண்ணிக்கை மிகவும் குறைந்த அளவில் காணப்படுகிறது. ஆகவே பிரதேசத்தில் காணப்படும் கைத்தொழில்களுக்குத் தேவையான தொழிற் தகைமை பெற்ற ஊழியர்களை உருவாக்குவதற்காக பாதுக்க நகரத்தில் காணப்படும் தொழில் பயிற்சி நிலையத்தை மேலும் அபிவிருத்தி செய்ய வேண்டி உள்ளது என இனம் காணப்பட்டுள்ளது. அதன் மூலம் பாடசாலைக் கல்வியைப் பெற முடியாத இளைஞர் யுவதிகளுக்குத் தேவையான தொழிநுட்ப அறிவு மற்றும் பல்வேறுபட்ட தொழில் துஜறகள் தொடர்பான அறிவினை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

### 6.3.1.3 வதிவிட சேவை உபாய வழிகள்

2050 ஆம் ஆண்டளவில் தேசிய பௌதிகத் திட்டமிடலில் குறிப்பிடப்பட்டவாறு பிரதான பொருளாதார மார்க்கம் (East – West Economic Corridor) மற்றும் மத்திய சூழல் கூருணர்வு வலயத்திற்குள் (Central Environmental Sensitive Area) நுழைவதன் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட சனத்தொகை அடர்த்தி 501 – 750 இற்கு உட்பட்டதாக அமைதல் வேண்டும்.

அதன் பிரகாரம் பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் காணப்படும் இயற்கை சனத்தொகை அடர்த்தி வளர்ச்சி வேகத்தை அடிப்படையாகக் கொண்டு 2030 ஆம் ஆண்டளவில் காணப்பட முடியுமான சனத்தொகை எதிர்வு கூறப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டு காணப்பட்ட சனத்தொகையினை விட 2030 ஆம் ஆண்டளவில் 35,373 ஆல் சனத்தொகை அதிகரிக்கும். ஆயினும் திட்டமிடல் பிரதேசத்தின் சனத்தொகை வளர்ச்சி வேகம் 1% வீதத்தை விட அதிகமான கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் சனத்தொகை வளர்ச்சி வேகத்தை சராசரியாகக் கொண்டு எதிர்வு கூறும் போது 2016 ஆம் ஆண்டினை விட 2030 ஆம் ஆண்டு சனத்தொகை 37,784 ஆகக் காணப்படும்.

அதன் பிரகாரம் பிரதானமாக பிரதேசத்தில் காணப்படும் சூழல் கூருணர்வு வலயங்கள் பாதுகாக்கப்படுவதைக் கவனத்திற் கொள்ளும் போது பிரதேசத்திற்குப் பொருத்தமான சனத்தொகை வளர்ச்சி வேகமாக இயற்கை வளர்ச்சி வேகம் மாத்திரம் பொருத்தமானது என இனம் காணப்பட்டது.

இயற்கை அபிவிருத்தி வேகத்தின் அடிப்படையில் தற்போது சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் 37,646 குடும்ப அலகுகளுக்காக 38,526 வீடுகள் காணப்பட்டதாக 2016 ஆம் ஆண்டுக்கான

வள வெட்டுமுகத் தோற்ற அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தற்போதுள்ள குடும்பங்களின் எண்ணிக்கையை விட அதிகமான வீடுகள் அமைந்திருப்பதன் காரணமாக சுமார் 880 வீடுகள் மேலதிகமாக உள்ளமை புலப்படுகிறது. அதன் பிரகாரம் அதிகாரப் பிரதேசத்தில் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ற அளவு வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை புலப்படுகிறது. அந்த வீடுகளுள் நிரந்தர வீடுகள் 92% அதிகளவு சதவீதம் கொண்டதாக காணப்படுகிறது. உயர்வான வீட்டு அடர்த்தி பிரதான வீதிகளை அடிப்படையாக் கொண்டு வியாபித்துள்ளது. இந்த வீடுகளுள் பெரும்பாலானவை ஒற்றை மாடி வீடுகள் வகைக்கு உட்பட்டது ஆகும். சாதாரணமான ஒரு குடும்பத்தில் 04 உறுப்பினர்கள் எனக் கொண்டு 2030 ஆம் ஆண்டளவில் எதிர்வு கூறப்பட்ட சனத்தொகைக்குத் தேவையான வீடுகளின் எண்ணிக்கை சுமார் 50,387 என கணக்கிட முடியும் என்பதுடன் அதன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது சுமார் 12,741 வீடுகள் 2030 ஆம் ஆண்டளவில் புதிதாக நிர்மாணிக்கப்பட வேண்டும் என்ற முடிவிற்கு வர முடியும்.

அதன் போது ஹங்வெல்ல, பாதுக்க, கொஸ்கம மற்றும் வக ஆகிய நகர பிரதேசங்களின் நடுத்தர அடர்த்தி வதிவிட வலயமாக இனம் காணப்பட்ட பிரதேசங்களில் 2030 ஆம் ஆண்டளவில் சனத்தொகை 01 சதுர கிலோ மீற்றருக்கு 1,501 – 3,000 இடைப்பட்டதாகக் காணப்படும் என எதிர்பார்க்கப்படுவதுடன் அதனோடு இணைந்த வகையில் புதிதாக நிர்மாணிக்கப்படும் வீடுகள் படிப்படியாக தாபிக்கப்படும் வகையில் விசேட ஒழுற்கு விதிகள் இத் திட்டத்தின் மூலம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளதுடன் அப் பிரதேசத்தில் மாடி வீட்டுத் திட்டங்களை நிர்மாணிப்பது தொடர்பான ஒழுங்கு விதிகள் தொடர்பான மேலதிக விபரங்கள் பிரிவு II இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அபிவிருத்தி திட்டம் மூலம் சுபீட்சமான வதிவிட திட்டத்திற்கு அமைய அதி கூருணர்வு சூழலுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு வதிவிட அபிவிருத்தியினை ஏற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. சூழல் செயற்பாடுகளுடன் இணைந்த சுற்றுலா மேம்பாட்டு வலயம் மற்றும் அடர்த்தி குறைந்த வதிவிட வலயத்தில் வதிவிட வாய்ப்புக்கள் திறந்து விடப்பட்டுள்ளதுடன் அந்த அபிவிருத்தி அடர்த்திகளை ஒழுங்கு விதிகள் மூலம் கட்டுப்படுத்துவதற்கு பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் பிரதேசத்தில் உயர்வான வதிவடப் பரம்பல் எதிர்பார்க்கப்படுவதில்லை என்பதுடன் அதன் காரணமாக அடர்த்தி குறைந்த வதிவிட மற்றும் நகர விவசாய விவசாய வலயம் மற்றும் கால்நடை வளக் கைத்தொழில் வலயத்திலும் வதிவிடப் பரவுகை வரையறுக்கப்பட்டுள்ளது.

மேலும் வதிவிட சேவைகளுக்கான அத்தியவசிய உட்டகட்டமைப்பு வசதிகளையும் இத் திட்டத்தின் மூலம் மேம்படுத்துவதற்கு பரிந்துரை சமர்ப்பிக்கப்படுவதுடன் அது தொடர்பாக இனி வரும் அத்தியாயங்களில் கலந்துரையாடப்படும்.

***வரைபட இலக்கம் 6. 3 – சேவை முகாமைத்துவ திட்டம் (2030)***




மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

### 6.3.1.4 சேவை மத்திய நிலைய முன்னுரிமை உபாய வழிகள்

தற்போது சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் நகர சேவை வழங்கும் மத்திய நிலையங்களுள் முன்னணி நகரங்களாக பாதுக்க மற்றும் ஹங்வெல்ல ஆகிய நகரங்களை இனம் காண முடியும் என்பதுடன் வக, கொஸ்கம, தும்மோதர மற்றும் மீப்பே ஆகிய நகர சந்திகளை அண்டியதாக சிறிய நகரங்கள் அபிவிருத்தி அடைந்துள்ளன.

இருப்பினும் இந்த நகரத்தை அண்டியதாக வதிவிட மற்றும் குடிபெயர்ந்த சனத்தொகையினருக்குப் பெற்றுக் கொள்ள முடியுமான சேவைகள் உயர் தரத்தினைக் கொண்டு காணப்படவில்லை என இனம் காணப்பட்டுள்ளதுடன் அந்த மக்களின் வசதி கருதி திட்டமிடல் பிரதேசத்தில் காணப்படும் நகரங்களை முன்னுரிமை அடிப்படையில் அபிவிருத்தி செய்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டி உள்ளது.

***அட்டவணை இலக்கம் 6. 2 – முன்னுரிமை அடிப்படையில் நகரங்களை வகைப்படுத்தல்***

| முன்னுரிமை | நகரம் |
|---|---|
| முதலாவது | ஹங்வெல்ல<br>பாதுக்க |
| இரண்டாவது | கொஸ்கம |
| மூன்றாவது | வக |
| நான்காவது | மீப்பே |
| ஐந்தாவது | தும்மோதர |

மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

மேலே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு நகரங்களை முன்னுரிமைப்படுத்தும் போது திட்டமிடல் பிரதேசத்தின் அபிவிருத்தி அழுத்தப் பகுப்பாய்வு, அபிவிருத்தி சாத்தியப் பகுப்பாய்வு கூருணர்வு சூழல் பகுப்பாய்வு, குடியிருப்பு பரவுகைக்குப் பொருத்தமான பிரதேசப் பகுப்பாய்வு மற்றும் தற்போதுள்ள புகையிரத நிலையங்கள் மற்றும் உத்தேச புதிய புகையிரத வீதிகள் ஆகிய காரணிகள் அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளன. (முன்னுரிமை அடிப்படையில் நகரங்களின் வகைப்படுத்தலுக்கு நிறையளித்தல் - பின் இணைப்பு இலக்கம் 04)

மேல் மாகாண கட்டமைப்பு ரீதியிலான திட்டம் - 2010 (Proposed Structure Plan - 2010) பிரகாரம் ஹங்வெல்ல நகரம் மற்றும் பாதுக்க நகரம் ஆகியன நகர சேவைகளை வழங்கும் மத்திய நிலையங்களாக இனம் காணப்பட்டுள்ளன. மேலும் எதிர்காலத்தில் அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ஹைலெவல் வீதி, லோலெவல் வீதி, ஹங்வெல்ல பஸ் நிலையம், களனிவெளி புகையிரதப் பாதையை இருவழிப் மின்சார புகையிரத வீதியாக மாற்றி அமைத்தல் மூலம் சுமார் 70,000 குடிப்பெயர் சனத்தொகையினருக்கு மற்றும் உத்தேச நடுத்தர அடர்த்தி வதிவிட வலயத்தில் வாழும் சனத்தொகைக்கு வசதிகள் வழங்கக் கூடிய வகையில் ஹங்வெல்ல மற்றும் பாதுக்க ஆகிய நகரங்களை முதற்தர நகரங்களாக அபிவிருத்தி செய்வதற்கு இனம் காணப்பட்டுள்ளது.

கொஸ்கம நகரத்திற்கான உத்தேச கொஸ்கம – களனி மின்சார புகையிரத வீதி மற்றும் களனிவெளி இருவழிப் புகையிரதப் பாதை கொஸ்கம நகரத்தின் ஊடாகப் பயணித்தல் மற்றும் கொஸ்கம வார சந்தை, பிரதேச சபை பரிபாலன நிறுவனங்கள் இந்த நகரத்தில் அமையப் பெறல், அவிசாவெல்ல வீதி நகரத்தின் ஊடாக பயணித்தல், களனி கங்கை பெருக்கெடுப்பதன் காரணமாக ஏற்படும் வெள்ள அனர்த்த நிலைமைகள் குறைவான நகர பிரதேசமாக மாற்றி அமைத்தல் ஆகிய காரணிகளின் அடிப்படையில் 2030 ஆம் ஆண்டில் கொஸ்கம நகரில் சுமார் 25,000 குடிப்பெயர் சனத்தொகை எதிர்பார்க்கப்படுவதுடன் உத்தேச நடுத்தர அடர்த்தி கொண்ட வதிவிட

சனத்தொகையினருக்கும் வசதிகளை வழங்குவதற்கு ஏற்றவாறு விசேடமாக வதிவிட நடவடிக்கைகளுக்காக முன்னுரிமை வழங்கும் இரண்டாம் தர நகரமாக இனம் காண முடியும்.

மூன்றாம் தர நகரமாக இனம் காணப்பட்ட வக வக நகரத்தில் காணப்படும் புகையிரத நிலையம் மற்றும் லபுகம – களுஅக்கல வீதி பிரதேசத்தின் ஊடாக பயணித்தல் ஆகிய காரணிகளை அடிப்படையாகக் கொண்டு சுமார் 5,000 அளவு சனத்தொகை எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் நடுத்தர அடர்த்தி கொண்ட வதிவிடப் பிரதேசங்களான கஹஹேன மற்றும் வக ஆகிய பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கு குடியிருப்புக்குப் பொருத்தமான பிரதேசங்களை இனம் காணும் பகுப்பாய்வு மூலம் சுட்டிக்காட்டப்பட்டது.

இதற்கு மேலதிகமாக நான்காம் தர நகரமாக இனம் காணப்பட்ட மீப்பே நகரத்தை சுற்றுலாப் பயணிகளுக்கு வழிகாட்டல் மேற்கொள்ளும் ஒரு நகரமாக அபிவிருத்தி செய்வதற்கும் ஐந்தாம் தரமாக காணப்படும் தும்மோதர நகரத்தை சுற்றுலாப் பயணிகளின் அவதானம் ஈர்க்கப்பட்ட மற்றும் பிரதேசத்தில் காணப்படும் மரபு ரீதியிலான கைத்தொழில் உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்குத் தேவையான வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியுமான சிறியதொரு நகரமாக அபிவிருத்தி செய்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. உத்தேச நகர சேவை மத்திய நிலைய பதவி வரிசை (2030) வரைபட இலக்கம் 6.4 மூலம் காட்டப்பட்டுள்ளது.

***வரைபட இலக்கம் 6. 4 – உத்தேச நகர சேவைகள் மத்திய நிலைய பதவி வழி (2030)***




| | | |
|---|---|---|
| நகராட்சி சேவை மைய வரிசைமுறை<br>மூலம: - நகர அபிவிருத்தி அதிகார சபை | கி.மீ.<br>0 0.5 1 2 3 | நகர அபிவிருத்தி அதிகார சபை<br>ஜனவரி 2019 |
| மேல் மாகாண பிரிவு | சீதாவக்க அபிவிருத்தி திட்டம் (2019 - 2030) | தயாரிப்பு: மேல் மாகாண அலுவலகம |

மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

### 6.3.2 வீதி மற்றும் போக்குவரத்து உபாய வழிகள்

கொழும்பு மாவட்டத்தில் கிராமிய பண்புகளை எடுத்துக் காட்டும் ஒரு பிரதேச சபை அதிகாரப் பிரதேசமான இங்கு மலைப் பாங்கான பிரதேசங்களுடன் கூடிய நிலத் தோற்றப் பண்புகள் மற்றும் அமைவிடத்தின் பிரகாரம் மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடும் போது குறைந்த அடர்த்தியுடன் கூடிய வீதி முறைமையுடன் கூடிய ஒரு பிரதேசமாக இனம் காண முடியும்.

வீதி முறைமையில் ஹைலெவல் வீதி மற்றும் கொழும்பு - ஹங்வெல்ல பழைய வீதி (லோலெவல் வீதி), மீப்பே - இங்கிரிய, பாதுக்க – ஹொரணை ஆகிய சில வீதிகள் அடிப்படையாக அமைந்துள்ளதுடன் கொழும்பில் இருந்து அவிசாவெல்ல வரை பயணிக்கும் களனிவெளி புகையிரதப் பாதையில் பாதுக்க, கொஸ்கம, பின்னவல ஆகிய புகையிரத நிலையங்கள் போக்குவரத்து முறைமைக்கு பங்களிப்புச் செய்கின்றன.

சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் ஆகக் கூடுதலான வாகனப் போக்குவரத்து ஹைலெவல் மற்றும் லோலெவல் வீதிகளின் ஊடாக இடம்பெறுவதுடன் 2014 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கொழும்பு மோட்டார் வாகன ஆய்வின் (COMTRANS) பிரகாரம் கொழும்பு மாவட்டத்தில் வாகன நெரிசல் நிலவும் ஒருசில பிரதான வீதிகள் இனம் காணப்பட்டுள்ளதுடன் அதில் ஹைலெவல் வீதி மற்றும் லோலெவல் வீதி ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளதனால் அந்த வீதிகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டி உள்ளது.

ஹைலெவல் வீதியின் போக்குவரத்து இயலளவு (Road Capacity) ஒரு மணித்தியாலத்திற்கு 2,300 (PCY) வாகனங்கள் ஆகும். கொழும்பு மோட்டார் வாகன ஆய்வின் (COMTRANS) பிரகாரம் 2014 ஆம் ஆண்டு ஹைலெவல் வீதியின் போக்குவரத்து இயலளவு ஒரு மணித்தியாலத்திற்கு 2,000 வாகனங்கள் வரை விருத்தியடைந்துள்ளது. மேலும் லோலெவல் வீதியின் போக்குவரத்து இயலளவு ஒரு மணித்தியாலத்திற்கு சுமார் 2,200 வாகனங்களுக்கான அவகாசம் நிலவிய போதும் 2014 ஆம் ஆண்டளவில் அது ஒரு மணித்தியாலத்திற்கு 2,900 வாகனங்கள் வரை அதிகரித்துள்ளது. விசேடமாக கொழும்பு மாவட்டத்தின் பிரதான வீதிகளாக காணப்படும் ஹைலெவல் மற்றும் லோலெவல் ஆகிய இரண்டு பிரதான வீதிகளும் சீதாவக்க திட்டமிடல் பிரதேசத்தின் ஊடாக பயணிப்பதன் காரணமாக கொழும்பு மாவட்டத்தில் இடம்பெறும் துரித அபிவிருத்தியினைத் தொடர்ந்து திட்டமிடல் பிரதேசத்தின் வாகன நெரிசல் எதிர்வரும் காலங்களிலும் அதிகரிக்கும் சாத்தியம் உள்ளது. அதனோடு இணைந்த வகையில் உயர்வானதொரு பௌதிக அபிவிருத்தி இந்த இரண்டு வீதிகளின் இரு பக்கங்களிலும் இடம் பெறுவதனை அவதானிக்க முடியும். பிரதேசத்தில் காணப்படும் அதிகரித்த வாகன நெரிசலை இந்த வீதியில் அவதானிக்க கூடியதாக உள்ளதுடன் விசேடமாக ஹங்வெல்ல நகரத்தில் காணப்படும் அதிகளவு வாகன நெரிசல் காரணமாக நகரங்களுக்கு வருகை தரும் மற்றும் அங்கு வாழும் மக்களுக்கு நாளாந்தம் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது.

அதன் பிரகாரம் இத் திட்டத்தின் மூலம் சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் நிலவும் வாகன நெரிசலைக் குறைத்து பிரதான நகர மத்திய நிலையங்களுக்கு இடையில் வாகன நெரிசல்கள் அற்ற போக்குவரத்து சேவையினை ஏற்படுத்தல், விசேடமாக புகையிரதப் போக்குவரத்து சேவையின் பால் சனத்தொகையினரைக் கவர்தல் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.

சீதாவக்க திட்டமிடல் பிரதேசத்தில் காணப்படும் அபிவிருத்தி கூடிய நகரமாக ஹங்வெல்ல நகரத்தை இனம் காண முடியும். இதற்கான பிரதான காரணமாக ஹைலெவல் வீதி மற்றும் லோலெவல் வீதி ஆகியன சந்திக்கும் தனிச் சிறப்பு வாய்ந்த ஒரு இடமாக ஓர் இடமாக ஹங்வெல்ல நகரத்தை அறிமுகம் செய்யலாம். ஆகவே ஹைலெவல் வீதியின் இரண்டு பக்கங்களிலும், லோலெவல் வீதியின் இரண்டு பக்கங்களிலும் களனி கங்கைக் கரையினை அண்டிய பிரதேசங்கள் அதிகளவு அபிவிருத்தி அழுத்தத்திற்கு உட்பட்டுள்ளது. அதன் காரணமாக அபிவிருத்தி சாத்திய பகுப்பாய்வின் பிரகாரம் ஹங்வெல்ல நகரத்தை ஒரு முக்கியத்துவம் பெற்ற நகரமாக அறிமுகப்படுத்த முடியுமாக உள்ளது. அதன் மூலம் ஹஙடவெல்ல நகரத்தில் ஏற்கனவே நிலவும் அதிகரித்த வாகன நெரிசலை குறைப்பதற்கு கீழே குறிப்பிடப்படும் அபிவிருத்திகள் முன் மொழியப்பட்டுகிறது.

1. ஹங்வெல்ல, இந்திய எரிபொருள் கமபனிக்குச் (IOC) சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அண்மையில் இருந்து ஹைலெவல் வீதி வரையான உத்தேச மாற்று பிரவேசப் பாதையினை அபிவிருத்தி செய்தல்.
2. ஏற்கனவே உள்ள மாற்றுப் பாதையினை மேலும் விரிவுபடுத்தி அபிவிருத்தி செய்தல்.

நகர அபிவிருத்தி அதிகார சபை மூலம் மேற்கொள்ளப்பட்ட வீதி இணைப்பு ஆய்வுகளுக்கு அமைய சீதாவக்க பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் பிரதான நகரங்களுக்கு இடையிலான வீதி இணைப்பு பகுப்பாய்வு (Connectivity Analysis) வரைபட இலக்கம் 6.5 மற்றும் 6.6 மூலம் காட்டப்பட்டுள்ளதுடன் அந்த ஆய்வின் போது அதி கூருணர்வுப் பிரதேசங்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்தும் விதமாக ஹைலெவல் வீதியின் ஊடாக அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை தெரியவந்துள்ளது.

அதன் பிரகாரம் அப் பிரதேசங்களின் அபிவிருத்தியயைக் கட்டுப்படுத்துவதற்கான உத்தேச மாற்றுப் பாதையாக கொஸ்கம முதல் பாதுக்க வரையான வீதியை அபிவிருத்தி செய்வதற்கான யோசனை முன்வைக்கப்படுகிறது. இது ஏற்கனவே உள்ள வீதிகளை அடிப்படையாகக் கொண்டு இரண்டு ஓடுபாதைகளுடன் விரிவுபடுத்தப்படல் பொருத்தமானது என இனம் காணப்பட்டுள்ளது. அவ்வாறு செயவதன் மூலம் அதி கூருணர்வுப் பிரதேசங்களில் காணப்படும் அபிவிருத்தி அழுத்தம் பிரதேசத்தின் மத்தி வரை அதாவது குறைவான சூழல் கூருணர்வுப் பிரதேசங்களுக்கு பரவுவதற்கு முடியுமாக உள்ளது.

அதன் போது சூழலுக்கான பாதிப்பு குறைவடையும் விதமாக பிரதானமாக ஏற்கனவே உள்ள வீதி முறையை அபிவிருத்தி செய்தல் மற்றும் 02 புதிய வீதிகளை அபிவிருத்தி செய்ய வேண்டுமென இனம் காணப்பட்டுள்ளது. அதற்காக அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய வீதிகள் இனம் காணப்பட்டதுடன் அந்த வீதிகளின் தரத்தை விருத்தி செய்வதற்கான யோசனைகள் முன் வைக்கப்பட்டுள்ளன.

***அட்டவணை இலக்கம் 6. 3 – திட்டமிடல் பிரதேசத்தில் அபிவிருத்தி செய்வதற்கு இனம் காணப்பட்ட வீதிகள்***

| அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய வீதிகள் | உத்தேச தூரம் (கி.மீ) |
|---|---|
| 1. கொஸ்கம – கடுகொட வீதியில் காணப்படும் நிலைமையை மேலும் அபிவிருத்தி செய்தல். | 0.75 |
| 2. அபரனகம வீதி மற்றும் கடுகொட வீதி சந்திக்கும் புள்ளியில் 6⁰56'1.27"N ,808 ⁰'6.51"E இருந்து பொரலுகொட, மாவல்கம வீதியின் 6⁰55'27.40"N ,807 ⁰'23.12"E புள்ளி வரை புதிய வீதியின் ஒரு பகுதியாக அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். | 02 |
| 3. பொரலுகொட - மாவல்கம வீதி | 03 |
| 4. 6⁰54'18.85"N ,80⁰7'10.93"E புள்ளியில் இருந்து 6⁰53'36.05"N , 806 ⁰'21.03"E புள்ளி வரை தித்தெனிய வீதி சந்திக்கும் வரை புதிய வீதியின் ஒரு பகுதி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். | 2.3 |
| 5. பஹத்கம - தித்தெனிய வீதி | 4.8 |
| 6. அருக்வத்த – பிட்டும்பே வீதி | 1.5 |
| 7. அருக்வத்த – ஜயந்தி மாவத்தை | 1.4 |

மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

அதன் பிரகாரம் கொஸ்கம பாதுக்க ஆகிய நகரங்களுக்கு இடையில் காணப்படும் இடைத் தொடர்பினை அதிகரிப்பதற்கு இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

***வரைபட இலக்கம் 6. 5 – வீதித் தொடர்பு புகப்பாய்வு (2016)***




மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

***வரைபட இலக்கம் 6. 6 – வீதித் தொடர்பு புகப்பாய்வு (2016)***




மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

இதற்கு மேலதிகமாக சுற்றுலா செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக பசுமை வீதிகள் தொடர்பான யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதுடன் பசுமை வீதிகளாக அபிவிருத்தி செய்வதற்கு இனம் காணப்பட்ட சில வீதிகள் கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அட்டவணை இலக்கம் 6. 4 – சீதாவக்க திட்டமிடல் அதிகார பிரதேசத்தில் அபிவிருத்திக்காக இனம் காணப்பட்ட பசுமை வீதிகள்**

| வீதியின் பெயர் | தூரம் (கி.மீ) | அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கும் விதம் |
|---|---|---|
| சாலாவ – அகரவிட்ட | 3.1 | 02 ஓடுபாதைகள் கொண்ட பசுமை வீதிகளாக அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| பூகொட – கொஸ்கம | 4 | |
| புவக்பிட்டிய – தும்மோதர | 8.6 | |
| ஹங்வெல்ல நகரத்தை தவிர்க்கும் வீதி | 2 | |

மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

2030 ஆம் ஆண்டு சேவை வழங்கும் ஒரு நகரமாக அபிவிருத்தி செய்வதற்கு பாதுக்க நகரம் இனம் காணப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மாவத்தை ஒன்றுடன் கூடிய தனிச் சிறப்பு வாய்ந்த ஒரு வீதி முறைமைக்கு உரிமை கோரும் பாதுக்க நகரத்தில் சுற்றுவட்ட மாவத்தை வடிகான முறைமை உள்ளடக்கப்பட்ட மற்றும் சேவை வசதிகள் ஓடுபாதையினை உள்ளடக்கி அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமென இனம் காணப்பட்டது.

***உருவப்பட இலக்கம் 6. 4 – உத்தேச 02 ஓடுபாதைகளைக் கொண்ட பசுமை வீதிகள்***




மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

பாதுக்க புகையிரத நிலையம் மற்றும் பஸ் நிலையம் ஆகியவற்றுக்கு இடையே முறையான இடைத் தொடர்பினை ஏற்படுத்தும் விதமாக அபிவிருத்தி செய்வதற்காக புகையிரத நிலையத்திற்கும் பஸ் நிலையத்திற்கும் இடையே காணப்படும் சட்ட ரீதியற்ற நிர்மாணிப்புக்களை அகற்றுதல் அத்தியவசியம் என இனம் காணப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் அதிகரித்துக் காணப்படும் தனியார் வாகனங்கள் காரணமாக ஏற்படக் கூடிய வாகன நெரிசலைக் குறைப்பதற்காக பொதுப் பயணிகள் போக்குவரத்து சேவையை பலப்படுத்துதல் அவசியமாக உள்ளதெனத் தெரிகிறது. அதன் மூலம் 2030 ஆம் ஆண்டளவில் அதிகரிக்கும் சுமார் 150,000 அளவு கொண்ட குடிப்பெயர் சனத்தொகை மற்றும் சுமார் 200,000 வதிவிட சனத்தொகையினருக்காக காணப்படும் போக்குவரத்து தேவைப்பாட்டை தரமானதாக வழங்கி சுபீட்சமான ஒரு நகரப் பிரதேசமாக மாற்றி அமைத்தல் ஆகிய நோக்கங்களை அடைந்து கொள்வதை இலகுபடுத்தும். அதன் போது மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி திட்டத்தின் (Megapolis Plan) பிரகாரம் 2030 ஆம் ஆண்டளவில் கொஸ்கம நகரத்தின் ஊடாக களனிவெளி இருவழி புகையிரத மற்றும் களனி – கொஸ்கம மின்சார புகையிரத வீதி ஒன்றை அபிவிருத்தி செய்து பல்பக்க போக்குவரத்து மத்திய நிலையமாக தற்போதுள்ள புகையிரத நிலையத்தை ஒன்றிணைத்து புதிய ஒரு பஸ் நிலையத்தை நிர்மாணிப்பதற்கு இனம் காணப்பட்டதுடன் ஹங்வெல்ல நகரத்தில் உள்ள பஸ் தரிப்பிடத்தை புதுப்பிப்பதற்கும் வக, கஹஹேன புகையிரத நிலையம் அமைந்துள்ள பூமியில் பஸ் நிலையம் ஒன்றை நிர்மாணிப்பதற்கும் பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த பல்பக்க மத்திய நிலையத்தின் ஊடாக அதிகரிக்கும் புகையிரதப் பயணிகளுக்காக சீதாவக்க திட்டமிடல் பிரதேசத்தில் காணப்படும் 08 புகையிரத நிலையங்கள் தொடர்பில் புகையிரத நிலையங்கள் மற்றும் பஸ் வண்டிப் பொதுப் போக்குவரத்து ஆகியவற்றுக்கு இடையிலான தொடர்பு அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமெனவும் இனம் காணப்பட்டது. அதன் போது கொஸ்கம மற்றும் பாதுக்க ஆகிய நகரங்களில் காணப்படும் புகையிரத நிலையங்கள் முக்கியமாக அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். அவ்வாறே அந்த வீதிகளின் ஊடாக கந்துகொட புகையிரத நிலையம், மொரகெலே உப புகையிரத நிலையம், பின்னவல புகையிரத நிலையத்திற்கு இலகுவாக பிரவேசிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பிரகாரம் கொஸ்கம மற்றும் பாதுக்க ஆகிய நகரங்கள் பல்பக்க போக்குவரத்து மத்திய நிலையம் உள்ளடக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட வேண்டுடென இனம் காணப்பட்டது.

***அட்டவணை இலக்கம் 6. 5– அபிவிருத்தி செய்வதற்கு இனம் காணப்பட்டுள்ள பிரதான வீதிகள்***

| இலக்கம் | பிரவேச வீதியின் பெயர் | தற்போது உள்ள அகலம் (மீற்றர்) | உத்தேச அகலம் (மீற்றர்) | உத்தேச பாதை |
|---|---|---|---|---|
| | A தர வீதிகள் | | | |
| 1. | கொழும்பு - இரத்தினபுரி வீதி (ஹைலெவல் வீதி) | 09 | 30 | 06 |
| 2. | கொழும்பு - ஹங்வெல்ல வீதி (பழைய வீதி) | 09 | 30 | 06 |
| | B தர வீதிகள் | | | |
| 3. | கலகெதர - ஹொரண வீதி | 09 | 13 | 02 |
| 4. | கோட்டே – போப்பே வீதி | 09 | 13 | 02 |
| 5. | மீப்பே - இங்கிரிய வீதி | 09 | 13 | 02 |

| இலக்கம் | பிரவேச வீதியின் பெயர் | தற்போது உள்ள அகலம் (மீற்றர்) | உத்தேச அகலம் (மீற்றர்) | உத்தேச பாதை |
|---|---|---|---|---|
| 6. | களுஅக்கல – லபுகம வீதி | 09 | 13 | 02 |
| 7. | தும்மோதர – புவக்பிட்டி வீதி | 05 | 13 | 02 |
| 8. | வேவெல்பனாவ – வக வீதி | 07 | 13 | 02 |
| 9. | குரதன – வேவில – உடகம – குருலான வீதி | 06 | 07 | 02 |
| 10. | பாதுக்க – தம்போர – குருலான வீதி | 06 | 07 | 02 |
| 11. | எஸ்வத்த – ரன்வல வீதி | 06 | 07 | 02 |
| 12. | கொஸ்கம – கனம்பெல்ல – பூகொட வீதி | 06 | 13 | 02 |
| 13. | கொஸ்கம – கடுகொட வீதி | 07 | 13 | 02 |
| 14. | உடுமுல்ல – மலகல வீதி | 06 | 13 | 02 |
| 15. | அருக்வத்த – மீரியகல்ல வீதி | 06 | 13 | 02 |
| 16. | பொரலுகொட – மாவல்கம வீதி | 06 | 13 | 02 |
| **திட்டம் மூலம் இனம் காணப்பட்டுள்ள புதிய வீதிக் கருத்திட்டங்கள்** | | | | |
| 17. | ஹங்வெல்ல உத்தேச மாற்று பிரவேச வீதி ( IOC எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அண்மையில் இருந்து ஹைலெவல் வீதி வரை) | 03- 05 අතර | 07 | 02 |
| 18. | கொஸ்கமவில் இருந்து பாதுக்க வரை உத்தேச பிரவேச மாற்று வீதி | 05 | 13 | 02 |
| 19. | சூாலாவ – அகரவிட்ட – களுஅக்கல வீதி (சாலாவ வைத்தியசாலை வீதி) | 05 | 13 | 02 |
| 20. | ஹங்வெல்லையில் தற்போதுள்ள மாற்று பிரவேச வீதியை நீடித்தல் | 22 | 13 | 02 |
| 21. | பாதுக்க சுற்றுவட்ட வீதி அபிவிருத்தி | 06 | 13 | 02 |
| 22. | நிரிபொல புனித மேரி மாவத்தை அபிவிருத்தி | 05 | 07 | 02 |

மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

இத் திட்டத்தின் மூலம் பிரதேசத்தில் காணப்படும் பிரதான வீதிகளான “A” மற்றும் “B” தர வீதிகளின் உத்தேச பிரவேச வீதிகளின் அகலம் காட்டப்பட்டுள்ளதுடன் அந்த வகைக்குள் உள்ளடங்காத பிரதேசத்தில் காணப்படும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்குச் சொந்தமான வீதிகள் “C” தர வீதிகளாகவும் ஏனைய பொது வீதிகள் “D” தர வீதிகளாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. (வரைபட இலக்கம் 6.7 மூலம் காட்டப்பட்டுள்ளது.) இந்த “C” மற்றும் “D” தர வீதிகளை விஸ்தரிக்கும் உத்தேச அகலம் பிரிவு II இல் பின்இணைப்பின் கீழ் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

“C” தர வீதிகளின் ஆகக் குறைந்த அகலத்தை 20 அடிகளாக பேணிச் செல்வதற்கு பரிந்துரை செய்யப்படுவதுடன் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அனுமதி வழங்கப்படும் போது அதன் உத்தேச அகலமாக பரிந்துரை செய்யப்படும் அகலத்தின் பெறுமதி கருத்திற் கொள்ளப்படும். பிரவேச வீதியின் அகலம் 20 அடிகளுக்கு குறைவான “D” தர வீதிகளின் பிரவேச அகலத்தை மேலும் விஸ்தரிப்பதற்கு திட்டமிடப்படாத சந்தர்ப்பத்தில் பிரவேச வீதியின் நடுப் புள்ளியில் இருந்து 20 அடிகள் கட்டட வரையறையினை பேணிச் செல்வதற்கு சிபாரிசு செய்யப்படுவதுடன் “D” தர வீதிகளின் பிரவேச வீதியினை விஸ்தரிப்பதற்கு திட்டமிடப்படும் வேளைகளில் விஸ்தரிப்பதற்காக இனம் காணப்பட்டுள்ள அகலம் உத்தேச அகலமாக கொள்ளப்படும். ஆயினும் அபிவிருத்திகளுக்கான அனுமதிகள் வழங்கப்படும் போது தற்போதுள்ள பிரவேச வீதியின் அகலத்திற்கு மாத்திரம் ஏற்புடையவாறான அபிவிருத்திகள் மாத்திரம் சிபாரிசு செய்யப்படுவதுடன் நிர்மாணிப்புக்கள் மேற்கொள்ளப்படாத ஒரு நிலப் பிரதேசம் வீதியின் எல்லைகளாக பேணப்படல் வேண்டும். இது தொடர்பான மேலதிக விளக்கம் பிரிவு II இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

***உருவப்பட இலக்கம் 6. 5 – உத்தேச 06 ஓடுபாதை கொண்ட வீதிகள்***




மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

***உருவப்பட இலக்கம் 6. 6 – உத்தேச 02 ஓடுபாதை கொண்ட வீதிகள்***




மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

***வரைபட இலக்கம் 6. 7 – உத்தேச வீதி மற்றும் போக்குவரத்து திட்டம் (2030)***




மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

### 6.3.3 நீர் வழங்கல் உபாய வழிகள்

சீதாவக்க திட்டமிடல் பிரதேசத்தில் 2030 ஆம் ஆண்டளவில் எதிர்பார்க்கப்படும் சனத்தொகையினை இலக்காகக் கொண்டு இந் உத்தேச நீர் வழங்கல் திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. சீதாவக்க திட்டமிடல் பிரதேசத்தின் நீர் வழங்கல் தொடர்பாக கவனம் செலுத்தும் போது பல்வேறு மூலங்கள் ஊடாக நீர் பெற்றுக்கொள்ளப்படுகின்றமை தெளிவாகிறது. 2012 ஆம் ஆண்டு குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட தரவு அறிக்கையின் பிரகாரம் சீதாவக்க திட்டமிடல் பிரதேசத்தின் குடிநீர் தேவைப்பாடு கீழே குறிப்பிடப்படும் மூலங்கள் ஊடாக பல்வேறு அளவுகளில் நிறைவு செய்து கொள்கின்றமை தெளிவாகிறது.

***அட்டவணை இலக்கம் 6. 6 – பிரதேசத்தின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் விதம் (2012)***

| நீர் மூலம் | குடும்பங்களின் எண்ணிக்கை | விகிதாசாரம்(%) |
|---|---|---|
| பிரதேசத்தில் காணப்படும் பாதுகாப்பான கிணறுகள் | 12,361 | 43 |
| பிரதேசத்திற்கு வெளியில் உள்ள பாதுகாப்பான கிணறுகள் | 2,755 | 9.5 |
| பாதுகாப்பற்ற கிணறுகள் | 488 | 1.6 |
| குழாய் நீர் (பிரதான நீர் வழங்கல் மூலம் பெற்றுக் கொள்ளப்படும்) | 6,408 | 22.2 |
| கிராமிய நீர் வழங்கல் கருத்திட்டம் | 5,147 | 17.9 |
| குழாய்க் கிணறுகள் | 86 | 0.29 |
| கங்கை, நீரத்தேக்கம் | 1,368 | 4.7 |
| ஏனையவை | 126 | 0.4 |
| **மொத்தம்** | **28,739** | **100** |

மூலம் : குடிமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் (2012)

மேலே காட்டப்பட்டுள்ள தரவுகளின் பிரகாரம் இப் பிரதேசத்தில் வாழும் சனத்தொகையில் பெரும்பான்மையானோர் அதாவது 50% வீதத்தினர் பிரதேசத்தில் காணப்படும் பாதுகாப்பான கிணற்று நிரைப் பயன்படுத்துவதை வழங்கமாகக் கொண்டுள்ளமை புலப்படுகிறது. குழாய் நீரைப் பயன்படுத்தல் தொடர்பாக கவனம் செலுத்தும் போது பிரதேசத்தில் வாழும் சனத்தொகையில் சுமார் 22.2% வீதத்தினர் குழாய் நீரைப் பயன்படுத்துகின்றமை அவதானிக்க முடியும். இதற்கு மேலதிகமாக கிராமிய நீர் வழங்கல் திட்டங்கள் மூலம் முழு சனத்தொகையில் சுமார் 18% வீதத்தினர் தமது நீர்த் தேவையைப் பூர்த்தி செய்கின்றனர்.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் எதிர்வு கூறலுக்கு அமைய நாள் ஒன்றுக்கு ஆள் ஒருவரின் நீர்த் தேவைப்பாடு 172 லீற்றர்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு சீதாவக்க திட்டமிடல் பிரதேசத்தின் வதிவிட சனத்தொகை சுமார் 162,729 ஆகக் காணப்படும் என வள வெட்டுமக அறிக்கையின் பிரகாரம் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பிரதேசத்தில் தற்போது காணப்படும் சீதாவக்க தாவரவியல் பூங்கா, சூழல் சுற்றுலா ஹோட்டல்கள் மற்றும் புராதன விஹாரைகள், லெஷர் வேர்ல்ட், வர்த்தக, கைத்தொழில், வைத்தியசாலைகள் போன்ற சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக குடிப்பெயரும் சனத்தொகை சுமார் 75,000 ஆக இருக்குமென எடுகோள் கொள்ளப்படுமடத்து 2016 ஆம் ஆண்டு மொத்த நீர் நுகர்வை கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் சுட்டிக்காட்ட முடியும்.

***அட்டவணை இலக்கம் 6. 7 – நீர் நுகர்வு (2016)***

| | **சனத்தொகை** | **நாள் ஒன்றுக்கு பயன்படுத்தப்படும் நீர் லீற்றர்களின் அளவு** | **நாள் ஒன்றுக்கு தேவையான நீரின் அளவு (கன மீற்றர்)** |
|---|---|---|---|
| **வதிவிட** | 162,729 | 172 | 27,989 |
| **குடி பெயரும்** | 75,000 | 100 | 7,500 |
| **மொத்தம்** | | | **35,489** |

மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

ஆயினும் திட்டமிடல் பிரதேச மக்களில் 50% வீதத்திற்கும் அதிகமானோர் தமது நீர்த் தேவைப்பாட்டை கிணற்று நீர் மூலம் நிறைவு செய்து கொள்ளல் காரணமாக தற்போதுள்ள நீர்த் திட்டங்களைப் பயன்படுத்துவதற்கான நாளாந்த நீர்த் தேவைப்பாடு 15,000 கன மீற்றர்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது.

மேலும் லபுகம நீர்த்தேக்கம், கலட்டுவான நீர்த்தேக்கத்தின் ஒரு பகுதி திட்டமிடல் பிரதேசத்தில் அமைந்துள்ளது. லபுகம மற்றும் கலட்டுவான நீரத்தேக்கங்களின் நீர் கொள்ளளவு 59,000 கன மீற்றர்கள் ஆவதுடன் நாளாந்தம் சுத்திகரிக்கப்படும் சுமார் 44,000 கன மீற்றர் நீரை உற்பத்தி செய்யக் கூடிய ஆற்றல் காணப்படுகிறது. (பின் இணைப்பு 05) மேலும் கலட்டுவான நீர்த்தேக்கத்தின் நீர் கொள்ளளவு 91,000 கன மீற்றர்கள் என்பதுடன் அந்த நீர்த்தேக்கத்தின் சுத்திகரிப்பு நிலையத்தினால் நாளாந்தம் சுமார் 83,000 கன மீற்றர் நீர் உற்பத்தி செய்யப்படுகிறது. மேலும் கொஸ்கம நகரத்தில் அமைந்துள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் 2,750 நீர் அயலளவு காணப்படுவதுடன் நாளாந்தம் 1,100 கன மீற்றர் நீர் உற்பத்தி செய்யப்படுகிறது. (மூலம் : தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு சபை)

இந்த நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் மூலம் சீதாவக்க அதிகாரப் பிரதேசத்தின் நீர்த் தேவைப்பாடு போன்றே கொழும்பு, பத்தரமுல்ல, கடுவெல, ஜல்தர ஆகிய பிரதேசங்களுக்கும் நீர் வழங்கப்படுகிறது. இதன் பிரகாரம் தற்போது திட்டமிடல் பிரதேசத்தில் குடி நீர் பெற்றுக் கொள்வதில் பிரச்சினைகள் எதுவும் காணப்படவில்லை என்ற முடிவிற்கு வர முடியும்.

மேல் மாகான மாநகர திட்டமிடலின் (2013) பிரிவு VI இற்கு அமைய திட்டமிடல் பிரதேசத்திற்குச் சொந்தமான ஹங்வெல்ல பிரதேச செயலகப் பிரிவில் காணப்படும் 54 கிராம உத்தியோகத்தர்

பிரிவுகளுக்கும் கொஸ்கம நீர் சுத்திகரிப்பு நிலையம், லபுகம நீர் சுத்திகரிப்பு நிலையம் ஆகியவற்றின் மூலம் 2040 ஆம் ஆண்டு வரை நீர் வழங்கக் கூடிய ஆற்றல் காணப்படுகிறது.

மேலும் பாதுக்க பிரதேச செயலகப் பிரிவில் காணப்படும் 36 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கும் வகையில் லபுகம மற்றும் கலட்டுவான சுத்திகரிப்பு நிலையங்களின் மூலம் 2040 ஆம் ஆண்டு வரை நீரை வழங்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் 2030 ஆம் ஆண்டுக்குத் தேவையான 15,000 கன மீற்றர் மேலதிக நீரைப் பெற்றுக் கொள்ளக் கூடிய ஆற்றல் காணப்படுகிறது.

அதன் பிரகாரம் 2030 ஆம் ஆண்டளவில் அதிகரிக்கும் சனத்தொகைக்குத் தேவையான குடிநீர்த் தேவைப்பாடு சுமார் 49,000 கன மீற்றர்களாக காணப்படும் என கீழே உள்ள அட்டவணை மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு சபையினால் அந்த நீர்த் தேவைப்பாடு பூர்த்தி செய்யப்பட வேண்டி உள்ளது.

***அட்டவணை இலக்கம் 6. 8 – சீதாவக்க திட்டமிடல் அதிகாரப் பிரதேசத்தின் குடிநீர்த் தேவைப்பாடு (2030)***

| **சனத்தொகை** | **எண்ணிக்கை** | **துனி நபர் ஒருவருக்குரிய நாளாந்த நீர் தேவைப்பாடு (நாளாந்தம் லீற்றர்)** | **தேவையான நீர் வழங்கல் (நாளாந்தம் கன மீற்றர்)** |
|---|---|---|---|
| உயிர்வாழும் சனத்தொகை- 2030 | 198,000 | 172 | 34,056 |
| குடிப்பெயர்வு சனத்தொகை- 2030 | 150,000 | 100 (கருதுகோள் கொள்ளப்பட்டது) | 15,000 |
| **தேவையான மொத்த நீர் வழங்கல்** | | | **49,056** |

மூலம் : தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு சபை (NWSDB) - (2016)

2030 ஆம் ஆண்டுக்காக எதிர்வு கூறப்பட்ட மொத்த நீர்த் தேவைப்பாட்டைப் பூர்த்தி செய்வதற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் நீர் வடிகாலமைப்பு சபையினால் 2013 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட லபுகம, கலட்டுவான சுத்திகரிப்பு நிலையங்களின் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள் மூலம் நன்மை பெறும் பிரதேசங்களுள் சீதாவக்க மற்றும் பாதுக்க பிரதேச செயலகப் பிரிவுகள் உள்ளடங்கும். மேலும் பிரதேசத்தில் காணப்படும் நீர்க் குழாய் முறைமை பரவிக் காணப்படும் விதம் வரைபட இலக்கம் 6.8 மூலம் காட்டப்பட்டுள்ளதுடன் ஹங்வெல்ல, கொஸ்கம, பாதுக்க, வக ஆகிய அனைத்து நகர பிரதேசங்களும் உள்ளடங்கும் வகையில் நீர்க் குழாய் முறைமை பரவி உள்ளமை தென்படுகிறது.

ஆயினும் பிரதேசத்தின் பிரதான பொருளாதார மார்க்கமாக வளங்கும் கருங்கல் கைத்தொழில் மற்றும் கால்நடை வளக் கைத்தொழில் மூலம் மறைமுகமாக நீர் மூலங்களக்கு பாதிப்பு ஏற்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அதற்கு மேலதிகமாக கழிவுப் பொருட்கள் மற்றும்

கால்நடைகளின் கழிவுகள் நீர் மூலங்களில் ஒன்று கலத்தல் ஆகியன கால்நடை வள கைத்தொழில் மூலம் இயற்கை நீர் மூலங்களுக்கு ஏற்படும் பாதக விளைவுகளாகக் காணப்படுகின்றன. இத் திட்டம் மூலம் நீர் வழங்களை பலப்படுத்துவதற்காக மற்றும் நீர் மூலங்களை பாதுகாப்பதற்காக பின்வரும் பிரேரணைகளை முன் வைக்க முடியும்.

1. திட்டமிடல் அதிகாரப் பிரதேசத்தின் நீரேந்து மற்றும் சூழல் கூருணர்வுப் பிரதேசங்களை விடுத்து கால்நடை வள கனிய வளங்களை (கருங்கல் உடைக்கும் கைத்தொழில்) அண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான விசேட வலயம் ஒன்று அதற்கான புதிய ஒழுங்கு விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் அக் கைத்தொழில்களின் ஊடாக இயற்கை நீர்மூலங்களுக்கு விளைவிக்கப்படும் பாதிப்பினைக் குறைப்பதற்கு இனம் காணப்பட்டுள்ளது.

2. பிரதேசத்தின் பெறுமதி வாய்ந்த நீர் மூலங்களைப் பாதுகாப்பதற்கு திட்டமிடப்பட்ட ஒரு தலையீடு அத்தியவசியமாக உள்ளதுடன் அதற்காக ஏற்புடைய உள்ளூராட்சி நிறுவனம் மறறும் மத்திய சுற்றாடல் அதிகார சபை ஆகியவற்றின் விசேட கவனம் ஈர்க்கப்படல் வேண்டும்.

3. எந்தவொரு நீர்க் குழாய் மூலமாகவும் நீர் பயன்படுத்தப்படாத மேல் ஹங்வெல்ல வடக்கு, தெற்கு வேரகொல்ல, மாபுல, இலுக் ஓவிட்ட, நிரிபொல, கிழக்கு மாவத்தகம ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரதேசங்களுக்காக தரமான குழாய் நீர் வழங்கல் மேற்கொள்வதற்கான ஆற்றல் காணப்படுகின்றனவா என கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

4. பகுதி அளவில் நகரமயமாக்கலுக்கு உட்பட்டுள்ள இப் பிரதேசத்தை சுபீட்சமானதொரு வதிவிடப் பிரதேசமாக மாற்றுவதற்கு பரிந்துரை செய்வதற்கு இனம் காணப்பட்டுள்ளதுடன் அதன் காரணமாக மழைநீர் முகாமைத்துவத்துடன் தொடர்பான மழைநீரைச் சேமித்து பயன்படுத்துவதற்கான வசதிகள் வழங்கப்படல் வேண்டும்.

***வரைபட இலக்கம் 6. 8 – குழாய் நீர் முறைமை காணப்படும் பிரதேசங்கள்***




மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

### 6.3.4 மலம் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ உபாய வழிகள்

2030 ஆம் ஆண்டு பிரதேசத்தில் வாழ்கின்ற மற்றும் குடிபெயர்ந்த சனத்தொகையினருக்குத் தேவையான நீர் வடிகாலமைப்பு மற்றும் மல வடிகாலமைப்பு முறைமை ஒன்றை அடிப்படையாகக் கொண்டு இத் திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது.

தற்போது திட்டமிடல் பிரதேசத்தில் வாழும் சனத்தொகை சுமார் 160,000 என வள வெட்டுமகத் தோற்ற அறிக்கை – 2016 இற்கு அமைய புலப்படுகிறது. உலக வங்கியின் அறிக்கைகளில் குறிப்பிடப்படுவதாவது, நகர பிரதேசத்தில் வாழும் நபர் ஒருவர் நாள் ஒன்றுக்கு 120 லீற்றர் நீரைப் பயன்படுத்துவதுடன் அதில் 80 வீதம் கழிவு நீராக வெளியேற்றுகிறார் என்பதாகும். அதன் பிரகாரம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவர் வெளியேற்றும் கழிவு நீரின் அளவு நாள் ஒன்றுக்கு 96 லீற்றர்கள் ஆகும். மேலே ஏற்றுக்கொள்ளப்பட்ட பெறுமதியின் பிரகாரம் சீதாவக்க திட்டமிடல் பிரதேசத்தில் நாள் ஒன்றுக்கு வெளியேற்றப்படும் கழிவு நீரின் அளவு (2016 – 2030) கீழே காணப்படும் அட்டவணையின் பிரகாரம் கணக்கிடப்பட்டு காட்டப்பட முடியும்.

***அட்டவணை இலக்கம் 6. 9 – சீதாவக்க திட்டமிடல் பிரதேசத்தில் நாள் ஒன்றுக்கு அகற்றப்படும் கழிவு நீரின் அளவு (2016 – 2030)***

| ஆண்டு | சனத்தொகை | நபர் ஒருவர் நாள் ஒன்றுக்கு வெளியேற்றும் கழிவு நீரின் அளவு (லீற்றர்) | மோத்த கழிவு நீரின் அளவு (கன மீற்றர்) |
|---|---|---|---|
| 2016 | 161,729 | 96 | 15,525 |
| 2030 | 198,102 | 96 | 19,017.7 |

மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2019)

மலக் கழிவகற்றல் மலக் கழிவு பௌசர் வண்டிகளைப் பயன்படுத்தி சீதாவக்க பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படுகிறது. ஆயினும் தற்போது கழிவு நீர் மற்றும் மலக் கழிவு நீரை சுத்தம் செய்யும் கருத்திட்டங்கள் சீதாவக்க பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என ஹங்வெல்ல மற்றும் பாதுக்க பிரதேச செயலகப் பிரிவுகள் ஊடாக உறுதி செய்யப்பட்டது. அதன் விளைவாக களனி கங்கை மற்றும் புஸ்ஸெலி ஓயா ஆகிய பிரதான நீர் மூலங்கள் மீது கழிவு நீர் மற்றும் மலக் கழிவு நீர் வெளியேற்றப்படுவதை அவதானிக்க முடியும். மேலே காட்டப்பட்டவாறு அதிகரிக்கும் சனத்தொகை மற்றும் நகரமயப்படுத்தலைத் தொடர்ந்து அந்த நிலைமை மென்மேலும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும் என்ற முடிவுக்கு வர முடியும்.

தற்போது ஹைலெவல் வீதி மற்றும் லோலெவல் வீதி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வர்த்தக ரீதியிலான அபிவிருத்தி ஹங்வெல்ல, பாதுக்க மற்றும் கொஸ்கம ஆகிய நகரங்களை அடிப்படையாகக் கொண்டு வியாபித்துள்ளமையால் எதிர்காலத்தில் அந்த நகரங்களில் சுபீட்சமான வதிவிட பிரதேசங்களை உருவாக்குதல் இத் திட்டத்தின் நோக்கமாக உள்ளது. அதன் பிரகாரம் கொஸ்கம, பாதுக்க, ஹங்வெல்ல மற்றும் வக ஆகிய 04 நகரங்கள் உள்ளடங்கும் வகையில் நடுத்தர அடர்த்தி கொண்ட வதிவிட வலயம் ஒன்றை தாபித்தல் மற்றும் வர்த்தக வலயங்களாக அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆகவே மேலே குறிப்பிடப்பட்ட வலயப் பிரதேசங்கள் தொடர்பில் முறையான கழிவு நீர் முகாமைத்துவ முறைமை ஒன்று தாபிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அதன் பிரகாரம் 1,466.60

ஹெக்டயார்களைக் கொண்ட ஒரு பிரதேுசத்தில் அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள நடுத்தர அடர்த்தி கொண்ட வதிவிடப் பிரதேசத்திற்காக கழிவு நீர் முகாமைத்துவ முறைமை ஒன்றை அறிமுகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக கால்நடை வள கைத்தொழில் மூலம் பாரியளவில் கழிவு நீர் உற்பத்தியாவதுடன் அது நீர் மூலங்களில் ஒன்று சேர்தல் காரணமாக பிரயோக ரீதியில் சிக்கலான ஒரு நிலைமையைத் தோற்றுவித்துள்ளது. அது தொடர்பாக கிடைக்கப் பெறும் பொதுமக்கள் முறைப்பாடுகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதுடன் அதன் காரணமாக கால்நடை வள கைத்தொழில் பரப்பிலேயே கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை தாபித்து அக் கைத்தொழில்களைக் கொண்டு நடாத்துவதற்கான புதிய ஒழுங்கு விதிகள் விதிக்கப்படல் வேண்டும் என இனம் காணப்பட்டது.

### 6.3.5 திண்மக் கழிவு முகாமைத்துவ உபாய வழிகள்

சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் ஒன்று குவிவதாக அறிக்கையிடப்பட்டுள்ள திண்மக் கழிவுகளின் அளவு சுமார் 05 – 06 டொன்கள் ஆகும். இவற்றுள் ½ - 01 இடைப்பட்ட அளவு திண்மக் கழிவுகள் மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்பட முடியுமான கழிவுகள் ஆகும். நகரங்களிலும் பிரதான வீதகளின் இரண்டு பக்கங்களிலும் உள்ள திண்மக் கழிவுப் பொருட்கள் பிரதேச சபையினால் நாளாந்தம் சேகரிக்கப்படுவதுடன் உயிர் உக்கக் கூடியவை மற்றும் மீள் சுழற்சிக்கு உட்படுத்த முடியுமானவை என 02 வகைகளாக தரம் பிரிக்கப்பட்டு சேகரிக்கும் ட்ரெக்டர் வண்டி மூலம் திண்மக் கழிவுகள் சேகரிக்கப்படுகின்றன. சீதாவக்க பிரதேச சபையில் நாளாந்தம் ஒன்று குவிக்கப்படும் திண்மக் கழிவுப் பொருட்களின் அமைப்பினை பின்வருமாறு காட்ட முடியும்.

***அட்டவணை இலக்கம் 6. 10 – சீதாவக்க பிரதேச சபையில் நாளாந்தம் ஒன்று குவியும் திண்மக் கழிவுப் பொருட்களின் அமைப்பு***

| **திண்மக் கழிவுப் பொருட்கள்** | **சதவீதம் (%)** |
|---|---:|
| 1. மரக்கரி வகைகள் | 50 |
| 2. காகிதம் | 30 |
| 3. கண்ணாடிகள் | 6.25 |
| 4. உலோகங்கள் | 1.25 |
| 5. ஏனையவை | 12.5 |
| **மொத்தம்** | **100** |

மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

மேலே குறிப்பிடப்பட்ட திண்மக் கழிவுப் பொருட்கள் மற்றும் பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட உள் வீதிகளை அண்டியதாக ஒன்று சேரும் உயிர் உக்கும் திண்மக் கழிவுப் பொருட்கள் பிரதேச சபையினால் சேகரிக்கப்படுவதில்லை என்பதுடன் ஒவ்வொரு வீட்டிற்கும் சேதனப் பசளை தொட்டிகள் வழங்கப்பட்டுள்ளமையால் அப் பிரதேசங்களில் மீள் சுழற்சி செய்ய முடியுமான திண்மக் கழிவுப் பொருட்கள் மாத்திரம் வாரத்திற்கு ஒரு முறை சேகரிக்கப்படுகிறது.

இவ்வாறு சேகரிக்கப்படும் உயிர் உக்கும் திண்மக் கழிவுப் பொருட்கள் சீதாவக்க பிரதேச சபைக்குச் சொந்தமான கொஸ்கமவில் அமைந்துள்ள சுமார் 50 பர்ச்சஸ் விஸ்தீரணமுள்ள சேதனப் பசளை வளவினுள் சேதனப் பசளை செயன்முறைக்காக பயன்படுத்தப்படுவதுடன் அதன் மூலம் மாதம் ஒன்றுக்கு 50 கிலோ கிராம் அதாவது 200 சேதனப் பசளைப் பொதிகள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. ஆயினும் தற்போதுள்ள கழிவுப் பொருள் வளவில் வரையறுக்கப்பட்ட இடவசதியே காணப்படுகிறது.

இலங்கையின் திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகார சபையினால் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நபர் ஒருவரால் நாள் ஒன்றுக்கு உற்பத்தி செய்யப்படும் திண்மக் கழிவுப் பொருட்களின் அளவு 01 – 04 கி.கிராம் வரை மாற்றமடைகின்றன. அதன் அடிப்படையில் பார்க்கும் போது பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு 2030 ஆம் ஆண்டளவில் உற்பத்தி செய்யப்படும் திண்மக் கழிவுப் பொருட்களைக் கணக்கிட முடியும்.

***அட்டவணை இலக்கம் 6. 11 – சீதாவக்க திட்டமிடல் அதிகார பிரதேசத்தில் நாளாந்தம் உற்பத்தியாகும் திண்மக் கழிவுப் பொருட்கள் (2030)***

| **ஆண்டு** | **சனத்தொகை/நாள் ஒன்றுக்கு** | **தனி நபர் ஒருவரால் உற்பத்தி செய்யப்படும் திண்மக் கழிவுப் பொருட்களின் அளவு** | **மொத்த திண்மக் கழிவுப் பொருளின் அளவு (கி.கிராம்)** |
|---|---|---|---|
| 2016 | 162, 729(வதிவிட) | 01 | 162,729 |
| 2030 | 198, 102(வதிவிட) | 01 | 198,102 |
| 2030 | 150, 000(குடிப்பெயர்) | 0.4 | 60,000 |

மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

மேற்குறித்த தரவுகளின் பிரகாரம் 2030 ஆம் ஆண்டளவில் வதிவிடங்களை அண்டியதாக உற்பத்தியாகும் திண்மக் கழிவுப் பொருட்களின் அளவு சுமார் 1.2 மடங்காக அதிகரிப்பதனை அவதானிக்க முடியும். அதற்கு மேலதிகமாக குடிபெயரும் சனத்தொகை காரணமாக அத் திண்மக் கழிவுப் பொருட்கள் அதிகரிப்பதனை அவதானிக்க முடியும். அதன் பிரகாரம் 2030 ஆம் ஆண்டளவில் நாள் ஒன்றுக்கு உற்பத்தியாகும் திண்மக் கழிவுப் பொருட்களின் அளவு 250 மெட்ரிக் டொன்களைத் தாண்டும் என்ற முடிவிற்கு வர முடியும்.

மேற்குறித்த ஆய்வுகளின் பிரகாரம் திட்டமிடல் பிரதேசத்தின் திண்மக் கழிவுப் பொருளை முகாமை செய்வது அத்தியவசியமானதாக உள்ளதென இனம் காணப்பட்டுள்ளது. ஆகவே உத்தேச திட்டங்களாக தற்போது கொஸ்கம பிரதேசத்தில் நடைமுறைப்படுத்தப்படும் சேதனப் பசளை உற்பத்தி வளவின் கொள்ளளவு எதிர்கால திட்டத்திற்கு போதுமானதாக இல்லை என்பதால் அதற்காக களுஅக்கல, சாலாவவத்த, பிரதேசத்தில் சுமார் 01 ஏக்கர் கொண்ட பிரதேசத்தில் புதிய சேதனப் பசளை உற்பத்தி வளவினை நடைமுறைப்படுத்துவதற்கு யோசனை தெரிவிக்கப்படுகிறது. அது பின்வரும் வரைபட இலக்கம் 6.9 மூலம் காட்டப்பட்டுள்ளது.

***வரைபட இலக்கம் 6. 9 – உத்தேச திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத் திட்டம் (2018 – 2030)***




மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

## 6.4 பொருளாதார அபிவிருத்தி உபாய வழிமுறைத் திட்டம்

சீதாவக்க திட்டமிடல் பிரதேசத்தில் எதிர்பார்க்கப்பட்ட நீண்டகால தொலைநோக்கினை அடைந்து கொள்வதில் அங்கு காணப்படும் அடிப்படைப் பொருளாதார சந்தர்ப்பங்கள் மற்றும் அதன் மூலமான தேசிய மற்றும் வலய ரீதியாக அடைந்து கொள்ள முடியுமான அபிவிருத்திகள் தொடர்பாக இங்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதன் போது அபிவிருத்தி திட்டம் மூலம் பொருளாதார நிலையினை அதிகரிப்பதற்காக பிரதானமாக 02 நோக்கங்களின் ஊடாக பொருளாதாரம் அபிவிருத்தியடைய வேண்டிய விதம் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது.

நோக்கம் 01 : பிரதேசத்தில் காணப்படும் விவசாயக் கைத்தொழிலை (இறப்பர், வயல், தென்னை மற்றும் கலப்பு பயிர்கள்) அண்டிய பயிர் நிலங்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

நோக்கம் 02 : புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவாகும் விவசாயத்துடன் இணைந்த விசேட கைத்தொழில் வலயம் ஒன்றை அறிமுகப்படுத்தல்.

நோக்கம் 03 : பிரதேசத்தில் காணப்படும் இயற்கை வளங்களின் நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்காக தோட்டங்களை அண்டிய செயற்பாட்டு வலயத்தை அறிமுகப்படுத்தல்.

நோக்கம் 04 : பிரதேசத்தில் காணப்படும் கால்நடை வளக் கைத்தொழிலுக்கும் வதிவிடக்காரர்களுக்கும் இடையில் மோதல்கள் ஏற்படாதவாறு பேணிச் செல்லும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளல்.

நோக்கம் 05 : புராதன அமைவிடங்கள், காடு ஒதுக்குகள், நீர் வீழ்ச்சிகள், நதிகள், நீர் அருவிகள் போன்ற பிரதேசத்தில் காணப்படும் இயற்கை வளங்களைப் பாதுகாத்து சூழல் சுற்றுலா நடவடிக்கைகளை மேம்படுத்தல்.

நோக்கம் 06 : சூழலுடன் இணைந்த கைத்தொழில்கள் மற்றும் பாதுகாப்பான வதிவிட நகரமாக மாற்றுதல்.

அதன் பிரகாரம் மேலே குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக இத் திட்டம் மூலம் இனம் காணப்பட்ட உபாய வழிமுறை செயற்பாடுகளை பின்வருமாறு விவரிக்க முடியும்.

**நோக்கம் 01 : பிரதேசத்தில் காணப்படும் விவசாயக் கைத்தொழிலை (இறப்பர், வயல், தென்னை மற்றும் கலப்பு பயிர்கள்) அண்டிய பயிர் நிலங்களைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.**

சீதாவக்க பிரதேச சபை அதிகார பிரதேசததின் முழு பூமிப் பாவனை வடிவத்தில் இறப்பர் பயிர்ச்செய்கையை அண்டிய நிலப் பகுதி 41.8%, வயல்களை அண்டிய பயிர்ச் செய்கை நிலப் பகுதி 7.6%, தென்னைப் பயிர்ச்செய்கையை அண்டிய நிலப் பகுதி 3.4% மற்றும் கலப்பு பயிர்ச்செய்கையை அண்டிய நிலப் பகுதி 2.2% என 2016 ஆம் ஆண்டு நகர அபிவிருத்தி அதிகார சபை மூலம் மேற்கொள்ளப்பட்ட பூமிப் பாவனை வடிவப் பகுப்பாய்வு மூலம் வெளிக்கொணரப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பிரதேசத்தில் காணப்படும் முக்கிய ஒரு பொருளாதார செயற்பாடாக மொத்த பூமிப் பாவனை வடிவத்தில் 55% வீதத்திற்கும் அதிகமான பெறுமதிக்கு (அட்டவணை இலக்கம் 6.12) விவசாயத் துறை பங்களிப்புச் செய்துள்ளது. ஹெக்டர் கொப்பேகடுவ ஆராய்ச்சி நிலையம் மூலம் 2017 ஆம் ஆண்டு

மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் பிரகாரம் கொழும்பு மாவட்டத்தின் மொத்த இறப்பர் பால் உற்பத்தியில் 62% சதவீதம் இத் திட்டமிடல் பிரதேசத்தின் மூலம் வழங்கப்படுவதாக தெரியவந்துள்ளது.

அந்த பயிரச் செய்கை நிலங்களைப் பாதுகாப்பதற்காக 5,375 ஹெக்டயார் பிரதேசத்தை அடர்த்தி குறைந்த வதிவிட மற்றும் நகர விவசாய வலயமாக வலயப்படுத்தல் திட்டத்தின் ஊடாக சட்டமாக்குவதற்கு இனம் காணப்பட்டுள்ளது.

*அட்டவணை இலக்கம் 6. 12 – சீதாவக்க திட்டமிடல் அதிகாரப் பிரதேசத்தின் பூமிப் பாவனை வடிவம் (2017)*

| பூமிப் பாவனை | பூமியின் அளவு (ha) | சதவீதம் (%) |
|---|---|---|
| இறப்பர் | 9327.91 | 41.8 |
| வதிவிடம் | 4945 | 22.2 |
| காடு | 3072.35 | 13.8 |
| வயல் | 1699.17 | 7.6 |
| தென்னை | 758 | 3.4 |
| கலப்பு பயிர்ச் செய்கை | 498 | 2.2 |
| பெருந்தெருக்கள் | 436.8 | 2 |
| ஈரநிலம் | 275.6 | 1.2 |
| நீர் மார்க்கம் | 243.5 | 1.1 |
| கைத்தொழில் | 211.6 | 0.9 |
| வர்த்தகம் | 195.8 | 0.9 |
| ஏனைய பயிர்ச் செய்கைகள் | 183.7 | 0.8 |
| கைவிடப்பட்ட வயல் | 63.8 | 0.3 |
| கைவிடப்பட்ட காணிகள் | 165.4 | 0.7 |
| ஏனையவை | 239.45 | 1.1 |
| முழு | 22316.5 | 100 |

மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

**நோக்கம் 02 : புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவாகும் விவசாயத்துடன் இணைந்த விசேட கைத்தொழில் வலயம் ஒன்றை அறிமுகப்படுத்தல்.**

பிரதேசத்தில் காணப்படும் விவசாயத்தை அண்டியதை கத்தொழில் நடவடிக்கைகளை மேம்படுத்தல் மற்றும் புதிய தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்காக கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கு 360.6 ஹெக்டயார் நிலப் பரப்பை விசேட அபிவிருத்தி வலயமாக இத் திட்டத்தின் மூலம் வெளியிடப்படுகிறது. அதன் பிரகாரம் 2030 ஆம் ஆண்டளவில் 10,000 இற்கும் மேற்பட்ட புதிய தொழில் வாய்ப்புக்கள் இப் பிரதேசத்தின் ஊடாக உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**நோக்கம் 03 : பிரதேசத்தில் காணப்படும் இயற்கை வளங்களின் நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்காக தோட்டங்களை அண்டிய செயற்பாட்டு வலயத்தை அறிமுகப்படுத்தல்.**

இப் பிரதேசத்தில் காணப்படும் பிரதானமான இயற்கை வளங்களுடன் இணைந்த ஒரு கைத்தொழிலாக கருங்கல் உடைக்கும் கைத்தொழிலை அறிமுகப்படுத்த முடியும். தற்போது பிரதேசத்தில் சுமார் 49 கருங்கல் உடைக்கும் கைத்தொழில்கள் தீவரமாக செயற்பட்டு வருகின்றன. அதன் மூலம் கொழும்பு மாவட்டத்தின் நிர்மாணத் துறையின் செயற்பாடுகளுக்கு கூடுதலான பங்களிப்பு வழங்கப்படுவதுடன் தேசிய ரீதியில் ஒரு முன்னணிக் கருத்திட்டமாக உள்ள துறைமுக நகர அபிவிருத்திக் கருத்திட்ட நிர்மாணப் பணிகளுக்குத் தேவையான கருங்கற்கள் திட்டமிடல் பிரதேசத்தின் கருங்கல் உடைக்கும் கைத்தொழில் ஊடாக வழங்கப்படுகிறது. புவிச் சரிதவியல் மற்றும் அகழவுப் பணியகத்தின் விதிமுறைகளுக்கு அமைய பிரதேசத்தில் காணப்படும் கருங்கற்களை அண்டிய உற்பத்திகள் மாதம் ஒன்றுக்கு 35,800 கியூபிக் மீற்றர் வரை பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் தற்போது காணப்படும் அந்த வளங்கள் தொடர்பில் அந்த நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆராய்ச்சித் தரவுகளுக்கு அமைய அந்த வளங்களை 2030 ஆம் ஆண்டுக்குப் பின்னரும் பயன்படுத்தக் கூடிய ஆற்றல் காணப்படுகிறது. (மூலம் : புவிச் சரிதவியல் மற்றும் அகழ்வுப் பணியகம் - 2019)

கருங்கல் உடைக்கும் கைத்தொழில் பிரதானமாக கஜுவத்த, தித்தெனியவத்த, குடாகந்த, நுரானிவத்த, தெல்கஸ்ஹேன மற்றும் கஹஹேன ஆகிய பிரதேசங்களை அண்டியதாக நடாத்திச் செல்லப்படுவதுடன் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் பரிந்துரை செய்யப்பட்ட வளங்களுடன் இணைந்த பொருளாதார செயற்பாடுகளை சூழல் நட்புறவுடன் இப் பிரதேசத்தில் மேற்கொள்வதற்கான சந்தர்ப்பம் இத் திட்டம் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

**நோக்கம் 04 : பிரதேசத்தில் காணப்படும் கால்நடை வளக் கைத்தொழிலுக்கும் வதிவிடக்காரர்களுக்கும் இடையில் மோதல்கள் ஏற்படாதவாறு பேணிச் செல்லும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளல்.**

கால்நடை வளக் கைத்தொழிலும் பிரதேசத்தில் பரவலாக வியாபித்துக் காணப்படுவதுடன் ஹெக்டர் கொப்பேகடுவ ஆராய்ச்சி நிலையம் மூலம் 2017 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் பிரகாரம் கொழும்பு மாவட்டத்தின் மொத்த கால்நடை வள உற்பத்தியில் 66% சதவீதம் இத் திட்டமிடல் பிரதேசத்தின் மூலம் வழங்கப்படுவதாக தெரியவந்துள்ளது.

ஆயினும் வதிவிடப் பிரதேசத்தில் இக் கைத்தொழில்கள் காணப்படுவதன் காரணமாக சூழல் மற்றும் சமூக ரீதியிலான சிக்கல் நிலைமை ஒன்றினை மக்கள் எதிர் நோக்க வேண்டி உள்ளார்கள். ஆகவே அக் கைத்தொழில்களை நடாத்திச் செல்வதை குறித்தொதுக்கப்பட்ட சுமார் 420 ஹெக்டயார் பிரதேசத்திற்கு மாத்திரம் வரையறுப்பதற்கு இனங் காணப்பட்டது. ஆகவே வலயப்படுத்தல் திட்டத்தின் கீழ் கால்நடை வளக் கைத்தொழிலை நடாத்திச் செல்வதற்காக 2030 ஆம் ஆண்டு வதிவிட அடர்த்தி குறைவான பிரதேசங்கள் இதன் பொருட்டு இனம் காணப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் கால்நடை வளக் கைத்தொழில் வலயங்களாக வடக்கு கந்துகொட, தெற்கு கந்துகொட, வெலிகன்ன, எலமலவல, வடக்கு பின்னவல போன்ற கிராம உத்தியோகத்தர் பிரதேசங்கள் இனம் காணப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் தற்போது வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வரும் பிரதான கால்நடை வளக் கைத்தொழிலுடன் ஒன்றிணைந்து அபிவிருத்தி செய்வதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. அவ்வாறே வலயப்படுத்தலின் போது அதற்கான விசேட சட்ட விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**நோக்கம் 05 : புராதன அமைவிடங்கள், காடு ஒதுக்குகள், நீர் வீழ்ச்சிகள், நதிகள், நீர் அருவிகள் போன்ற பிரதேசத்தில் காணப்படும் இயற்கை வளங்களைப் பாதுகாத்து சூழல் சுற்றுலா நடவடிக்கைகளை மேம்படுத்தல்.**

இயற்கை எழில் நிறைந்த இதமான காலநிலைப் பண்புகள் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நகரமாகக் காணப்பட்ட போதும் அவ்வாறான வாய்ப்புக்களை நிலைபேறான வகையில் பயன்படுத்துவதன் மூலம் சுற்றுலாக் கைத்தொழிலை அண்டிய வகையில் பெற்றுக் கொள்ள முடியுமான நன்மைகளை இதுவரை இப் பிரதேசம் அடைந்து கொள்வதில்லை என்பது அவதானிக்க முடியும். அதன் போது வீட்டு மற்றும் பிரதேச மட்டத்தில் சுற்றுலாக் கைத்தொழில் செயற்படுவதைத் தவிர அதன் மூலம் பொருளாதாரத்திற்கு ஒரு குறிப்பிடத்தக்க அளவு நன்மைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வழிவகைகள் சுற்றுலாக் கைத்தொழில் ஊடாக இதுவரை திறந்து விடப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆகவே பிரதேசத்தில் காணப்படும் இயற்கைச் சூழல் முறைமையினை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அமைவிடங்களை ஒன்றிணைத்து பொருளாதார நன்மைகளைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. அதன் போது சூழல் சுற்றுலா கைத்தொழில் (Eco Tourism) மீது விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் பின்வரும் உபாய வழிமுறை நோக்க இலக்கம் 01 இனம் காணப்பட்டுள்ளது.

- திகன, கொஸ்வத்த, பஞ்ஞுகுல, தும்மோதர, தம்பொர, குருலன, மேல் போப்பே ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் உள்ளடங்கிய பிரதேசங்களை சூழல் செயற்பாடுகளுடன் இணைந்த சுற்றுலா மேம்பாட்டு வலயமாக மாற்றுவதற்கு அதாவது புவக்பிட்டிய – தும்மோதர ஒடுக்கமான வீதி மற்றும் எஸ்வத்து ஓயாவை அடிப்படையாகக் கொண்ட இதிகட ஒதுக்கு, லபுகம நீர்த்தேக்க ஒதுக்கு, மீரியகல்ல ஒதுக்கு மற்றும் பாரிய இறப்பர் தோட்டங்கள் உள்ளடங்கும் வகையிலும் இயற்கை நீர் வீழ்ச்சிகளான எல்ல உட நீர்வீழ்ச்சி, குமாரி நீர்வீழ்ச்சி, ரன்முது நீர்வீழ்ச்சி மற்றும் தம்போர நீர்வீழ்ச்சி ஆகிய இயற்கைச் சூழல் முறைமைகள் உள்ளடங்கும் வகையில் 3,000 ஏக்கருக்கும் அதிகமான பிரதேசம் சூழல் பசுமைச் சுற்றாடல் பணிகளின் மேம்பாட்டுக்காக இனம் காணப்பட்டது. அதன் மூலம் சூழல் நட்புறவு சுற்றுலாப் பயணிகளின் தங்குமிடத்தினை அதற்கே உரித்தான உத்தேச சூழல் பண்புகளுக்கு அமைய அபிவிருத்தி செய்வதற்கான சந்தர்ப்பம் உருவாக்கப்பட்டுள்ளதுடன் சுற்றுலா நடவடிக்கைகளைக் கவரக் கூடிய விதமான 'கேபல் கார்' கருத்திட்டம், நீர்த்தேக்கங்களை அண்டிய பொழுதுபோக்கு நடவடிக்கைகள் மற்றும் இயற்கையினை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு அம்சங்களைக் கொண்ட பொழுதுபோக்கு நடவடிக்கைகளுக்காக களனி கங்கையை அண்டிய சூழல் நட்புறவு சுற்றுலா வலயத்தில் அதிகளவு வாய்ப்புக்கள் காணப்படுவதாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் இனம் காணப்பட்டுள்ளது.

***உருவப்பட இலக்கம் 6. 7 – பிரதேசத்தில் பிரபல்யப்படுத்த முடியுமான சூழல் சுற்றுலா நடவடிக்கைகள்***



மூலம் : கூகல் இணையதளம் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

- சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான சுற்றுலா சந்தர்ப்பங்களைக் கொண்ட சூழல் மற்றும் வரலாற்று அமைவிடங்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக நவீன தகவல் மத்திய நிலையங்களை ஏற்படுத்துதல் அத்தியவசியம் என இனம் காணப்பட்டதுடன் அத் தகவல் மத்திய நிலையத்தின் ஊடாக திட்டமிடல் பிரதேசத்தில் காணப்படும் சுற்றுலாப் பெறுமதி வாய்ந்த அமைவிடங்கள் பற்றிய சரியான மதியுரையினை சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்குவதன் மூலம் சுற்றுலாப் பயணிகள் மத்தியில் இப் பிரதேசங்கள் தொடர்பாக பிரபல்யப்படுத்துவதன் ஊடாக அதிகளவிலான சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பிரகாரம் அதற்கு பொருத்தமான ஓர் இடமாக மீப்பே சந்தி இனம் காணப்பட்டது.

- ஹங்வெல்ல நகரத்தில் காணப்படும் வாய்ப்புக்களான களனி கங்கையை அடிப்படையாகக் கொண்ட ஹங்வெல்ல பழைய வார சந்தை காணப்படும் காணிக்குப் பின்புறமாக அமைந்துள்ள காணியில் சூழல் பார்வைக் கூடங்களை நிமாணித்தல் மற்றும் ஹங்வெல்ல மாற்றுப் பாதையில் களனி கங்கை காட்சி தரக் கூடிய விதத்தில் அமையப்பெற்ற உணவகங்களை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் களனி கங்கையில் இருந்து சீதாவக்க திட்டமிடல் பிரதேசத்திற்கு மாத்திரம் சொந்தமான அதி கூருணர்வு சூழல் பிரதேசம் களனி கங்கையின் எல்லையில் இருந்து

சுமார் 200 மீற்றர் தூரத்தில் இனம் காணப்பட்ட ஒரே விதமாக அமையப் பெறாத அகலத்துடன் கூடிய ஓர் ஒடுக்கமான பத்தியில் அமைந்துள்ள பல்வேறு சூழல் பொழுதுபோக்கு செயற்பாடுகளைப் பிரபல்யப்படுத்துவதற்கான வாய்ப்பினை வழங்குகிறது.

**உருவப்பட இலக்கம் 6. 8 - களனி கங்கையை அண்டிய பிரதேசத்தில் பிரபல்யப்படுத்த முடியுமான ஓய்வு மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகள்**



மூலம் : கூகல் இணையதளம் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

- பிரதேசத்தின் நதிகளை அண்டியதாக காணப்படும் பாரம்பரியக் கைத்தொழில்களான கித்துல் கைத்தொழில், புல் கைத்தொழில், மட்பாண்டக் கைத்தொழில் போன்ற பாரம்பரியக் கைத்தொழில்கள் சுற்றுலாக் கைத்தொழிலுடன் ஒன்றிணைக்கப்படல் வேண்டுமென யோசனை முன் வைக்கப்பட்டுள்ளது. லபுகம நகரம் மற்றும் தும்மோதர நகரத்தில் பாதையோர வியாபார நிலையங்களை தாபிப்பதன் மூலமாக மேலே குறிப்பிடப்பட்ட சிற்றளவுக் கைத்தொழில்களை உட்சாகப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

**நோக்கம் 06 : சூழலுடன் இணைந்த கைத்தொழில்கள் மற்றும் பாதுகாப்பான வதிவிட நகரமாக மாற்றுதல்.**

பாதுக்க, ஹங்வெல்ல மற்றும் கொஸ்கம ஆகிய நகரங்கள் சேவை வர்த்தக நகர மத்திய நிலையங்களாக அபிவிருத்தி செய்வதற்காக இனம் காணப்பட்டுள்ளன.

புதிய கொஸ்கம புகையிரத வீதி, நவீனமயப்படுத்தப்பட்டு வரும் களனவெளி புகையிரதப் பாதை ஆகிய பிரதேசத்தை ஊடறுத்துச் செல்வதன் காரணமாக கொஜ்கம மற்றும் பாதுக்க ஆகிய இரண்டு நகரங்களின் பிரதான சந்திகளை மையமாகக் கொண்ட போக்குவரத்தினை அடிப்படையாகக் கொண்ட நகரங்களை ஏனைய ஊடகங்களாக அபிவிருத்தி செய்வதன் மூலம் அப் பிரதேசங்களின் வர்த்தக நடவடிக்கைகள் உருவாதல் தொடர்பாக காணப்படும் முதலீட்டு சந்தர்ப்பங்களை அதிகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக ஹங்வெல்ல நகரமானது சேவை வர்த்தக நகரமாக உத்தேசிக்கப்பட்டுவதுடன் சீதாவக்க பிரதேசத்திற்காக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி அமுக்க குறிகாட்டி, கூருணர்வு குறிகாட்டி மற்றும் அபிவிருத்திச் சந்தர்ப்ப குறிகாட்டி ஆகியவற்றை அடிப்டையாகக் கொண்டு இனம் காணப்பட்டவாறு ஹங்வெல்ல நகரத்திற்கும் ஹைலெவல் வீதிக்கும் இடையில் காணப்படும் அபிவிருத்திகளை சூழல் நட்புறவுடன் பேணிச் செல்வதற்காக ஹைலெவல் வீதியின் ஊடாக பஹத்கம சந்தியில் இருந்து களுஅக்கல வரை வியாபிப்பதற்கு இடமளிப்பதுடன் ஒழுங்கு விதிகள் மூலம் அதனை ஒழுங்குபடுத்துவதற்காக எதிர்பார்க்கப்படுகிறது. அதன் மூலம் பிரதேசத்தில் காணப்படும் வணிகப் பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் கலகெதர – ஹொரண வீதியின் இரண்டு பக்கங்களிலும் பாதுக்க நகரத்தில் இருந்து மீப்பே சந்தி வரை 0.2 கி.மீ. வரை வரிசையாக வியாபித்துக் காணப்படும் நடவடிக்கைகளுன் கூடிய ஓர் அபிவிருத்தி, களுஅக்கல - லபுகம வீதியின் இரண்டு பக்கங்களிலும் வக புகையிரத நிலையத்தில் இருந்து வெலிகன்ன சந்தி பஸ் தரிப்பிடம் வரை 2.7 கி.மீற்றர் வரை வரிசையாக வியாபித்துள்ள அபிவிருத்தி, அவிசாவெல்ல வீதியின் இரண்டு பக்கங்களிலும் சாலாவ – அகரவிட்ட சந்தியில் இருந்து கொஸ்கம சந்தி வரை 02 கி.மீ. வரை வரிசை வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பில் காணப்படும் அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பிரகாரம் மேலே குறிப்பிடப்பட்ட உபாய வழிமுறைகள் மூலமாக பிரதேசத்தின் பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்கு உத்தேசிக்கப்படுகிறது.

- திட்டமிடல் பிரதேசத்தில் வாழும் சனத்தொகையில் ஊழியப்படைக்கு உரித்தான வயதுப் பிரிவினரில் அதிகமானோர் (சுமார் 70%) பயிற்றப்படாத தொழிற்படையினராக காணப்படுவதாக விசேடமாக இனம் காணப்பட்டதுடன் தொழிற்பயிற்சி நிலையங்களின் ஊடாக பயிற்றப்படாத தொழிற்படையினரின் ஆற்றல்களை மேம்படுத்துவதன் மூலம் பிரதேசத்தின் பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்வதனை இலக்கு வைக்கப்பட்டுள்ளது. ஆகவே சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள பாதுக்க தொழிற்பயிற்சி நிலையத்தை அபிவிருத்தி செய்வதன் ஊடாக பயிற்றப்பட்ட தொழிலாளர்களை உருவாக்குவதற்கான பங்களிப்பினை வழங்க முடியும். சீதாவக்கபுர நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள உட்கட்டமைப்பு வசதிகள் வலயத்திற்காக முறைசார்ந்த பயிற்சிகளைப் பெற்ற ஊழியர்களை முதலீடு செய்ய முடியும். அந்த லவலயத்தில் தற்போது 27 துறைகளில் சுமார் 23,000 பேர் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுள்ளதுடன் ஆண் பெண் இருபாலாரும் அவர்களது விகிதாசாரத்திற்கு ஏற்ப தொழில்களில் ஈடுபட்டுள்ளார்கள். தைத்த ஆடைக் கைத்தொழில், இறப்பர் கையுரை உற்பத்திகள், இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள் போன்ற தொழில்களுக்கு பயிற்றப்பட்ட ஊழியர்களை வழங்குவுதன் மூலம் பிரதேசத்தின் பொருளாதாரத்தை வலுவூட்ட எதிர்பார்க்கப்படுகிறது.

***வரைபட இலக்கம் 6. 10 – உத்தேச பொருளாதார அபிவிருத்தி திட்டம் (2030)***




மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

## 6.5 நிலைபேறான சூழல் அபிவிருத்தி உபாய வழிகள்

சீதாவக்க அபிவிருத்தி திட்டத்தின் தொலைநோக்கிற்கு (2019 - 2030) அமைய சீதாவக்க திட்டமிடல் பிரதேசத்தை எதிர்காலத்தில் ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு பசுமை நகரமாக அபிவிருத்தி செய்தல் காணப்படுவதுடன் அதற்கு அடிப்படையாக அமையும் ஓர் அத்தியாயமாக நிலைபேறான சூழல் அபிவிருத்தி உபாய வழி அபிவிருத்தி திட்டத்தை சுட்டிக் காட்ட முடியும்.

அதன் போது நீலப் பசுமை சூழலைப் பாதுகாப்பதனை அடிப்படை நோக்கமாகக் கொண்ட ஓர் அபிவிருத்தி திட்டமாக சீதாவக்க அபிவிருத்தி திட்டத்தை அனம் காண முடியும். அதன் பிரகாரம் பிரதேசத்தில் காணப்படும் பௌதிக மற்றும் சூழல் அமைவிடம் தொடர்பாக விசேட அவதானம் செலுத்தப்பட்டு எதிர்காலத்தில் மேற்குறித்த பௌதிக மற்றும் சூழல் பிரதேசங்களைப் பாதுகாத்து நிலைபேறான அபிவிருத்தியின் பால் இட்டுச் செல்லும் விதம் தொடர்பாக இந்த உபாய வழி திட்டத்தின் மூலம் விவரிக்கப்படுகிறது.

அதன் பிரகாரம் இந்த உபாய வழிமுறைத் திட்டமிடல் மூலம் நிலைபேறான ஓர் அபிவிருத்தியை நோக்கிப் பயணிப்பதற்குத் தேவையான சூழல் பாதுகாப்பு உபாய வழிமுறைகள், நிலத் தோற்ற முகாமைத்துவம், அனர்த்த முகாமைத்துவ உபாய வழிமுறைகள், திறந்தவெளி பூமி உபாய வழிமுறை மற்றும் விவசாய உபாயவழிமுறை ஆகிய நிலைபேறான சூழல் மற்றும் அபிவிருத்தி உபாய வழிமுறைகள் தொடர்பாக இதன் கீழ் விவரிக்கப்படுகிறது. அதன் பிரகாரம் நீலப் பசுமை பிரதேசம், விவசாயப் பிரதேசம் மற்றும் ஏனைய சூழல் கூருணர்வு பிரதேசங்கள் சீதாவக்க திட்டமிடல் பிரதேசத்தின் 73% வீதத்திற்கும் மேற்பட்ட பிரதேசத்தில் காணப்படுவதுடன் அவற்றைத் தொடர்ந்தும் பாதுகாப்பதற்கான உபாய வழிமுறைகள் இத் திட்டம் மூலம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

### 6.5.1 சூழல் பாதுகாப்பு உபாய வழிமுறைகள்

உத்தேச சூழல் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் திட்டமிடல் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் ஈர நிலங்களின் பாதுகாப்பு, தற்போது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள வனப் பாதுகாப்பு மற்றும் களனி கங்கை, லபுகம, கலட்டுவான மற்றும் சுற்றாடலுடன் பிணைக்கப்பட்ட ஏனைய அதிகூடிய சூழல் கூருணர்வு வலயங்களைப் பாதுகாத்தல், சூழல் பெறுமதியுடன் கூடிய பிரதான நீர் வீழ்ச்சிகளைப் பாதுகாத்தல் ஆகியன மீது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

சீதாவக்க பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் உள்ள ஈர நிலங்கள் பெரும்பாலும் வயல் மற்றும் சதுப்பு நிலங்களை உள்ளடக்கியதாகக் காணப்படுவதுடன் மேற்கே புஸ்ஸெலி ஓயாவை எல்லையாகக் கொண்டுள்ள கிரஇம்புல, மேல் ஹங்வெல்ல வடக்கு, நிரிபொல, ஹங்வெல்ல, பஹத்கம, ஜயவீரகொட, வலவ்வத்த, முன்தான மேற்கு மற்றும் மாவத்தகம ஆகிய பிரதேசங்களில் உள்ள சதுப்பு நிலங்கள் மற்றும் பிரதேசம் பூராகப் பரவிக் காணப்படும் வயல்நிலப் பகுதிகள் அதனுள் உள்ளடங்கும். திட்டமிடல் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஈரநில வலயத்தின் 100% வீதமான பகுதி பாதுகாக்கப்படல் வேண்டுமென்பதனை இனம் காண முடியும்.

சூழல் அபிவிருத்தி உபாய வழிமுறைத் திட்டமிடலின் கீழ் களனி கங்கையை அண்டிய கங்கை ஒதுக்கு மற்றும் புஸ்ஸெலி ஓயா, வக் ஓயா மற்றும் எஸ்வத்து ஓயாவை அண்டிய ஏற்புடைய கங்கை ஒதுக்குகள்

மாற்றமின்றி பாதுகாக்கப்படல் வேண்டுமென யோசனை தெரிவிக்கப்பட்டுகிறது. களனி கங்கையை அண்டிய சூழல் நட்புறவு செயற்பாட்டு வலயத்தில் சூழல் நட்புறவுடனான ஓய்வு மற்றும் பொழுதுபோக்கு நடவடிக்கைகளை பேணிச் செல்வதற்குத் தேவையான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே எஸ்வத்து ஓயாவை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள மனோரம்மியமான நீர் வீழ்ச்சிகளாகக் காணப்படும் எல்ல உட எல்ல, குமாரி எல்ல, ரன்முது எல்ல ஆகிய பிரதான மூன்று நீர் வீழ்ச்சிகளும் அதற்கு மேலதிகமாக உள்ள ஏனைய சிறிய நீர் வீழ்ச்சிகளும் பாதுகாக்கப்பட வேண்டுமென யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

களனி கங்கை, எஸ்வத்து ஓயா மற்றும் ஏனைய நீர் மார்க்கங்களை அடிப்படையாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் சுற்றுலா மேம்பாட்டு நடவடிக்கைகள் சூழல் நட்புறவு அமைப்பினைக் கொண்டு அமையப் பெற வேண்டுமென யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் பராவ உள்ளிட்ட ஈரநில பூங்காக்களின் பாதுகாப்பு உபாய வழிமுறைகளின் ஊடாக மேம்படுத்தப்பட வேண்டுமென யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் சூழலைப் பாதுகாப்பதற்காக இத் திட்டத்தின் மூலம் சூழல் நட்புறவு செயற்பாட்டு வலயம், அடர்த்தி குறைந்த வதிவிட மற்றும் நகர விவசாய வலயம், சூழல் பாதுகாப்பு வலயம் என அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் திட்டமிடல் பிரதேசத்தின் பௌதிக எல்லைகளாகக் காணப்படும் மற்றும் அதி கூருணர்வு சூழல் முறைமையினை உருவாக்குவதற்கு ஏதுவாயமைந்துள்ள களனி கங்கை ஒதுக்கு, புஸ்ஸெலி ஓயாவை அண்டிய பிரதேசத்தில் பரவிக் காணப்படும் பிரதான 02 நீர் மார்க்கங்களாகக் காணப்படும் எஸ்வத்து ஓயா மற்றும் வக் ஓயா கங்கை ஒதுக்கு பாதுகாக்கப்பட வேண்டுமென இனம் காணப்பட்டது. தற்போது கங்கை ஒதுக்குகளை அண்டியதாக மேற்கொள்ளப்படும் மணல் அகழ்வு மற்றும் சட்ட ரீதியற்ற நிர்மாணிப்புக்களைத் தடுப்பதற்கான ஒழுங்கு விதிகள் பயன்படுத்தப்படுகின்றன.

மேல் மாகாண ஈரநில முகாமைத்துவ திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஈர நிலத்தின் பாதுகாப்பிற்கான ஒழுங்கு விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன் அந்த ஒழுங்கு விதிகள் மற்றும் சூழல் பாதுகாப்பின் போது பேணப்பட வேண்டிய பொதுவான நிபந்தனைகள், சட்ட ஒழுங்கு விதிகள் போன்றன தொடர்பில் இந்த அபிவிருத்தி திட்டத்தின் இரண்டாம் பிரிவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

***வரைபட இலக்கம் 6. 11 - ஈரநில முகாமைத்துவ திட்டம்***




மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

### 6.5.2 நிலத்தோற்ற முகாமைத்துவ உபாய வழிமுறைகள்

உக்கல மலைத்தொடர், நிக்கபா மலை மற்றும் வீதியகல மலைத்தொடர், கூரகல மலைத்தொடர் ஆகியவற்றுக்கு நடுவே தனித்துவமான நிலத்தோற்றப் பண்புகளை உள்ளடக்கியதாக இப் பிரதேசத்தின் நிலைபேறான சூழல் அபிவிருத்தியினைப் பேணிச் செல்லும் எதிர்பார்ப்புடன் நிலத்தோற்ற முகாமைத்துவத் திட்டம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் மூலம் பிரதேசத்திற்கே உரித்தான நீர் மற்றும் பசுமைப் போர்வை, வரலாற்று சிறப்பு வாய்ந்த மற்றும் கலாசார இடங்களைத் தொடர்ந்தும் பாதுகாப்பதற்கான யோசனை முன் வைக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இனம் காணப்பட்ட நீர் மார்க்கங்கள் மற்றும் தாழ் நிலங்களை அடிப்படையாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் நடைபாதை மேம்பாடு, மஹபொரகொட குளத்தின் நிலத்தோற்ற அபிவிருத்திக் கருத்திட்டம், பசுமைப் பிரவேச வீதி அபிவிருத்தி ஆகியவற்றின் மூலம் நிலத்தோற்றத்தை உயர்வடையச் செய்வதனை அறிமுகப்படுத்துவதற்கு இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. (அட்டவணை இலக்கம் 6.13)

அவ்வாறே சுற்றுலா மேம்பாட்டு வலயத்தில் உத்தேச நிர்மாணிப்புக்களுக்காக இனம் காணப்பட்ட சூழல் நட்புறவு கட்டமைப்புக்களை அறிமுகம் செய்தல், முறையான மழைநீர் வடிகான முறைமையுடன் பிரவேச வீதியியன் இரு புறங்களிலும் பசுமை நடைபாதைகளை நிர்மாணிப்பதன் ஊடாக தற்போதுள்ள பிரச்சினைகளைக் குறைத்து நிலத்தோற்றத்தை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

***அட்டவணை இலக்கம் 6. 13 - சீதாவக்க திட்டமிடல் பிரதேசத்தில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பசுமைப் பிரவேச நுழைவாயில்***

| பிரவேச வீதி | நிலத்தோற்றத்தை அதிகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வீதியின் பாகம் | நீளம் (.கி.மீ) |
|---|---|---|
| ஹைலெவல் வீதி | கலகெதர பாலத்தில் இருந்து கலகெதர சந்தி வரை | 1.2 |
| லோலெவல் வீதி | லோலெவல் வீதி, புஸ்ஸெலி ஓயா ஆகியன சந்திக்கும் இடத்தில் இருந்து தற்போதைய மாற்றுப் பாதை வரை | 1.3 |
| அவிசாவெல்ல வீதி | புவக்பிட்டிய புகையிரத நிலையத்தில் இருந்து அவிசாவெல்ல நகரத்தை நோக்கி | 0.5 |

மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

அதன் பிரகாரம் கொழும்பு நகரத்தில் இருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகளைக் கவர்தல் மற்றும் அவர்களின் வசதி கருதி திட்டமிடல் பிரவேசத்திற்குள் பிரவேசிக்கும் மற்றும் வெளியேறும் வீதிகளில் காணப்படும் முறையற்ற நிர்மாணிப்புக்களை அகற்றி முறையாக பசுமைப்படுத்தப்பட்ட நிலத்தோற்றத்தைக் கொண்ட நுழைவாயிலாக அபிவிருத்தி செய்யப்படல் வேண்டுமென இனம் காணப்பட்டுள்ளது. கொழும்பு - இரத்தினபுரி பிரதான வீதியில் கொழும்பில் இருந்து சீதாவக்க பிரதேசத்திற்குள் பிரவேசிக்கும் இடம் மற்றும் இரத்தினபுரியில் இருந்து வரும் போது சீதாவக்க பிரதேசத்திற்குள் பிரவேசிக்கும் இடம், கலகெதர பாலத்தில் இருந்து கலகெதர சந்தி வரை லோலெவல் வீதி, புஸ்ஸெலி ஓயா ஆகியன சந்திக்கும் இடத்தில் இருந்து தற்போதைய மாற்று வீதி வரை, புவக்பிட்டிய புகையிரத நிலையத்தில் இருந்து அவிசாவெல்ல நகரப் பக்கமாக அமைந்துள்ள வீதியில் பசுமைப் பிரவேச நுழைவாயில்கள் தாபிக்கப்படல் பொருத்தமாகும் என இனம் காணப்பட்டுள்ளது. உத்தேச பசுமைப் பிரவேச நுழைவாயில் மாதிரி கீழே காணப்படும் வரைபடம் மூலம் காட்டப்பட்டுள்ளது.

***வரைபட இலக்கம் 6. 12 – பிரவேச நுழைவாயில் மாதிரி மற்றும் தாபிக்கப்பட வேண்டிய இடங்கள்***




**ஒரு நுழைவாயில் படிவம் மற்றும் அமைக்க வேண்டிய இடங்கள்**

மூலம்: - நகர அபிவிருத்தி அதிகார சபை

0 0.5 1 2 3 கி.மீ.

நகர அபிவிருத்தி அதிகார சபை

ஜனவரி 2019

மேல் மாகாண பிரிவு | சீதாவக்க அபிவிருத்தி திட்டம் (2019 - 2030) | தயாரிப்பு: மேல் மாகாண அலுவலகம

மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

***வரைபட இலக்கம் 6. 13 – உத்தேச நிலத்தோற்ற திட்டம் (2030)***




மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

### 6.5.3 அனர்த்த முகாமைத்துவ உபாய வழிமுறைகள்

சீதாவக்க பிரதேச சபை அதிகார பிரதேசம், வடக்கு எல்லையில் பாயும் களனி கங்கையினைப் பிரதானமாகக் கொண்ட வக் ஓயா, புஸ்ஸெலி ஓயா மற்றும் அந்த நீர் மார்க்கங்களுக்கு பங்களிப்புச் செய்யும் சிறிய வாய்க்கால்களை உள்ளடக்கிய இயற்கை நீர்வடிகாலமைப்பு வடிவத்தைக் கொண்டு அமைந்துள்ளதுடன் வடக்கே உள்ள அருக்வன ஓயா, அங்கமுவ ஓயா, எலிகே ஓயா மற்றும் மாவக் ஓயா ஆகியன முக்கியம் பெறுகின்றன. அவ்வாறே பிரதேசத்தின் இயற்கை சூழல் முறைமை தாழ் நிலங்கள், நீர்த்தேக்கங்கள் (லபுகம மற்றும் கலட்டுவான), நீர் வீழ்ச்சிகள், வாய்க்கால்கள், நதிகள், பாரியளவு பயிர்ச் செய்கைகள், ஒதுக்குக் காடுகள் மற்றும் ஈர வலய பூங்காக்கள் ஆகியவற்றை உள்ளடக்கி உள்ளது.

பருவப்பெயர்ச்சி மழைக் காலங்களில் பெரும்பாலும் களனி கங்கை, புஸ்ஸெலி ஓயா மற்றும் வக் ஓயா ஆகியன பெருக்கெடுப்பதன் காரணமாக பிரதேச சபை எல்லையிலும் அதற்கு வெளியிலும் திடீர் வெள்ள நிலைமை ஏற்பட்டு மக்களது அன்றாட வாழ்வு பாதிப்பிற்கு உள்ளாகிறது.

இந்த வெள்ள நிலைமைக்குரிய காரணமாக நீர் வழிந்தோடுவதற்கான வடிகான் முறைமை தடைப்படும் விதமாக நிர்மாணிக்கப்பட்டுள்ள சட்ட ரீதியற்ற நிர்மாணிப்புக்கள், சட்ட ரீதியற்ற விதமாக தாழ் நிலங்கள் நிரப்பப்படல், ஒதுக்குப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் சட்ட ரீதியற்ற நிர்மாணிப்புக்கள் மற்றும் முறையற்ற விதத்தில் மணல் அகழ்வதனால் ஆற்றோரம் உடைந்து விழுதல் காரணமாக களனி கங்கையின் அகலம் அதிகரித்தல் ஆகிய விடயங்களைக் குறிப்பிட முடியும். அப் பிரச்சினைகளைக் குறைத்துக் கொள்வதற்காக கீழே குறிப்பிடப்படும் யோசனைகள் இனம் காணப்பட்டுள்ளது. இது தொடர்பாக சீதாவக்க பிரதேச சபை விசேட கவனம் செலுத்துதல் வேண்டும்.

- களனி கங்கை, வக் ஓயா, புஸ்ஸெலி ஓயா மற்றும் அருக் ஓயா நீர் மார்க்க முறைமையின் ஒதுக்குப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சட்ட ரீதியற்ற அனைத்து நிர்மாணிப்புக்களையும் அகற்றுதல் மற்றும் மீண்டும் நிர்மாணிப்புக்களை மேற்கொள்ள முடியாத வகையிலான ஒழுங்கு விதிகளை அறிமுகம் செய்தல்.

- தற்போது வெள்ள அபாயம் நிலவும் 39 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ள சுமார் 75 கி.மீ நீளம் கொண்ட நீர் மார்க்கம் காணப்படுவதுடன் இந்த நீர் மார்க்க பிரதேசங்கள் தடைப்பட்டுக் காணப்படும் பிரதேசங்களை விசேடமாக சுத்தம் செய்தல், பராமரித்தல்.

- வெள்ள அபாயத்திற்கு பிரதானமாக ஆளாகும் ஒரு நகரமாக ஹங்வெல்ல நகரம் இனம் காணப்பட்டுள்ளதுடன் அதற்காக நகரத்தில் உள்ள நீர் வழிந்தோடும் வடிகான் முறைமையினை அபிவிருத்தி செய்தல், தடைப்பட்டுள்ள இடங்களை விரிவுபடுத்தி அபிவிருத்தி செய்தல்.

- மேலும் களனி கங்கையை அடிப்படையாகக் கொண்ட நீரில் மூழ்கும் பிரதேசத்தில் நிரந்தர கட்டடங்களுக்கு இடமளிப்பதற்கான வாய்ப்புக்களை வழங்காதிருப்பதற்கான ஒழுங்கு விதிகளை அறிமுகப்படுத்ததல்.

- வெள்ள அபாயத்தை ஏற்படுத்தும் பிரதேசங்களை வலயப்படுத்தும் போது களனி கங்கையின் 60 மீற்றர் வெள்ள நீரைத் தேக்கி வைப்பதற்கான கொள்ளளவைப் பூர்த்தி செய்வதற்கும் ஓய்வு மற்றும் பொழுது போக்கு வசதிகளை வழங்குவதற்கும் கங்கை ஒதுக்கில் இருந்து 200 மீற்றர் திறந்த வெளியினை நதிக்கு சமாந்தரமாக அபிவிருத்தி செய்தல்.

### 6.5.4 பொது திறந்தவெளி பொழுதுபோக்கு நடவடிக்கைகள் தொடர்பான அவகாச உபாய வழிமுறைகள்

ஒவ்வொரு தனிநபரதும் உடல் ரீதியான மற்றும் மனோ ரீதியிலான அபிவிருத்தியின் தரத்தினை கட்டியெழுப்புவதில் பொது திறந்தவெளி பொழுதுபோக்கு நடவடிக்கைகள் முக்கியத்துவம் பெறுவதுடன் அபிவிருத்தி திட்டங்களைத் தயாரிக்கும் போது பொதுத் திறந்தவெளி நடவடிக்கைகள் தொடர்பான அவகாச உபாய வழிமுறைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டமிடல் தரங்களுக்கு அமைய பொதுத் திறந்தவெளி பொழுதுபோக்கு நடவடிக்கைகள் தொடர்பான அவகாச திட்டத்தை தயாரிக்கும் போது குறைந்த பட்சம் 1,000 சனத்தொகைக்கு ஆகக் குறைந்தது 1.4 ஹெக்டயார் திறந்தவெளி அவகாசம் ஓதுக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

நேரடி மற்றும் மறைமுக பொழுது போக்கு வசதிகளாக 02 பிரதான மூலக்கூறுகளின் கீழ் பொழுது போக்கு வசதிகள் நோக்கப்படுகிறது. சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் நேரடி மற்றும் பொழுது போக்கு வசதிகளைப் பூர்த்தி செய்ய முடியுமான ஒருசில இடங்கள் காணப்படுவதுடன் அந்த இடங்கள் தொடர்பான விபரங்களை பின்வரும் அட்டவணை இலக்கம் 6.14 மூலம் காட்ட முடியும்.

***அட்டவணை இலக்கம் 6. 14 – தற்போதுள்ள விளையாட்டு மைதானங்கள் மற்றும் திறந்தவெளிகள்***

| தொடர் இலக்கம் | திறந்தவெளியின் பெயர் | அளவு (ஹெக்) |
|---|---|---|
| **1.** | கொடிகாரகே ஓவிட்ட | 1.0 |
| **2.** | பாதுக்க விளையாட்டு மைதானம் | 1.5 |
| **3.** | பிரண்டிகம்பல விளையாட்டு மைதானம் | 0.3 |
| **4.** | நெலுவன்துடுவ விளையாட்டு மைதானம் | 0.7 |
| **5.** | கொஸ்கம டெனீ விஜேசுந்தர விளையாட்டு மைதானம் | 0.6 |
| **6.** | சாலாவ விளையாட்டு மைதானம் | 0.3 |
| **7.** | 10% வீத திறந்தவெளிக் காணி மொத்தம் | 10.0 |
| | **மொத்தம்** | **14.48** |

மூலம் : சீதாவக்க பிரதேச சபை மற்றும் கள ஆய்வுத் தரவுகள் (2017)

மேற்குறித்த தகவல்களின் பிரகாரம் சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் தற்போது 14.48 ஹெக்டயார் திறந்த வெளிகளாகக் காணப்படுகிறது. சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் 2016 ஆம் ஆண்டு காணப்படும் சனத்தொகை 162,729 ஆகும். அதன் பிரகாரம் அந்த

சனத்தொகையினருக்காக சுமார் 221,6 ஹெக்டயார் திறந்தவெளிப் பிரதேசம் ஒதுக்கப்படல் வேண்டும். ஆயினும் தற்போதுள்ள சனத்தொகைக்கு போதுமான அளவு வசதிகளுடன் அபிவிருத்தி செய்யப்பட்ட பொதுத் திறந்தவெளிப் பிரதேசங்கள் சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படவில்லை. தற்போது சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் காணபபடும் மறைமுகமான பொழுது போக்கு வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியுமான இடங்கள் பற்றி பின் இணைப்பு இலக்கம் 06 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

உத்தேச பொதுத் திறந்தவெளி பொழுது போக்கு நடவடிக்பைகள் தொடர்பான அவகாச திட்டமிடல் (2019 - 2030) இற்கு அமைய 2030 ஆம் ஆண்டளவில் சீதாவக்க பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தின் வதிவிட சனத்தொகை 198,102 வரை அதிகரிக்க கூடும் என எதிர்வு கூற முடியும் என்பதுடன் அதன் பிரகாரம் 2030 ஆம் ஆண்டளவில் பொது திறந்தவெளிகளாக சுமார் 277.34 ஹெக்டயார் பரப்பளவு காணி ஒதுக்கப்படல் வேண்டும்.

தற்போதுள்ள நிலத்தோற்றம் அபிவிருத்தி அடைந்துள்ள மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் அவகாசங்களுக்கு அமைய உத்தேச பொது திறந்தவெளி பொழுது போக்கு நடவடிக்கைகள் தொடர்பான உத்தேச உபாய வழிமுறைகளைப் பின்வருமாறு காட்ட முடியும்.

1. தற்போது காணப்படும் அனைத்து விளையாட்டு மைதானங்கள் மற்றும் விளையாட முடியுமான மற்றும் பொது திறந்தவெளிப் பிரதேசங்களாக உள்ள வெற்றுக் காணிகளை முடிந்தளவு தூரம் பயன்பாட்டிற்கு எடுக்கக் கூடியவாறு பாதுகாத்தல்.

   வேண்டும். அது தொடர்பாக தகைமை உள்ள நபர்களின் வழிகாட்டலின் கீல் உரிய நிலத்தோற்ற திட்டமிடலுக்கு அமைவாக தற்போது காணப்படும் பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்தல் தொடர்பாக ஏற்புடைய உள்ளூராட்சி நிறுவனங்கள் கவனம் செலுத்த வேண்டி உள்ளதுடன் காணி பிரிப்புக்கள் மூலம் பெற்றுக் கொள்ள முடியுமான 10% நிலப் பகுதி மிகவும் சிறிய பூங்காவாக *(Mini Parks)* அபிவிருத்தி செய்தல்.

2. தாழ் நிலங்கள் மற்றும் வாய்க்கால் ஒதுக்குப் பிரதேசங்களை சூழல் நட்புறவான விதத்தில் பூங்காக்கள் மற்றும் நிரல் பூங்காக்களாக புனரமைத்தல்.

3. திறந்தவெளிப் பிரதேசங்கள் தொடர்பான சட்ட ஒழுங்கு விதிகள் நடைமுறைப்படுத்தல்.

உத்தேச திறந்தவெளி பொழுது போக்கு நடவடிக்கைகள் தொடர்பான அவகாச திட்டமிடலின் பிரகாரம் கீழே குறிப்பிடப்படும் விதத்தில் பூங்கா வகைப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் (அட்டவணை இலக்கம் 6.15) அவ்வந்த கிராம உத்தியோகத்தர் பிரிவில் அடையாளம் காணப்பட்டுள்ள பூங்காக்கள் அட்டவணை இலக்கம் 6.16 மற்றும் வரைபட இலக்கம் 6.14 மூலம் விவரிக்கப்பட்டுள்ளதுடன் பூங்கா வகைப்படுத்தல்களில் அனுமதி வழங்கப்பட்ட செயற்பாடுகள் இணைப்பு இலக்கம் 07 ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

***அட்டவணை இலக்கம் 6. 15 – சீதாவக்க திட்டமிடல் பிரதேசத்தின் உத்தேச திறந்தவெளி அவகாசம்***

| இலக்கம் | பூங்காக்களின் வகை | அளவு (ஹெக்) |
|---|---|---|
| **1.** | அண்மைய பூங்கா | 16.45 |
| **2.** | மக்கள் பூங்கா | 7.8 |
| **3.** | நிரல் பூங்கா | 195 |
| **4.** | ஈர நிலப் பூங்கா | 234 |
| **5.** | தற்போதுள்ள பொது திறந்தவெளி பொழுதுபோக்கு அவகாசம் | 14.48 |
| | **முழு மொத்தம்** | **467.73** |

மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

***அட்டவணை இலக்கம் 6. 16 – பூங்கா வகைப்படுத்தல்***

| வகை | அளவு (ஹெக்டயார்) | தற்போதைய பாவனை | உத்தேச பாவனை | கிராம உத்தியோகத்தர் பிரிவு |
|---|---|---|---|---|
| அண்மைய பூங்கா | | | | |
| **LP1** | 2.158 | பயிர் நிலம் | அண்மைய பூங்கா | பின்னவல வடக்கு |
| **LP2** | 1.779 | தெங்கு பயிர்ச் செய்கை | அண்மைய பூங்கா | முலகல |
| **LP3** | 2.186 | தெங்கு பயிர்ச் செய்கை | அண்மைய பூங்கா | நெலுவத்துடாவ |
| **LP4** | 2.143 | தெங்கு பயிர்ச் செய்கை | அண்மைய பூங்கா | உடுமுல்ல |
| **LP5** | 2.730 | கலப்பு பயிர்ச் செய்கை | அண்மைய பூங்கா | வெலிகந்த |
| **LP6** | 2.56 | கலப்பு பயிர்ச் செய்கை | அண்மைய பூங்கா | நிரிபொல |
| **LP7** | 1.65 | பயிர் நிலம் | அண்மைய பூங்கா | பொலத்தாவ |
| **LP8** | 1.226 | தெங்கு பயிர்ச் செய்கை | அண்மைய பூங்கா | எஸ்வத்த வடக்கு |
| **மொத்தம்** | **16.45** | | | |
| பிரதேச பூங்கா | | | | |
| **CP1** | 4.17 | முற்புதர்கள் | பிரதேச பூங்கா | மேல் கொஸ்கம வடக்கு |
| **CP2** | 3.64 | தெங்கு பயிர்ச் செய்கை | பிரதேச பூங்கா | பஹல கெதர கிழக்கு |
| **மொத்தம்** | **7.81** | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| ஈர நில பூங்கா | | | | |
| **WP1** | 52.44 | ஈர நிலம் | ஈர நிலப் பூங்கா | கீழ் ஹங்வெல்ல, ஹங்வெல்ல நகரம் |
| **WP2** | 39.2 | ஈர நிலம் | ஈர நிலப் பூங்கா | மேல் ஹங்வெல்ல வடக்கு |
| **WP3** | 140 | ஈர நிலம் | ஈர நிலப் பூங்கா | வலவ்வத்த, ஜயவீரகொட, துன்ன மேற்கு |
| **WP4** | 3.5 | ஈர நிலம் | ஈர நிலப் பூங்கா | கீழ் ஹங்வெல்ல |
| **மொத்தம்** | **235.14** | | | |
| நிரல் பூங்கா | | | | |
| **LiP1** | 58 | புஸ்ஸெலி ஓயா ஒதுக்கு | நடைபாதை | - |
| **LiP2** | 24 | வக் ஓயா ஒதுக்கு | நடைபாதை | - |
| **LiP3** | 113 | களனி கங்கை ஒதுக்கு | நடைபாதை | - |
| மொத்தம் | **195** | | | |

மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை (2018)

***வரைபட இலக்கம் 6. 14 – உத்தேச பொது திறந்தவெளி பொழுதுபோக்கு நடவடிக்கைகள் தொடர்பான அவகாச திட்டம் (2019 – 2030)***




**பொது திறந்த பொழுதுபோக்கு இடம் திட்டம்-2030**

மூலம்: - நகர அபிவிருத்தி அதிகார சபை

0 0.5 1 2 3 கி.மீ.

நகர அபிவிருத்தி அதிகார சபை

ஜனவரி 2019

மேல் மாகாண பிரிவு | சீதாவக்க அபிவிருத்தி திட்டம் (2019 - 2030) | தயாரிப்பு: மேல் மாகாண அலுவலகம்

மூலம் : நகர அபிவிருத்தி அதிகார சபை

## 6.6 கலாசார மற்றும் மத ரீதியில் பெறுமதி வாய்ந்த இடங்களை முகாமை செய்யும் உபாய வழிமுறை

வரலாற்று ரீதியான மற்றும் கலாசார முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் இந்த அதிகாரப் பிரதேுசத்தில் அமைந்துள்ளதுடன் 16 ஆம் நூற்றாண்டில் சீதாவக்க ராசதானியின் இருப்பும் அதனைத் தொடர்ந்து போர்த்துக்கள், ஒல்லாந்தர்கள் மற்றும் ஆங்கிலேயரின் காலனித்துவ ஆட்சிக்கு உட்டபட்டிருந்த இப் பிரதேசத்தில் தற்போதும் கூட முன்னைய கல ஆட்சியின் தாக்கங்களின் இடிபாடுகளைக் காண முடியும். தொல்பொருளியல் திணைக்களத்தினால் இனம் காணப்பட்ட பாதுகாக்கப்பட்ட மற்றும் இதுவரை பாதுகாக்கப்படாத பல இடங்கள் இப் பெறுமை மிகு வரலாற்றுச் சான்றுகளாக காணப்படுவதுடன் பிரதேசத்தில் காணப்படும் தொல்பொருள் பெறுமதி வாய்ந்த இடங்கள் ஐந்தாம் அத்தியாயத்தில் அட்டவணை இலக்கம் 5.2 மூலம் காட்டப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் கலாசார மற்றும் தொல்பொருளியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் தொல்பொருளியல் திணைக்களம் மற்றும் கலாசார திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழான பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இத் திட்டம் மூலம் யோசனை முன்வைக்கப்படுவதுடன் சுற்றுலாக் கைத்தொழிலை அடிப்படையாகக் கொண்டு இடம்பெறும் அபிவிருத்திச் செயன்முறைகளுக்கு அதன் மூலமான பங்களிப்பினைப் பெற்றுக் கொள்ள எதிர்பாரக்கப்படுகிறது. தும்மோதரையில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள சுற்றுலா நூதனசாலை மூலம் பிரதேசத்தில் காணப்படும் தொல்பொருளியல் இடங்கள் தொடர்பான அறிவூட்டல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## 6.7 கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான உபாய வழிமுறைத் திட்டம்

சீதாவக்க அபிவிருத்தி திட்டத்தின் (2019 – 2030) கீழ் கருத்திட்டங்களை நடைமுஜறப்படுத்துவதற்கான திட்டம் (Project Implementation Strategic Plan) தொடர்பாக கவனம் செலுத்தப்படுவதுடன் மேலே விவரிக்கப்பட்ட திட்டத்தின் உபாய வழிமுறைகளை அடைந்து கொள்வதற்காக கருத்திட்டங்கள் இனம் காணப்பட்டன. மேலும் கருத்திட்டங்களை பிரயோக ரீதியில் திட்டமிடல் பிரதேசம் உள்ளடங்கும் வகையில் நடைமுறைப்படுத்துவதற்காக 04 பிரதான நகரங்களை அடிப்படையாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதன் தேவை இனம் காணப்பட்டுள்ளது. விசேடமாக அதனை அபிவிருத்தி திட்டத்தின் மூலமாக பிரயோக ரீதியில் மற்றும் தர்க்க ரீதியில் நடைமுறைப்படுத்துவதற்காக முன்னுரிமை அடிப்படையில் அக் கருத்திட்டங்கள் பிரதான நகரங்களுக்காக வெவ்வேறாக வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

1. ஹங்வெல்ல நகர அபிவிருத்திக் கருத்திட்டம்
2. கொஸ்கம நகர அபிவிருத்திக் கருத்திட்டம்
3. பாதுக்க நகர அபிவிருத்திக் கருத்திட்டம்
4. வக, தும்மோதர நகர அபிவிருத்திக் கருத்திட்டம்

சீதாவக்க அபிவிருத்தி திட்டத்தின் (2019 – 2030) பிரகாரம் கருத்திட்டங்கள் விவரமான பகுப்பாய்வின் மூலம் இனம் காணப்பட்டன. நீண்டகால தொலை நோக்கினை அடிப்படையாகக் கொண்டு இனம் காணப்பட்ட நோக்கங்கள் தொடர்பில் பிரதேுசத்தில் காணப்படும் பலம், பலவீனம், சந்தர்ப்பங்கள் மற்றும் பயமுறுத்தல்கள் தொடர்பாக ஆய்வு செய்து விவரமான ஒரு பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் மூலம் இனம் காணப்பட்ட குறிக்கோள்களை நடைமுறைப்படுத்துவதற்காக கருத்திட்டங்கள் இனம்

காணப்பட்டதுடன் அக் கருத்திட்டங்களின் முன்னுரிமையை இனம் காண்பதற்காக கருத்திட்ட நிறையளித்தல் மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் போது 03 தொகுதிகளின் கீழ் நிறையளித்தல் மேற்கொள்ளப்பட்டது.

i. அபிவிருத்தி திட்டத்தின் நோக்கத்தின் அடிப்படையில்
ii. ஒவ்வொரு கருத்திட்டமும் ஒன்றோடொன்று தொடர்புபடும் தீவிரத் தன்மை
iii. சமூக சூழல் தாக்கத்தின் தீவிரத் தன்மை

அதன் பிரகாரம் மேலே குறிப்பிடப்பட்ட பிரதான நகரங்களுடன் பிணைக்கப்பட்ட கருத்திட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கருத்திட்டமும் முன்னுரிமை அடிப்படையில் இனம் காணப்பட்ட விதத்தினைப் பின்வருமாறு சுட்டிக்காட்ட முடியும்.

- **ஹங்வெல்ல நகர அபிவிருத்திக் கருத்திட்டம்**

1. ஹங்வெல்லையில் உள்ள மாற்று பிரவேச வீதியை அண்டியதாக நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள சுற்றுலா பசுமைக் களிப்பிடம் மற்றும் களனி கங்கையின் எல்லையில் இனம் காணப்பட்ட சூழல் பார்வைக் கூடம் மற்றும் படகுச் சேவை
2. உத்தேச ஈரநில பொழுதுபோக்கு கருத்திட்டம் மற்றும் வீதி அபிவிருத்தி
3. தற்போதுள்ள மாற்று பிரவேச வீதியை மேலும் அபிவிருத்தி செய்தல்
4. ஹங்வெல்ல இந்திய எண்ணெய்க் கம்பனிக்குச் )IOC (சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அண்மையில் அமைந்துள்ள ஹைலெவல் வீதி வரையான உத்தேச மாற்றுப் பிரவேச வீதியை அபிவிருத்தி செய்தல்.
5. ஹங்வெல்ல பஸ் நிலையம் மற்றும் வர்த்தக தொகுதி அமைந்துள்ள சதுக்கத்தை அபிவிருத்தி செய்யும் கருத்திட்டம்
6. ஹங்வெல்ல வாரசந்தை (கட்டம் II) அபிவிருத்திக் கருத்திட்டம்
7. திட்டமிடல் அதிகாரப் பிரதேசத்திற்குப் பிரவேசிக்கும் பசுமைப் பிரவேச நுழைவாயிலை நிர்மாணித்தல்
8. பராவ ஈரநிலப் பூங்கா அபிவிருத்திக் கருத்திட்டம்
9. கொஸ்கம பல்லூடக போக்குவரத்து மத்திய நிலையம்

- **கொஸ்கம நகர அபிவிருத்திக் கருத்திட்டம்**

10. திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவக் கருத்திட்டம்
11. சூலாவ நகர அபிவிருத்தி பூமியில் இருந்து கொஸ்கம வார சந்தை வரை கொழும்பு - இரத்தினபுரி வீதியின் இரண்டு பக்கங்களிலும் பசுமை பாதசாரிகள் நடைபாதை உருவாக்குதல் மற்றும் நிலத்தோற்ற அலங்காரம்
12. கொஸ்கம முதல் பாதுக்க வரையான உத்தேச பிரவேச வீதியை 13 மீற்றர் அகலம் கொண்ட மாற்று பிரவேச வீதியாக அபிவிருத்தி செய்தல்.

13. சாலாவ – அகரவிட்ட வீதியை 13 மீற்றர் வரை விஸ்தரித்து அபிவிருத்தி செய்தல்
14. கொஸ்கம நகரப் பூங்கா கருத்திட்டம்
15. சாலாவ நகர அபிவிருத்திக் கருத்திட்டம்
16. கொஸ்கம பிரதேச சபைக் கட்டடத்திணை அண்டிய வயல்வெளி எல்லை ஊடாக உடற்பயிற்சி ஓடபாதை ஒன்றை நிர்மாணித்தல்.

- **பாதுக்க நகர அபிவிருத்திக் கருத்திட்டம்**

17. பாதுக்க சுற்றுவட்ட வீதி அபிவிருத்தி
18. பாதுக்க பஸ் நிலையம் மற்றும் புகையிரத நிலையம் ஆகியவற்றை இணைக்கும் கருத்திட்டம்
19. பாதுக்க பிரதேச சபைக் கட்டடம் அமைந்துள்ள காணியில் வாகனத் தரிப்பிடம் ஒன்றை அமைத்தல்.
20. பாதுக்க பிரதேச சபைக் கட்டடம் அமைந்துள்ள சதுக்கத்தைப் புனரமைத்தல்
21. கொடகம – பாதுக்க பிரவேச வீதி ஊடாக பாதுக்க நகரத்தில் இருந்து பாதுக்க ஆதார வைத்தியசாலை வரையான பாதசாரிகள் பாதை அபிவிருத்தி
22. பாதுக்க விளையாட்டு மைதான அபிவிருத்தி
23. பாதுக்க உடற்பயிற்சி நடைபாதை அபிவிருத்திக் கருத்திட்டம், நீர் தேங்கும் பிரதேச அபிவிருத்திக் கருத்திட்டம்

- **துவக, தும்மோதர நகர அபிவிருத்திக் கருத்திட்டம்**

24. தும்மோதர பசுமைக் கல்விப் பூங்கா
25. வக பஸ் நிலையக் கருத்திட்டம்
26. வக, மஹ மொரகொட குளம் (மஹ பொரலுகொட பாடசாலைக்கு அருகாமையில் அமைந்துள்ள) பசுமை நிரல் பூங்கா அபிவிருத்தி
27. வக, தும்மோதர நகர அபிவிருத்திக் கருத்திட்டம்

## ஹங்வெல்ல நகர அபிவிருத்திக் கருத்திட்டம்

**(1)**

| **கருத்திட்டத்தை இனம் காணல்** | |
|---|---|
| **கருத்திட்ட தலைப்பு** | ஹங்வெல்ல நகர அபிவிருத்திக் கருத்திட்டம் |
| **கருத்திட்டம்** | ஹங்வெல்லையில் உள்ள மாற்று பிரவேச வீதியை அண்டியதாக நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள சுற்றுலா பசுமைக் களிப்பிடம் மற்றும் களனி கங்கையின் எல்லையில் இனம் காணப்பட்ட சூழல் பார்வைக் கூடம் மற்றும் படகுச் சேவை |
| **கருத்திட்டப் பிரேரணை** | 2030 ஆம் ஆண்டில் சீதாவக்க அதிகாரப் பிரதேசத்தை நீலப் பசுமை சுற்றுலாப் பயணிகளின் தங்குமிடமாக மாற்றியமைத்தல் நோக்கமாகக் கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பிரதேசத்திற்கு வருகை தரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான பொழுதுபோக்கு வசதிகளை வழங்குவதற்காக இந்த உத்தேச கருத்திட்டப் பிரதேசத்தில் கூடுதலான வாய்ப்புக் காணப்படுகிறது.<br><br>களனி கங்கையை அண்டிய நீரியல் சூழல் ஹங்வெல்ல நகரத்தை மிகவும் அண்மித்ததாகக் காணப்படுவதால் சுற்றுலாப் பயணிகளுக்கு இலகுவாக பிரயாணம் மேற்கொள்ள முடியுமாயுள்ளது. அதன் பிரகாரம் ஹங்வெல்ல பழைய வார சந்தை அமைந்துள்ள காணியில் பசுமைக் களிப்பிடம், சூழல் பார்வைக் கூடம் மற்றும் ஹங்வெல்லையில் இருந்து களுஅக்கல வரையான படகு சேவை ஒன்றை நடைமுறைப்படுத்த வேண்டும் என இனம் காணப்பட்டது . |

| **கருத்திட்ட அமைவிடம்** | | | | |
|---|---|---|---|---|
| **அமைவிடம்** | **மாகாணம்** | மேற்கு | **மாவட்டம்** | கொழும்பு |
| | **பிரதேச எல்லை** | ஹங்வெல்ல பிரதேச செயலகப் பிரிவு | **நிர்வாக அலகு** | சீதாவக்க பிரதேச சபை |
| **எல்லைகள்** | **வடக்கு** | **கிழக்கு** | **தெற்கு** | **மேற்கு** |
